# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

பொழிவு - 10
குவிப்பு - 07
பக்கங்கள் - 20

விலை ரூபா 25.00
ஜூலை - 2007

(ISSN 1800-2641)

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Manna Office, Pastoral Centre, St. Sebastian's St., Mannar, Sri Lanka.
Telephone No : 023-2222377/ 060-2233276, Fax No - 023 - 2222377, E-mail - nesanmn@yahoo.com


# மன்னார் மறைமாவட்டத்தின்
# இவ்வாண்டு பொன்விழா நாயகர்கள்

**துறவற வாழ்வில்**
**50 ஆண்டுகளை நிறைவுசெய்யும்**
**அருட்சகோதரர் பப்ரிஸ்ற் குரூஸ் (FSC)**

09.08.1957 – 09.08.2007



50th!

**குருத்துவ வாழ்வில்**
**50 ஆண்டுகளை நிறைவுசெய்யும்**
**அருட்தந்தை விக்ரர் குரூஸ் [அ.ம.தி]**

06.08.1957 – 06.08.2007



பொன்விழா நாயகர்களுக்கு மன்னார் மறைமாவட்டம் சார்பாகவும், மன்னா வாசகர்கள் சார்பாகவும் எமது நல்வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவித்து மகிழ்கின்றோம். பொன்விழா நாயகர்களைப் பற்றிய விரிவான விபரங்களை 17ம் பக்கத்தில் காணலாம்.

– பதிப்பாசிரியர் –

## வெள்ளி விழா நாயகர்கள்

**குருத்துவ வாழ்வில் 25 ஆண்டுகளை நிறைவுசெய்யும் மன்னார் மறைமாவட்ட**
**அருட்பணியாளர்கள்**

**அருட்பணியாளர் ஜெயபாலன் குரூஸ்**

03.08.1982 – 03.08.2007



**அருட்பணியாளர் எமிலியானுஸ்பிள்ளை**

04.08.1982 – 04.08.2007



வெள்ளிவிழா நாயகர்களுக்கு மன்னார் மறைமாவட்டம் சார்பாகவும், மன்னா வாசகர்கள் சார்பாகவும் எமது நல்வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவித்து மகிழ்கின்றோம். பொன்விழா நாயகர்களைப் பற்றிய விரிவான விபரங்களை 9ம் பக்கத்தில் காணலாம்

– பதிப்பாசிரியர் –

## செப ஆண்டை முன்னிட்டு மன்னார் மறைமாவட்டத்தில்
## இரண்டு நூல்கள் வெளியீடு





மன்னா பதிப்பாசிரியர் அருட்பணி. தமிழ் நேசன் எழுதிய இரண்டு நூல்களின் வெளியீட்டு விழாவின்போது முதன்மை விருந்தினர் மேதகு மன்னார் ஆயர் அவர்களிடமிருந்து மன்னார் மாவட்ட நீதிபதி உயர்திரு. ஏ. பிரபாகரன் அவர்களும், மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் உயர்திரு. எம். ஆபேல் றெவல் அவர்களும் சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக்கொள்கின்றனர்.

# மன்னா

## 41வது உலக சமூகத்தொடர்பு நாளுக்கான திருத்தந்தையின் செய்தி

### "சிறுவர்களும், சமூகத்தொடர்புச் சாதனங்களும் கல்விக்கு ஒரு சவால்"

2007 ஜனவரி 24ல் வத்திக்கான் நகரில் பத்திரிகையாளர்களின் பாதுகாவலர் புனித பிரான்சிஸ் டிசேல் விழாவில் திருத்தந்தை 16வது ஆசீர்வாதப்பர் உலக தகவல் தொடர்புசாதன தினத்திற்கான தொனிப்பொருளை வெளியிட்டார். மே 20ந் திகதி கொண்டாடப்பட்ட இவ்விழாவின் தொனிப்பொருளாக **"சிறுவர்களும் தகவல் தொடர்பு சாதனங்களும், கல்விக்கு ஒரு சவால்"** என்ற தலைப்பை வெளியிட்டார். அச்செய்தியின் முழு வடிவத்தையும் இங்கே தருகின்றோம்.

அன்பான சகோதரர், சகோதரிகளே,

01. 41வது உலக சமூகத்தொடர்பு நாளுக்கான கருப்பொருள், "சிறுவர்களும் தகவல்தொடர்பு சாதனங்களும்: கல்விக்கு ஒரு சவால்" என்பதாகும். இது அதிகளவு முக்கியத்துவம் வாய்ந்த இரண்டு தலைப்புகளில் சிந்திக்க நமக்கு அழைப்பு விடுக்கின்றது.

✠ சிறுவர்களின் உருவாக்கம்

✠ தொடர்பு சாதனங்களின் உருவாக்கம்.

இன்றைய நவீன யுகத்தில் சமூகத் தொடர்புசாதனங்களின் துரித வளர்ச்சி கல்விக்கு மாபெரும் சவாலாக அமைந்துள்ளது. தொழில்நுட்பத்துறையின் அதிவேக வளர்ச்சி உலக மயமாக்குதலுக்கு அடிகோலியுள்ளது. அத்துடன் காலச்சூழலை வடிவமைக்கின்றது (திருத்தந்தை 2ம் யோவான் பவுலின் அப்போஸ்தலிக்க மடலின் துரித வளர்ச்சி 03). சமூகத்தொடர்பு சாதனங்களின் செல்வாக்கு பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் சில சமயங்களில் இல்லங்களில் இருந்தும் தோற்றம் பெறுகின்றது என்று சிலர் கூறுகின்றனர். "தொடர்புசாதனம் எதனை உண்மை என்று இனம் காணுகின்றதோ அதனைப் பலர் உண்மை என்று ஏற்றுக்கொள்கின்றனர்" (சமூகத்தொடர்புகளுக்கான திருத்தந்தையின் ஆலோசனைச் சங்கம். 4)

02. சிறுவர்கள் சமூகத்தொடர்பு சாதனங்கள் கல்வி ஆகியவற்றிற்கிடையேயான தொடர்பு இரண்டு நிலைகளில் நோக்கப்படுகின்றது.

✠ தொடர்புசாதனங்களால் சிறுவர்கள் பெறும் உருவாக்கம்.

✠ தொடர்புசாதனங்களுக்குத் தகுந்த முறையில் பதிலளிக்கக்கூடியவிதமாகச் சிறுவர்களுக்கு அளிக்கப்படும் உருவாக்கம்.

சமூகத் தொடர்புசாதனமானது ஒருவித கொடுக்கல், வாங்கல் செயற்பாட்டிற்குரிய பொறுப்பு வாய்ந்த சாதனமாகும். இது கேட்பவர்கள், வாசிப்பவர்கள் ஆகியோரது செயற்பாடு மிக்க, விமர்சனப் பங்களிப்பை வேண்டி நிற்கிறது. இந்தத் தொடர்புசாதனங்களின் பாவனைக்குத் தகுந்த பயிற்சி அவசியம். இப்பயிற்சியானது சிறுவர்களின் கலாச்சார, ஒழுக்க, ஆன்மீக வளப்படுத்தலுக்கு அவசியம்.

பொதுநன்மையின் பொருட்டு எவ்வாறு தொடர்புசாதனங்களைப் பாதுகாத்து வளப்படுத்தலாம்? சிறுவர்கள் தொடர்புசாதனங்களை பாவிக்கும்போது அவற்றிற்கிடையான பாகுபாடுகளை இனம் காண்பதற்கான கல்வியை அளிப்பதற்கு பெற்றோரும், ஆலயம், பாடசாலை ஆகியனவும் பொறுப்புடன் கவனிக்கவேண்டும். இவற்றிலும் பெற்றோரின் பங்களிப்பு அதிகளவு முக்கியத்துவம் பெறுகின்றது. தொடர்புசாதனங்களைப் பிள்ளைகள் பயன்படுத்துவதற்கு ஏற்ற விதத்தில் அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதும் சிறந்தவற்றைத் தெரிவுசெய்வதற்கும் தேவையற்ற நிகழ்ச்சிகளை விலக்கி விடுவதற்கும் பெற்றோருக்கு உரிமையும் கடமையும் உண்டு (திருத்தந்தை 2ம் யோன் பவுல் வெளியிட்ட அப்போஸ்தலிக்க அறிவுரை Familiaris Consòrto,76)

பெற்றோர் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குப் பாடசாலைகள், பங்குகள் போன்றவற்றின் ஊக்குவிப்பும், உதவியும் அவர்களுக்குக் கிடைப்பதை நிச்சயப்படுத்திக் கொள்வதோடு, இந்தக் கடினமான ஆயினும் திருப்தி அளிக்கக்கூடியதுமான பெற்றோருக்கான செயற்பாடுகளில் பரந்த சமூகத்தின் பங்களிப்பும் தேவை.

தொடர்புசாதனங்களின் கல்வி நன்நோக்கம் கொண்டதாக அமைய வேண்டும். அழகையும், ஒழுக்கத்தில் சிறந்தவற்றையும் வெளிப்படுத்தும் சிறுவர்களுக்கு பாராட்டுதல், விவேகம், உய்த்துணர்தல் நுட்பங்கள் ஆகியவற்றை வளப்படுத்துவதற்கு இது உதவி புரியும். பெற்றோரது நன்மாதிரிகையின் அடிப்படை விழுமியங்களை இனங்காணுவதன் மூலமும் நுண்கலை, இலக்கியம், சங்கீதம் ஆகியவற்றை இளைஞர்களுக்கும் சிறார்களுக்கும் அறிமுகம் செய்வதன் மூலமும் அவர்கள் நன்மை அடைய முடியும். பிரபலமான இலக்கியங்களுக்கு கலாச்சாரத்தில் தனி இடம் உண்டு. உணர்வுகளை தூண்டுவதற்கான கற்றலை ஏற்படுத்தக்கூடாது. அழகின்மையும், தாக்கத்தை ஏற்படுத்தும். அதேவேளை அழகு தெய்வீகமானவரின் கண்ணாய் இருப்பதோடு இளம் இதயங்களுக்கும், உள்ளங்களுக்கும் ஊக்கமளித்து உற்சாகப்படுத்தும்.

பொதுவாக நடைமுறைப்படுத்துவது போன்றே தொடர்புசாதனக் கல்வியும் சுயாதீனத்தை நடைமுறைப்படுத்துவதில் உருவாக்கத்தை வேண்டி நிற்கின்றது. இது ஒரு வகை கோரிக்கையாகும். இதனால் இன்பத்தை இடையுறாது தேடுவதற்காக அன்றேல் புதிய அனுபவத்திற்கான ஒரு செயல் பாடாக சுயாதீனம் அடிக்கடி முன்வைக்கப்படுகின்றது.

(தொடர்ச்சி 4ம் பக்கம்...)

## வாசகர் எண்ணங்கள்





### நித்தமும் நறுமணம் வீசுகின்றாய்

மன்னார் மண்ணின் மணியெனத் துலங்கிடும்
மன்னாவின் மகிமை நறுமணமாய் வீசுதே!
நாளாந்தம் நடைபெறும் நற்செயல்கள் யாவையும்
நயமுடனே அச்சிலிட்டு எமக்களிக்கும் மன்னாவே!

பங்கினில் மட்டுமின்றி, பார் முழுவதிலும் உள்ள
எண்ணற்ற செய்திகளை எமக்களிக்கும் மன்னாவே!
படமும் பாடமும் - நற்கருத்தும் கதையுமாக
எம் கண்களைக் கவர்ந்திடும் நீ
காசினியை வளர்த்திடுவாய்.



உன் சேவை நீடிக்க இறை ஆசிகள் உனக்கே
வாழ்க மன்னா! வளர்க மன்னா!

*எஸ். ஜீவகி, பாலையடிப்புதுக்குளம்.*

### உள்ளத்து உணர்வுகளோடு கலந்துவிட்டாய்...!

அன்பிற்கினிய மன்னாவே!
அறிவியலும் ஆன்மீகமும்
அன்றாட வாழ்க்கையின் வளர்ச்சியும் தளர்ச்சியும்
புதிர் போட்டிகளும் கவிதையுமாய்
சிரித்து நாம் சிந்திக்க சித்திரமாய்
எம் மத்தியில் வலம்வரும் மன்னாவே!
உன் பணியும் உன் சேவையும்
என்றும் தொடரவேண்டும்.



எழுத்து என்பது பிரசுரம் மட்டுமல்ல
பிரசவமும் பிரவேசமும்கூட எனப் புரியவைத்தாய்.
அன்று பாலைவனத்தில் கிடைத்த மன்னா
உடல் பசிக்காக! - இன்று
மன்னாரில் கிடைக்கும் மன்னா உள்ளத்துப் பசிக்காக
எம் உள்ளத்து உணர்வுகளோடு கலந்துவரும் மன்னாவே,
நீ வாழ்கவென வாழ்த்ணதுகின்றேன்.

*ஆ. சுபோதினி, செட்டிகுளம்.*

### மனிதரைக் கவருகின்றாய்...

மாதம் ஒருமுறை வசந்தம் வீசி
மனிதனை ஊக்கப்படுத்தும் பத்திரிகையே!
தூங்கிக்கொண்டிருக்கும் மனிதனைத்
துயிலெழுப்பி உற்சாகம் ஊட்டும் பத்திரிகையே!

கவிதை, நகைச்சுவை, விளம்பரப் பலகை,
சிறுகதைகள் போட்டிகள் என
பல அம்சங்களை உள்ளடக்கி
மனிதரைக் கவருகின்ற பத்திரிகையே!
இதயம் நிறைந்த இன்பமுடன்
இனிதே நீ வருக! வருக!
உன் பணி வளர்க! வளர்க!



*எஸ். நிவேதனா, சாளம்பன், ஆண்டாங்குளம்.*

### அள்ள அள்ளக் குறையாத அருவிதான் நீ!

மாதமது பிறந்தவுடன், உனைத் தேடவைக்கின்றாய்
மாதங்கள் முழுவதுமோ மன்னாவாய்ப் பொழிகின்றாய்
செபவாழ்வு ... வழிபாடு என மிளிர்கின்றாய்
புத்துணர்வு பெற்றிடவே வான் ஏறி வருகின்றாய்.

இளம்பிள்ளை அவர்களை
விவிலிய அறிவில் வளர்க்கின்றாய்
இயந்திர வாழ்க்கையில்தான்
நிம்மதியைத் தருகின்றாய்.



வார்த்தைகளே வரவில்லை
உன் புகழை எழுதுவதற்கு
ஆன்மீகப் பசி தீர்க்கும்
உன் திறனைக் கூறுவதற்கு
உன் சேவை பல ஆண்டு
வேண்டும் எம்மவர்க்கு
உன் சேவையாற்றுவோர்க்கு இறையாசீர் வேண்டுகிறோம்.

*ஆர். பற்றிமா நவறோஸ், டென்மார்க்*

## சுதேச குருக்கள் தினச் சிந்தனை

### "கடவுளின் அன்பைப் பறைசாற்ற என்னுடன் வாருங்கள்"

**அருட்பணி நோயல் இம்மானுவேல், தேசிய குருத்துவக்கல்லூரி, அம்பிட்டிய**

சுதேச குருக்கள் தினத்தை இலங்கைத் திருச்சபை யூலை 29ந் திகதி அன்று நினைவுகூர்கின்றது. இக்காலத்தில் எமது அழைப்பு, எமது பணி, எமது கடமைகளை மீளாய்வு செய்வது சாலச்சிறந்தது.

"கடவுளின் அன்பைப் பறைசாற்ற என்னுடன் வாருங்கள்" என்று சுதேச குரு அழைப்பு விடுப்பதாக இவ்வருட சுதேச குருக்கள் தினத் தலைப்பு அமைந்துள்ளது. இதை ஆய்ந்து பார்க்க மூன்று நிலைகளாக எனது கட்டுரையை பிரிக்க விரும்புகின்றேன்.

1. கடவுளின் அன்பு பல நிலைகளில், பலர் மூலமாக, பல வகைகளில் வெளிப்படுகின்றது.
2. கடவுளின் அன்பை அனுபவிக்கும் ஒவ்வொருவரும் அதை வாழ்ந்து காட்டவும், அடுத்தவர்க்கு அறிமுகம் செய்யவும் முன்வரவேண்டும்.
3. இறையன்பை அனுபவிக்க, பறைசாற்ற வாழ்ந்துகாட்ட எமக்கு சிறப்பான அழைப்பு எப்போதும் உண்டு.

இறைவனது அன்பின் வெளிப்பாடாக உலகம் உருவானது. உலகப் படைப்பிற்கு மேலாக மனிதப்படைப்பு முதன்மை பெறுகின்றது. "மானிடரை நம் உருவிலும், நம் சாயலிலும் உண்டாக்குவோம்" (தொ.நூ 1:27). இவ்வாறு தொடக்கத்தில் இறைவனின் அருள் மனிதரில் நிறைவாக இருந்தது. இறைவனின் சாயல் என்பது மனிதனுக்கு ஏனைய படைப்புக்களைவிட கொடுக்கப்பட்டுள்ள சுதந்திரத்தை விசேடமாகக் குறித்து நிற்கின்றது.

ஆனால் மனிதன் தனக்குக் கொடுக்கப்பட்ட சுதந்திரத்தை நல்ல முறையில் பயன்படுத்தாது, இறைவனுக்கு எதிராகச் செயற்பட்டதால் முதற்பாவம் எனும் நிலை உருவானது. ஆயினும் இறைவன் மனிதன் செய்த பாவத்திற்குத் தண்டனை கொடுத்தாலும் தனது திட்டங்களை அன்றே வெளிப்படுத்தினார் (தொட.நூ 3:14,15). இவ்வாறு மெசியாவின் வருகையை முன்னறிவித்த இறைவன் உலக முழுமைக்கான தனது திட்டத்தை தொடக்கி வைத்தார். அவர் தொடங்கிவைத்த இந்த மீட்புத் திட்டத்தில் பலர், பல காலகட்டங்களில், பல வழிகளில் செயற்பட்டனர்.

பழைய ஏற்பாட்டுச் சம்பவங்களும், செயற்பட்ட மனிதர்களும் இதற்குச் சிறந்த உதாரணம். இவையெல்லாம் மெசியாவை முன்னறிவிப்பதையும், அவரது வருகைக்காக மக்களை ஆயத்தம் செய்வதையுமே இலக்காகக் கொண்டிருந்தன. இறைவனின் அன்பு, இரக்கம், பராமரிப்பை மக்கள் பல வகையான அனுபவங்கள் மூலமாகப் புரிந்துகொண்டனர்.

புதிய ஏற்பாட்டில் இயேசுவின் வருகையும், போதனையும், வாழ்வும் பாரிய மாற்றங்களைக் கொண்டுவந்தன. சாதாரண நம்பிக்கை கொண்ட பாமர மக்கள், நம்மிடையே இறைவாக்கினர் ஒருவர் தோன்றியுள்ளார் என்றும், இறைவன் தம் மக்களைத் தேடிவந்துள்ளார் என்றும் நம்பிப் பயனடைந்தனர். இயேசுவின் சொல்வன்மையும், போதனைகளில் இருந்த உறுதிப்பாடும், கேட்போரது மனங்களை மாற்றியது. அவரது தொடுதல் பலருக்கு ஆசீராகவும், குணமாக்கலாகவும் அமைந்தது. ஊர் ஊராக அவர் மேற்கொண்ட பயணங்கள் பலரை இறைவனை நோக்கிப் பயணிக்க வைத்தன. இயேசுவின் இறுதி நாட்கள் மரணம் இறுதியானதல்ல என்பதை உலகிற்குக் காட்டி நம்பிக்கையில் வாழவைத்தன. இவ்வாறு இறையன்பு இயேசுவில் முழுமையாக வெளிப்பட்டது.

2. கடவுளின் அன்பை அனுபவிக்கும் ஒவ்வொவரும் அதை வாழ்ந்து காட்டவும், அடுத்தவர்க்கு அறிமுகம் செய்யவும் முன்வரவேண்டும். இதுவே இயேசுவின் இறுதிக் கட்டளையாகவும் இருந்தது. "நான் உங்களை அன்பு செய்ததுபோல நீங்களும் ஒருவர் மற்றவரை அன்புசெய்ய வேண்டும்" (யோவா.13:34).


மனமாற்றத்திற்கான அழைப்பே இயேசுவின் முதன்மையான போதனையாக இருந்தது. "காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது. மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள்" (மாற்.1:15, மத்.3:2). மனமாற்றத்திற்கான அவசியமும், அவசரமும் இந்த அன்பான அழைப்பில் வெளிப்படுகின்றது. கடவுள் பாவிகளை வெறுக்கவில்லை, பாவத்தையே வெறுக்கின்றார். "கடவுளுக்கேற்ற பலி நொறுங்கிய நெஞ்சமே. கடவுளே! நொறுங்கிய குற்றமுணர்ந்த உள்ளத்தை நீர் அவமதிப்பதில்லை (திபா 51:17). இவ்வாறு இயேசுவின் போதனைகளும், செயல்களும் மக்களுக்கு இறைவனின் அன்பையும், இரக்கத்தையும் வெளிப்படுத்துவனவாகவே அமைந்தன. அதேபோல இயேசு தனது பணிவாழ்வின் காலத்தில் தன்பணி தொடர சீடர்களைத் தெரிவுசெய்து பயிற்றுவித்தார். "தம்மோடு இருக்கவும், நற்செய்தியைப் பறைசாற்ற அனுப்பப்படவும், பேய்களை ஓட்ட அதிகாரம் கொண்டிருக்கவும் அவர் பன்னிருவரை நியமித்தார்" (மாற்.3:14). இறுதியில் பணிக்கான சிறப்பான கட்டளையை இயேசு தன் சீடர்களுக்குக் கொடுத்தார். "விண்ணுலகிலும் மண்ணுலகிலும் அனைத்து அதிகாரமும் எனக்கு அருளப்பட்டிருக்கிறது. எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தவரையும் சீடராக்குங்கள்" (மத்.28:18-20).

தமது பணிவாழ்வைத் தொடங்கிய சீடர்களுக்கு பெரும் சவால்கள் காத்திருந்தன. தூய ஆவியால் அபிஷேகம் செய்யப்பட்டவர்களாக சீடர்கள் எந்தச் சவால்களையும் துணிவோடு எதிர்கொண்டு அன்று பலஸ்தீனாவில் தொடங்கிய ஆண்டவரின் அன்புச் செய்தி "உலகின் கடையெல்லைவரை எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்" (தி.பா.1:13) எனும் இயேசுவின் வாக்கிற்கமைய உலகெங்கும் பரவியது உலக வரலாறு.

(தொடர்ச்சி.... 19ம் பக்கம்)

# அப்பாவி மக்களை அநியாயமாகக் கொலை செய்தல், கடத்துதல் என்பவற்றால் சர்வமதப் பேரவை ஆழ்ந்த கவலை

## சர்வமதப் பேரவை சார்பாக கொழும்பு பேராயர்



அப்பாவி மக்களை அநியாயமாக கொலை செய்தல், கடத்துதல் என்பவற்றால் ஆழ்ந்த கவலையடைவதுடன், இந்த நாகரீகமற்ற, மனிதாபிமானமற்ற செயல்களை வன்மையாகக் கண்டிக்கிறோம் என 15.06.2007 அன்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் சர்வமதப் பேரவை தெரிவித்துள்ளது.

இலங்கையின் அரசியல் யாப்புக்கும், சட்டதிட்டங்களுக்கும் உட்பட்டு கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்ளுமாறு அரசினை வலியுறுத்தியுள்ள சர்வமதப் பேரவை விடுதிகளில் தங்கியிருந்த தமிழ் மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டதற்கு பொறுப்பானவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது. இதுபோன்ற பாரதூரமான தவறுகளை மூடிமறைக்க முடியாதெனவும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

கொழும்பு மறைமாவட்ட பேராயர் மேதகு ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகை அவர்கள் இது தொடர்பாகக் குறிப்பிடுகையில் இலங்கையர்களிடையே இன்று பெரும் அச்சநிலை காணப்படுகின்றது. ஆட்கடத்தல்கள், கொலைகள், பலாத்கார கப்பம் என்பன குறித்து சர்வமதப் பேரவை குழப்பமும், கவலையும் அடைந்துள்ளது. தொடர்ந்து அதிகரிக்கும் இப்போக்கானது உலகில் காணப்படும் பிரதான மதங்களின் ஒழுக்க விழுமியக் கோட்பாடுகளினால் வளர்க்கப்பட்டுவரும் எமது நாட்டுக்கு அபகீர்த்தியையும், கண்டனத்தையும் பெற்றுத்தந்துள்ளது.

இந்த மதவிரோத, மனிதாபிமானமற்ற, நீதியற்ற செயல்களை நாம் கண்டிக்கின்றோம். நாட்டில் இடம்பெறும் சகல குற்றச் செயல்களும் உடன் நிறுத்தப்பட அரச உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அரசியல் பின்புலமற்ற நாம் இதனை உரியவர்கள் முன் சமர்ப்பிக்கிறோம் எனவும் கொழும்புப் பேராயர் தெரிவித்தார்.

## மன்னா பத்திரிகைக்கு 10 வயது

### உங்கள் கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம்

சஞ்சிகை வடிவத்தில் பல தடங்கல்கள் மத்தியில் வெளிவந்துகொண்டிருந்த மன்னா, 1997ம் ஆண்டு தொடக்கம் பத்திரிகையாக வடிவெடுத்து வெளிவரத் தொடங்கியதால் இவ்வாண்டு மன்னா பத்திரிகைக்கு 10 வயது.

இதையொட்டி ஒக்ரோபர் மாத மன்னா 10வது ஆண்டு சிறப்புப் பொழிவாக வெளிவர உள்ளது.

இச்சிறப்பிதழுக்கான உங்கள் ஆக்கங்களை, மன்னா பற்றிய உங்கள் கருத்துக்கள், அபிப்பிராயங்களை மற்றும் வாழ்த்துக்களை காலம் தாமதிக்காமல் எமக்கு அனுப்பிவையுங்கள்.
உங்கள் ஆக்கங்கள் வந்துசேரவேண்டிய இறுதி நாள் செப்ரம்பர் 10ம் திகதி.

\- பதிப்பாசிரியர்

# புங்குடுதீவுக்கடலில் கரை ஒதுங்கிய மனித உடற் பகுதிகள் ஜிம்பிறவுண் அடிகளாருடையது அல்ல

## மரபணுப் பரிசோதனையில் தெளிவாகத் தெரிவிப்பு



யாழ். புங்குடுதீவுக் கடலில் கரை ஒதுங்கிய மனித உடலின் பகுதிகள், மண்டைதீவு – அல்லைப்பிட்டி பங்குத் தந்தை ஜிம்பிறவுண் அடிகளாருடையது அல்ல என மிகத் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


மகரகம வைத்தியசாலையில் நிகழ்த்தப்பட்ட மேற்படி வைத்திய பரிசோதனையின் அறிக்கைகள் ஊர்காவற்றுறை நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டன.

மண்டைதீவு – அல்லைப்பிட்டி பங்குத்தந்தை ஜிம்பிறவுண் அடிகளார் 2006ம் ஆண்டு ஆவணி மாதம் தமது உதவியாளர் வின்சன் விமலதாஸ் என்பவருடன் இராணுவ சோதனைச் சாவடியில் அரச படையினரால் வழிமறித்து விசாரிக்கப்பட்ட பின்னர் காணாமல் போனார்.

2007ம் ஆண்டு மார்ச் மாத நடுப்பகுதியில் புங்குடுதீவுக் கடலில் உருக்குலைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட மனித உடற்பகுதிகள் ஜிம்பிறவுண் அடிகளாரின் உடல் பகுதிகளாக இருக்கலாம் என்ற ஐயத்தின் பெயரில் மரபணுச் சோதனை மகரகம பொது வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டது. இதன் பின்னர் இணையத்தள செய்திகள் அது ஜிம்பிறவுண் அடிகளாருடையது என தவறாக தகவல் வெளியிட்டு இருந்தன. பத்திரிகைகளும் இதனை ஆதாரம் காட்டி செய்திகளை வெளியிட்டு இருந்தன. ஆனால் மேற்படி மனித உடலின் பகுதிகள் ஜிம்பிறவுண் அடிகளாருடையது அல்ல என தெளிவாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மிகவும் இரகசியமாக நடாத்தப்பட்ட இந்த மரபணுச் சோதனைகளின் முடிவு அறிக்கைகள் மகரகம வைத்தியசாலையில் இருந்து ஊர்காவற்றுறை நீதிமன்றத்துக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சோதனையின்படி புங்குடுதீவுக் கடலில் கரை ஒதுங்கிய மனித உடற் பகுதிகள் ஜிம்பிறவுண் அடிகளாருடையது அல்ல என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது.

# புதிதாக நிர்மாணிக்கப்பட்ட முருங்கன் புனித இயாகப்பர் ஆலயத் திறப்பு விழா





கடந்த 25.07.2007 அன்று புனித இயாகப்பர் திருவிழா தினம் அன்று புதிதாக நிர்மாணிக்கப்பட்ட முருங்கன் புனித இயாகப்பர் ஆலயத் திறப்புவிழா நிகழ்வு கோலாகலமாக நடைபெற்றது. மன்னார் அரசாங்க அதிபர் உயர்திரு. நீக்கிலாஸ்பிள்ளை, திட்டப் பணிப்பாளர் உயர்திரு. பத்திநாதன், நானாட்டான் பிரதேச செயலாளர் உயர்திரு. திருநாவுக்கரசர் உட்பட பல குருக்கள், துறவியர், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்கள் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அடிகளார் புதிய ஆலயத்தை திறந்துவைத்தார். அதைத் தொடர்ந்து திருநாட் திருப்பலியும், திருச்சுருபப் பவனியும் திருச்சுருப ஆசீரும் இடம்பெற்றது.

தொடர்ந்து ஆலயத் திறப்புவிழாவையொட்டிய சிறிய அரங்க நிகழ்வு இடம்பெற்றது. முருங்கன் பங்குத் தந்தை அருட்பணி. ஸ்ரீபன்றாஜ் அவர்கள் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. ஆலய மேய்ப்புப் பணிச்சபையின் உபதலைவர் திரு. ய. மரியதாஸ் (சிங்கம்) அவர்கள் ஆரம்ப உரையாற்றினார். ஆலய மக்கள் சார்பாக பொருளாளர் - பரிகாரிகண்டல் பாடசாலை அதிபர் திரு, பி. சந்தியோகு சிறப்புரை நிகழ்த்தினார். ஆலயத்தை புதிதாகக் கட்டி முடிக்க உதவிய அனைத்துக் கலைஞர்களுக்கும் அன்பளிப்புகள் வழங்கப்பட்டன. கட்டிடநிர்மாணக் கலைஞர்கள் திரு. பாவிலு பெனடிக்ற், திரு. பாவிலு புனிதறாஜ் ஆகியோருக்கு குருமுதல்வர் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

தொடர்ந்து முருங்கன் கலாபூசணம் கலைஞர் குழந்தை அவர்களின் குழுவினரால் ஒரு நாடகம் மேடையேற்றப்பட்டது. செயலாளர் திரு. பி. அற்புதறாஜ் அவர்கள் நிகழ்வுக்கு வருகை தந்த அனைவருக்கும் சிறப்பாக உள்ளூர் வெளியூர் நன்கொடையாளர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

இவ்வாலயக் கட்டுமானப் பணிக்கு பலருடைய உதவியும் உழைப்பும் நிறைவாகக் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக மன்னார் ஆயர், மற்றும் வெளிநாடுகளில் வாழும் ஆலய மக்கள், வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சிவசக்தி ஆனந்தன், மீள்குடியேற்ற அமைச்சர் கௌரவ ரிசாட் பயுதீன் ஆகியோருடைய உதவிகள் இங்கு நினைவுகூரப்பட்டன.

# மத்திய கிழக்கு நாடுகளில் அமைதி ஏற்பட திருச்சபை தலைவர்கள் வேண்டுகோள்!

அகில உலக திருச்சபைகளின் கூட்டமைப்பிற்கான மாநாடு கடந்த வாரம் ஜோர்டான் நாட்டில் நடைபெற்றது. "மத்திய கிழக்கு நாடுகளில் நீதியின் வழியில் அமைதி" என்ற மையக்கருத்தில் நடைபெற்ற இந்த மாநாட்டில் வெவ்வேறு திருச்சபைகளிலிருந்தும் பல தலைவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். அகில உலகத் திருச்சபையின் தலைவர்களும், இந்த அமைப்போடு இணைந்த உலக நிறுவனங்களின் தலைவர்களுமாக மொத்தம் 130 பேர் இதில் கலந்துகொண்டனர். இஸ்ரேல் - பாலஸ்தீனா நாடுகளுக்கு இடையே உள்ள பிரச்சனைகளுக்கும், மற்றும் தென் ஆபிரிக்கா, சூடான், கொலம்பியா, இலங்கை நாடுகளில் நடக்கும் உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கும் ஒரு தெளிவான, தீர்க்கமான முடிவு எடுக்கப்பட வேண்டும் என்பதற்காக இந்த கூட்டமைப்பிற்கான மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது என்றும், மேலும் இந்த நாடுகளுக்கு இடையே உள்ள பிரச்சினைகளுக்கு குறிப்பாக இஸ்ரேல் - பாலஸ்தீன நாடுகளுக்கிடையே ஒற்றுமை நிலவவும், நிரந்தரத் தீர்வு ஏற்படவும் அனைத்துத் திருச்சபை உறுப்பினர்களையும் உள்ளடக்கிய சமாதானக் குழு ஏற்படுத்தப்பட்டது என்றும் செய்திக் குறிப்பு தெரிவிக்கின்றது.

# 'உலகமயமாக்கப்பட்ட உலகத்திற்கு நற்செய்தி மதிப்பீடு ஓர் அவசியத் தேவை'

## – திருத்தந்தை 16ம் பெனடிக்ற் –


கலாச்சாரம் மற்றும் பண்பாட்டுக்கான திருத்தந்தையின் பேராயத்தின் தலைவர் கர்தினால் பால் பௌப்பாட் திருத்தந்தையை கடந்த வாரம் சந்தித்தார். கலாச்சாரத்திற்கான இந்தப் பேராயம் தனது 25வது ஆண்டு விழாவைக் கொண்டாடுகின்றது.

இந்தச் சந்திப்பின்போது திருத்தந்தை "இந்தப் பேராயத்தின் வழியாக பல முன்னேற்றங்களை திருச்சபை பெற்றுள்ளது. உலகமயமாக்கப்பட்ட சமூகத்தின் சமூக ஊடகங்கள் வழியாக எத்தனையோ பண்பாடு ரீதியான வளர்ச்சி என்பது இன்றியமையாதது. மேலும் தவிர்க்க முடியாதது. ஆனால், கலை மற்றும் பண்பாட்டு வளர்ச்சி மனித மாண்புகளையும், நற்செய்தியின் மதிப்பீடுகளையும் உள்ளடக்கியதாக அமைய வேண்டும். இறை நம்பிக்கையும், பண்பாட்டு வளர்ச்சியும் இணைந்தே செல்ல வேண்டும்.

ஒவ்வொரு மனிதனும் கடவுளோடும் பிற மனிதரோடும் இணைந்து வாழும்போது ஏற்படும் அன்புறவின் வெளிப்பாடுதான் கலாச்சார, கலை மற்றும் பண்பாட்டு வளர்ச்சி என்பதாகும். கடவுளின் அருளைத் திறந்த மனநிலையோடு கலாச்சார வளர்ச்சியின் வழியாக பெற்றுக் கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்" என்று அழைப்பு விடுத்துள்ளார்.

# வங்காலையில் 'செதுக்கிய சிற்பம்' கவிதை நூல் வெளியீடு







கடந்த 16.06.2007 வியாழக்கிழமை அன்று மன்/ புனித ஆனாள் மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவியும், திரு. திருமதி. ஸ். கிறிஸ்தோப்பு டயஸ் அவர்களின் செல்வப் புதல்வியுமான செல்வி. கி. மேரி கொறற்றி டயஸ் அவர்களின் படைப்பாற்றலில் உருவான 'செதுக்கிய சிற்பம்' என்ற கவிதை நூலின் வெளியீட்டு விழா கல்லூரி அதிபர் அருட்சகோ. செ. கி. விஜயதாசன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கல்வியற்துறை பேராசிரியர் க. சின்னத்தம்பி அவர்களும், சிறப்பு விருந்தினராக மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் திருவாளர். ம. ஆபேல் றெவல் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். இந்நூலின் முதற்பிரதியை அருட்தந்தை செபஸ்ரியன் குரூஸ் அவர்கள் பெற்றுக்கொண்டார். இக்கவிதை நூலுக்கான ஆய்வுரையை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் திரு. கதிர்காமசேகரன் அவர்கள் வழங்கினார். நூலாசிரியர் மேரி கொறற்றி அவர்களை மன்னா மனதார வாழ்த்தி மகிழ்கின்றது.

# நான் யாருக்கும் பயப்படவில்லை

## உண்மையை யாரும் பேசாதபடியால் நான் உறுதியாகப் பேசுகிறேன்

### - பத்திரிகையாளர்கள் மத்தியில் யாழ் ஆயர் -



யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அண்மையில் சர்வதேச ஊடக அனுசரணை அமைப்பின் பிரதிநிதியான தோமஸ் மோயர் ஹியூஜஸ் மற்றும் எல்லைகள் அற்ற பத்திரிகையாளர் அமைப்பின் பிரதிநிதியான வின்சன்ட்ப்று சேவ் ஆகிய சர்வதேச பத்திரிகை-யாளர்களை சந்தித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வட பகுதியில் நடைபெறும் உண்மையான விடயங்கள்பற்றி யாரும் வெளிப்படையாகக் குரல் கொடுக்காதபடியால் நாம் குரல் கொடுக்கிறோம். அரசியல்வாதியாக இல்லாமல் சமயத் தலைவராக இருந்தபோதும் உண்மை நிலையை வெளிக்கொணர வேண்டிய ஒரு தேவையும் கடமையும் இருப்பதால் நாம் குரல் கொடுக்கிறோம்.

இங்குள்ள பிரமாண்டமான ஆலயங்களையும், கத்தோலிக்க அமைப்பு முறைகளையும் பார்த்து நீங்கள் பெரிதாக நினைக்கலாம். உண்மையில் 18 அல்லது 20 வீதமானவர்களைக் கொண்ட ஒரு சிறுபான்மையினராகவே நாம் இருக்கிறோம் என ஆயர் தெரிவித்தபோது, உறுதியாக கருத்துக்களை தெரிவிக்க உங்களுக்கு பயமில்லையா? எனச் செய்தியாளர் கேட்டார். நான் யாருக்கும் பயப்படவில்லை. நான் ஒரு அரசியல் வாதியுமில்லை. உண்மையை யாரும் பேசாதபடியால் உறுதியாகப் பேசுகிறேன். மக்களின் துன்பங்களையும் துயரங்களையும் தெளிவாக அறிவிக்கிறேன் என்றார்.

யாழ்ப்பாணத்தில் பணிபுரியும் பத்திரிகை-யாளர்களை புரிந்துகொள்வது கடினமானது. அவர்கள் தங்களுக்குத் தாங்களே தணிக்கை முறையொன்றை வைத்துச் செயற்படுகிறார்கள். எதைச் சொன்னாலும் பயம். எந்தப் பகுதியை சார்ந்தோ அல்லது எதிர்த்தோ எழுதினாலும் ஆபத்து என்கின்ற நிலையில் பணியாற்றுகிறார்கள். மாற்றுக் கருத்துக்களையும் எதிர்கருத்துக்களையும் தெரிவிக்க முடியாமல் கட்டுப்பட்டே பயத்தோடு பணியாற்றுகிறார்கள்.

பத்திரிகையாளர்கள் என்கின்ற வகையில் தனித்து விடப்பட்டவர்களாக அவர்களுக்காக குரல் கொடுக்க யாரும் இல்லாத நிலையில் பணியாற்றுகிறார்கள். பலர் துன்பங்களை எதிர்நோக்கியிருக்கிறார்கள். அச்சடிக்கும் தாள் இல்லாமல் பத்திரிகையை வெளியிட முடியாமல் இருந்திருக்கிறார்கள். கொழும்புப் பத்திரிகைகள் எதுவுமே வராமல் பல துன்பங்களை எதிர்நோக்கியிருக்கிறார்கள். ஒரு வானொலியோ தொலைக்காட்சியோ கூட இங்கு இயங்கவில்லை. பத்திரிகை சுதந்திரம் என்பது இங்கு மிகவும் கடினமான ஒன்றாகவே இருக்கிறது.

சிங்களப் பத்திரிகைகளும் சிங்கள ஊடகங்களும் அரசுக்கு சார்பாக செயற்படுவதிலேயே கவனமாக இருக்கிறார்கள். அவர்கள் உண்மையான செய்தியாளர்களாகப் பணியாற்ற வேண்டும். நடப்பவற்றை ஒளித்தும் மறைத்தும் எழுதாமல் தெளிவாக உண்மையை எழுதவேண்டும்.

சிங்களப் பத்திரிகையாளர்களும் சர்வதேச பத்திரிகையாளர்களும் வட பகுதிப் பத்திரிகையா-ளர்களை அடிக்கடி சந்தித்து உறுதிப்படுத்த வேண்டும். சிங்களப் பத்திரிகையாளர்கள் எப்போதாவது வருகிறார்கள். அவர்கள் வடபகுதிக்கு அடிக்கடி வந்து உண்மை நிலையை தாமே கண்டறிந்து எழுதவேண்டும். வேறுயாரோ சொன்னதைக் கேட்டு இரண்டாம் தர அறிக்கையிடல் செய்வதை விடுத்து உண்மை நிலையை நேரடியாக பார்த்தும் அறிந்தும் எழுதவேண்டும்.

இங்கு வரும்போது இராணுவ அதிகாரிகளையும், அரச அதிபரையும் மட்டும் சந்திப்பதை விடுத்து பொது மக்களையும், உள்ளூர் தலைவர்களையும் சாதாரண அடிமட்ட மக்களையும் அணுகி உண்மை நிலையை அறிய வேண்டும்.

பத்திரிகையாளர் குழுக்களாக வந்து இராணுவத்தினரின் உதவியுடன் அவர்கள் கொண்டு செல்லும் வாகனங்களில் அவர்கள் குறிப்பிடும் இடங்களுக்கு சென்று அவர்கள் சொல்வதைக் கேட்பதோடு தமது பணியை முடித்துக்கொள்ளக்கூடாது. அரச ஊடகத்தை மட்டும் நம்பிக்கொண்டும், கேட்டுக்கொண்டும் இருக்காமல் எல்லாவற்றையும் நேரடியாகப் பார்த்து உண்மையாக அறிக்கையிட வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கை ஒரு பௌத்த சிங்கள நாடு என்று சொல்லிக்கொண்டு இனவாதிகளாகச் செயற்படக்கூடாது. இங்கு வருவதற்கு சிங்களப் பத்திரிகையாளர்கள் முதலில் விருப்பம் கொள்ளவேண்டும் என்று தெரிவித்தபோது சிங்களப் பத்திரிகையாளர்களை யாழ் ஆயர் வரவேற்கிறார் என்று அவர்களிடம் கொழும்பில் தெரிவிக்கலாமா? எனச் செய்தியாளர் கேட்டார்.

அவர்கள் இங்கு வரவேண்டும் அவர்களை நாம் வரவேற்க வேண்டிய தேவை இல்லை. இங்கு பல பத்திரிகை நிறுவனங்கள் இருக்கின்றன. அவர்கள் வரவேற்பார்கள் என்றார்.

இங்கு 40 ஆயிரத்துக்கும் அதிகமான இராணுவத்தினர் பணியாற்றுகின்றனர். ஒன்றரை மில்லியன் மக்கள் வாழ்ந்த குடா நாட்டில் இன்று கிட்டத்தட்ட 6 இலட்சம் பேரே வாழ்கின்றனர். எங்கு பார்த்தாலும் எந்த நுழைவு எல்லையிலும் இராணுவத்தினரே நிலைகொண்டுள்ளனர். மக்களைவிட அதிக இராணுவத்தினரையே காணக்கூடியதாக இருக்கிறது என யாழ் ஆயர் மேலும் தெரிவித்தார்.

# மன்னார் மறைமாவட்ட முதியோர் சங்கவிழா

மன்னார் மறைமாவட்ட முதியோர் சங்கங்களின் ஒன்றுகூடல் விழா பொதுநிலையினர் பணியக மண்டபத்தில் ஆனி மாதம் 23,24ம் திகதிகளில் சிறப்பாக நடைபெற்றது. 17 பங்குகளில் இருந்து 55 பேர் சமூகமளித்திருந்தனர். காலநிலை சீராக இல்லாத போதிலும், ஆர்வமிகுதியினால் வந்த வயோதிபர்களை பாராட்டாமல் இருக்க முடியாது.

23ம் திகதி பிற்பகல் 5:00 மணிக்கு காற்று மழையின் மத்தியிலும் சங்க அங்கத்தவர்கள் சரா சரியாக வந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. உடன் வழங்கிய தேநீர் சிற்றுண்டி உபசரணையில் குளிரிலிருந்து விடுபட்ட இவர்கள் புதுத்தெம்புடன் பிற்பகல் 6:00 மணிக்குச் செபவழிபாட்டில் ஈடுபட்டனர். செபவழிபாட்டை அன்பிய மத்திய குழுவில் இருந்து வந்த திரு. ஞானப்பிரகாசம், திரு. கீதபொன்கலன் ஆகியோர் நெறிப்படுத்தி ஒரு மணிநேரத்தை இறைவனுடன் சங்கமிக்க வழிவகை செய்தனர்.

அதனைத் தொடர்ந்து இயக்குனர் அருட்பணியாளர் அந்தோனிதாஸ் டலிமா அவர்கள் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். முதியோர் சங்கம் ஆரம்பிக்கப்பட்ட வரலாறு மன்னார் ஆயர் தன் தாயாரின் நினைவாக ஆரம்பிக்கப்பட்ட உதவித்திட்டத்தின் பேறாக ஆயரின் மனதில் எழுந்த எண்ணம் வயோதிபரை பராமரிக்கும் திட்டம் அமுல்படுத்தப்பட்ட வேண்டுமென்றும் இதனையே அருட்பணியார் விக்ரர் சோசை அவர்கள் முன்னெடுத்ததாகவும், அவர் விட்டுச்சென்ற இறைபணி நிலையினை தாம் முன்னெடுத்துச் செல்வதாகவும் இதற்கான நிதி வழிகளைப் பல்வேறு வழிகளிலும் சேகரிக்கத் திட்டமிட்டிருப்பதாகவும் ஆயர் தற்போது வழங்கும் நிதியிலிருந்தே தற்போதைய செலவுகள் நடைபெறுவதாகவும் குறைபட்ட பயன்மிக்க இம்முதியோர் சங்கத்தைக் கொண்டு வளர்க்கும் பணி நம் ஒவ்வொருக்கும் உரியதெனவும் எடுத்துரைத்தார்.

அதன்பின் பங்குகள் ரீதியாக கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இரவு 8:30 தொடக்கம் இரவு 10.00 மணி வரை நாட்டுக்கூத்து, நாட்டார் பாடல், நடனம், தனிப்பாடல், கவிதை போன்ற நிகழ்ச்சிகள் கண்ணுக்கும் செவிகளுக்கும் விருந்தாக அமைந்தன. வயது போனாலும் தமது குரல் வளம் இன்னும் குறையவில்லையென எடுத்துக்காட்டுமளவிற்கு நிகழ்ச்சிகள் தரமாக அமைந்தன. அனைவரையும் மகிழ்ச்சிக் கடலில் மிதக்க வைத்ததை பாராட்டாமல் இருக்க முடியாது.

அடுத்த நாள் 24ந் திகதி காலை 7.00 மணிக்கு இளைப்பாறிய அதிபர் திரு. அந்தோனிமுத்து அவர்களின் ஒரு மணித்தியால காலைத் தியான வழிபாடு அனைவரையும் இறைவனுடன் சங்கமிக்கச் செய்தது. மனங்களில் மாற்றத்தை ஏற்படுத்தத் தூண்டுகோலாய் இருந்தது.

காலை உணவின்பின் கலந்துரையாடல் நிகழ்ச்சி இடம்பெற்றது. பல வினாக்களுக்கு விடைகள் இயக்குனரால் வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து இவ்வாண்டு முதியோர் தினம் கொண்டாடுதல் சம்மந்தமான கலந்துரையாடல் இடம்பெறுவதைப் பற்றிய பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

அதன்பின் 11.30 மணிக்கு குருமுதல்வர் அருட்பணியாளர் அ. விக்ரர் சோசை அவர்களால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. விசுவாசப் பிரமாணத்தின் பின் மந்திரிக்கப்பட்ட நாடா, குருசு, வரவணிக்கங்கள் அனைவருக்கும் அணி-விக்கப்பட்டன.

திருப்பலியைத் தொடர்ந்து உறுப்பினர்கள் அளவளாவி மகிழ்ந்தனர். அவர் தொடர்ந்து கூறுகையில் முதியோர் சங்க வளர்ச்சியையும், முன்னெடுத்து செயல்பட்டு வருவதையும் பாராட்டி பேசியதோடு ஆயர் அவர்கள் இன்று நடைபெற்ற நிகழ்வுக்கு வரமுடியாத சந்தர்ப்பம் பற்றியும் குறிப்பிட்டார். நன்றி உரையை முதியோர் சங்க சமாச பொறுப்பாளர் திரு.எல் அதிரியான் குரூஸ் அவர்கள் வழங்கினார். அதன்பின் மதிய உணவு இடம் பெற்றது. மதிய உணவைத் தொடர்ந்து கலந்துரையாடலின்போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டன.

**கீழ்கண்ட தீர்மானங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.**

1. வருடாந்த முதியோர் தின விழாவை சிறப்பாக நடத்துதல்.
2. பங்குகளில் இருந்து 10 உறுப்பினர்களை அழைத்தல்.
3. காலை 9:00 மணி தொடக்கம் 12:00 மணிவரை நகரமண்டபத்தில் நிகழ்ச்சிகளை நடாத்ததுதல்.
4. கலைநிகழ்சிகள் சமாதான ஊர்வல அணிநடையும் நடாத்துதல்.
5. திருப்பலி, ஞானஉரை, விளையாட்டு நிகழ்வுகள் போன்றவகைகளை பொதுநிலையினர் மண்டபத்தில் நடாத்தல்.
6. சங்கங்களின் அங்கத்தவர்களின் 90 வயதிற்கு மேற்பட்டவர்களை கௌரவித்தல்.

**தகவல் - எம் ஆனந்தறோச்,செயலாளா**
மன்னார் மறைமாவட்ட முதியோர்
சங்கங்களின் சமாசம்.

# சிறுவர்களும், சமூகத்தொடர்பு சாதனங்களும்...


(2ம் பக்கத் தொடர்ச்சி...)

இருந்தாலும் இது கண்டனமே ஒழிய சுதந்திரம் அல்ல. உண்மையான சுதந்திரம் தனிப்பட்ட ஒருவரை கண்டனம் செய்ய முடியாது. விசேடமாக நவீனங்களுக்காக தணிக்க முடியாத தாக்கத்துடன் இருக்கும் ஒரு சிறு பிள்ளையை கண்டனம் செய்ய முடியாது. இந்த உண்மையின் ஒளியில் சுதந்திரம் என்பது மனுக்குலத்துக்கு இறைவன் அளித்த "ஆம்" என்ற திட்டமான பதிலிறுப்பின் அனுபவமாக இருக்கின்றது. இது நலமானது, உண்மையானது, அழகானது எனக் காணும் அனைத்தையும் பாகுபாடு காட்டாத, நிதானத்துடன் தேர்ந்துகொள்ள எம்மை அழைக்கிறது.

ஆகவே இந்தச் சுதந்திரத்தின் பாதுகாவலராகத் திகழும் பெற்றோர் படிப்படியாக தங்கள் பிள்ளைகளுக்கு மாபெரும் சுதந்திரத்தை அளிக்கும் அதேவேளை வாழ்வின் ஆழ்ந்த மகிழ்ச்சியை அவர்களுக்கு அறிமுகம் செய்துவைக்க வேண்டும். (குடும்பங்களுக்கான 50வது உரையில் வயன்சியா, 08 ஆடி, 2006)

இத்தகைய அழகு, உண்மை, நன்மைத்தனம் ஆகியவற்றின் வழியில் பிள்ளைகளுக்கு கல்வி புகட்ட வேண்டும் எனும் பெற்றோர்களினதும், ஆசிரியர்களினதும் இதயப்பூர்வமான ஆவலுக்கு அடிப்படை மனித உரிமைகள், திருமணத்தினதும், குடும்ப வாழ்வினதும் உண்மையான விழுமியங்கள், மனுக்குலத்தின் திடமான சாதனங்கள் மற்றும் இலக்குகள் ஆகியவற்றை வளப்படுத்தல் வரை தொடர்புசாதனங்கள் தொடர்புசாதனக் கல்வியால் ஆதரவு நல்க முடியும். இதனால் தொடர்புசாதனங்களுக்கான தேவையான பெற்றோர் ஆசிரியர்களது கண்ணோட்டத்தின்படி அவர்களது தனிப்பட்ட, அக்கறை உடனடித் தேவை ஆகியவற்றை மட்டும் அல்ல சமூதாயத்தில் பொறுப்புக்களை வகிக்கும் அனைவரதும் சக்தி வாய்ந்த உருவாக்கம், ஒழுங்குநிலை ஆகியவற்றிற்கான அர்ப்பணத்தையும் வேண்டி நிற்கின்றது.

பெரும்பாலான மக்கள் தமது நம்பிக்கையை உறுதிப்படுத்தும் அதேவேளை சமூகத்தொடர்புகளில் ஈடுபாடு கொண்டு சரியானவற்றைச் செய்ய விரும்புகிறார்கள். (சமூகத்தொடர்புக்கான திருத்தந்தையின் ஆலோசனைச் சங்கம் தொடர்புகளில் ஒழுக்க நிலை – 04) இத்தகைய தளங்களில் பணி புரிவோர் "விசேட உளவியல் தாக்கங்களுக்கும் ஒழுக்க சம்மந்தமான சிக்கல் நிலைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும்" என்பதை நாம் இனங்காண வேண்டும். (Aetatis Novie, 19) அதாவது சில சமயங்களில் வர்த்தக ரீதியான போட்டி மனப்பான்மையால் தொடர்பாளர்கள் தகுதி குறைந்த நிலைக்கு தள்ளப்படுகிறார்கள் இவ்வாறான நிலைகளில் தயாரிக்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்களும் படச்சுருள்களும், தொலைக்காட்சி விளையாட்டுகளும் பொழுதுபோக்கு நிகழ்சிகள்



என்ற பெயரில் வன்செயல், சமூகத்திற்கு ஒவ்வாத நடத்தைப் பிளவுகள், பாலியல் கிளர்ச்சிகள் ஆகியவற்றிற்கு சிறுவர்களையும் இளம் பராயத்தினரையும் இட்டுச் செல்கின்றது.

இத்தகைய சூழலில் வன்செயல், சுரண்டல், துஸ்பிரயோகம் ஆகியவற்றால் உண்மையாக வருந்தும் எண்ணற்ற, மாசற்ற இளம் சமூதாயத்தினருக்கும் இந்தப் பொழுது போக்குகளை பற்றி ஒருவர் எவ்வாறு விளக்கமளிக்க முடியும்? இந்த வகையில் "சிறுவர்களைத் தனது கரங்களுக்குள் அணைத்து அவர்களுக்கு தனது ஆசீரை அளித்த" (மாற்கு 10:16) இயேசுவின் எதிர்மாறான செயலையும் அதேவேளை இந்தச் சிறுவர்களை வழிதவறி அலையச் செய்பவர்களின் செயலையும் சிந்தனைக்கு எடுப்போம். "இத்தகையவர்களின் கழுத்தில் இயந்திரக்கல்லைக் கட்டி கடலில் தள்ளிவிடுவது அவர்களுக்கு நல்லது. (லூக் 17:2) எனவே தொடர்புசாதனங்களின் தலைவர்களிடம் நான் மீண்டும் வேண்டிக்கொள்வது பொது நன்மையைப் பாதுகாத்து உண்மையைக் கடைப்பிடித்து, தனிப்பட்டவர்களின் மனித மாண்பை மதித்து குடும்பத்துக்குத் தேவையான மரியாதையையும் வழங்கக்கூடிய விதத்தில் செயற்படும்படி தயாரிப்பாளர்களுக்கு அறிவுரை வழங்கி அவர்களுக்கு ஊக்கம் ஊட்டுங்கள்.

திருச்சபைத் தாயானது தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மீட்புச் செய்தியின் ஒளியின் மனிதத்துவத்திற்கு ஒரு ஆசானாகத் திகழ்வதோடு பெற்றோர், கல்விமான்கள், சமூகத்தொடர்பாளர்கள் இளைஞர் ஆகியோருக்குத் தன்னாலான உதவிகளை வழங்கக்கூடிய தருணங்களையும் வரவேற்கின்றாள். இன்று அவளது சொந்தப் பங்கு பாடசாலை ஆகியவற்றின் நிகழ்ச்சித் திட்டங்களில் சமூகத்தொடர்பு சாதனக்கல்வி முக்கிய இடம் வகிக்க வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக அனைத்து விதமான மனித தொடர்புகளுக்கும் மையமான மனித மாண்பிற்கான பார்வையைப் பகிர்ந்துகொள்ள திருச்சபைத் தாயானவள் ஆவல் கொண்டுள்ளாள். "இயேசுவின் கண்களால் உற்று நோக்கி அவர்களது தேவைகளுக்கு அதிகமாக என்னால் அளிக்க முடியும், அவர்கள் ஆசிக்கும் அன்பின் பார்வையை என்னால் வழங்க முடியும்" (அன்பே கடவுள் 18).

# யாருக்கும் தேவையற்ற மனவருத்தத்தையும் வசதியீனங்களையும் எந்தவகையிலும் ஏற்படுத்த வேண்டாம்

### கொழும்பில் இருந்து மக்கள் வெளியேற்றப்பட்டது தொடர்பாக கத்தோலிக்க ஆயர் பேரவை

அண்மையில் தமிழ் மக்கள் கொழும்பில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டது பற்றி இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை அறிக்கை வெளியிட்டுள்ளது.

யாருக்கும் தேவையற்ற மனவருத்தத்தையும் வசதியீனங்களையும் எந்த வகையிலும் ஏற்படுத்த வேண்டாம் என அரசையும் எல்லா அதிகாரிகளையும் வேண்டுகின்றோம். அப்பாவித் தமிழ் பொது மக்கள் பாதுகாப்பாக இருந்து கருமமாற்றுவது உறுதி செய்யப்பட வேண்டும். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அந்த அறிக்கையில் அண்மையில் நூற்றுக் கணக்கான தமிழ் மக்கள் கொழும்பு விடுதிகளில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டு வடகிழக்குப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டது பற்றி கவலைகொள்ளுகிறது. தேசிய பாதுகாப்பை கருத்தில்கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று தெரிவிக்கப் - பட்டுள்ளது.

கொழும்பில் மட்டுமல்ல இலங்கை முழுவதிலும் வன்முறைச் செயற்பாடுகள் நடைபெறாது தடுப்பது தேவை என்பதை உணர்கின்ற அதேவேளை இதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளால் அநேக அப்பாவி மக்கள் தேவையற்ற வசதியீனங்களுக்கும் மன உளைச்சலுக்கும் வேதனைக்கும் உள்ளடக்கப்படுவது வருத்தத்திற்குரியது. சட்டத்தையும் ஒழுங்கையும் சமாதானத்தையும் நடைமுறைப்படுத்த தடையாயிருப்போர்மீது வேறு மனிதாபிமானம் மிக்க நீதியான செயற்பாடுகள் நடைமுறைப் - படுத்தப்பட வேண்டுமென்றும் இதனால் அப்பாவி பொதுமக்கள் தேவையற்ற வசதியீனங்களுக்கு உட்படுத்தப்படக்கூடாது என்றும் மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இறையியலாளருக்கு தாழ்ச்சி தேவை

ஒவ்வொரு இறையியலாளருக்கும் இருக்க வேண்டிய சிறப்புத் தன்மைகளில் ஒன்று தாழ்ச்சி ஆகும் என்று திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ற் மே மாதம் 30 ஆம் தேதி மக்களுக்கு விடுத்த செய்தியில் கூறியுள்ளார்.

அறிவிலும், ஞானத்திலும் சிறந்த பெரிய இறையியலாளர்களில் ஒருவரான தெர்த்தூலியன் (Tertullian) திருச்சபையோடு இணைந்து செயலாற்றுவதற்கு குறைகளை ஏற்றுக்கொள்ள பொறுமையும், எளிமையான மனநிலையும், தாழ்ச்சியும் இல்லாததால் இறுதியில் மாண்டேனிஸ்ட் சபையில் சேர்ந்தார் என்று மேற்கோள் காட்டி திருத்தந்தை கூறினார். குறைபாடுகளை மன்னித்து, மறந்து, ஏற்றுக் கொண்டு, திருச்சபையோடு இணைந்து செயலாற்றக்கூடிய தாழ்ச்சியான மனநிலை பெரிய இறையியலாளர்களுக்கு இருக்கவேண்டும் எனவும் திருத்தந்தை வலியுறுத்திக் கூறினார்.

## மடுப்பதியை சமாதான வலயமாகப் பிரகடனப்படுத்து ஆயர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை

மடுத்தேவாலயத்தைச் சுற்றியுள்ள பிரதேசத்தை சமாதான வலயமாகப் பிரகடனப்படுத்துவது தொடர்பாக கொழும்பு பேராயர் ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகை மற்றும் மன்னார் சிலாபம் ஆயர்கள் அண்மையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

அலரி மாளிகையில் அண்மையில் இச்சந்திப்பு நடைபெற்றது. இப்பேச்சின்போது மடுத் தேவாலயத்துக்கு வழிபாடுகளுக்கு வரும் பக்தர்களின் வசதிகள் மற்றும் பாதுகாப்புத் தொடர்பாக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டன. வடக்கு கிழக்கு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் மற்றும் மீள்குடியேற்றம் தொடர்பாகவும் ஜனாதிபதி ஆயர்களிடம் நீண்ட விளக்கமளித்தார். இப்பிரதேசங்களுக்கு விஜயம் செய்து நிலமைகளை நேரில் கண்டறியும்படியும் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்தார்

ஜனாதிபதி பிரதமராக இருந்தபோது மடு ஆலயத்துக்கு வழிபாட்டுக்காக வரும் பக்தர்களின் வசதியை முன்னிட்டு பல திட்டங்களை செயற்படுத்தியதையும் நினைவுபடுத்திய ஆயர்கள் தொடர்ந்தும் பக்தர்கள் சுதந்திரமாக வழிபாடுகளை நிறைவேற்றக்கூடிய சூழ்நிலையை உருவாக்க ஜனாதிபதி அர்ப்பணிப்புடன் செயற்படுவாரெனவும் நம்பிக்கை தெரிவித்தனர்.

பரிசுத்த பாப்பரசரை சமீபத்தில் தரிசித்தபோது மடுயாத்திரை மேற்கொள்ளும் பாதுகாப்புத் தொடர்பாக வத்திக்கானிலுள்ள ராஜாங்க செயலாளருடனும் பேச்சு நடத்தியதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

## உரோமாபுரியில் இரத்தினபுரி புதிய ஆயரின் திருநிலைப்படுத்தல்

பெனடிக்ரன் சபையை சேர்ந்த கிளிற்றஸ் சந்திரசிறி பெரேரா அடிகளாரை இரத்தினபுரி மறை மாவட்டத்தின் ஆயராக திருத்தந்தை நியமித்துள்ள நிலையில் இவரின் ஆயர்த்துவத் திருநிலைப்படுத்தல் நிகழ்வு யூலை மாதம் 11 ஆம் திகதி உரோமாபுரி 12 அப்போஸ்தலர்கள் ஆலயத்தில் அமைதியாக நடைபெற்றது.

புதிய ஆயராகத் தெரிவுசெய்யப்பட்ட கிளிற்றஸ் சந்திரிசிறி பெரேரா அடிகளார் யூலை மாதம் 01 ஆம் திகதி உரோமாபுரிக்குப் பயணமாகி திருநிலைப்படுத்தலின் பின்னர் 23ஆம் திகதி நாடு திரும்பி அவிசாவளையில் உள்ள இரத்தினபுரி ஆயர் இல்லத்தில் தம் பணிகளை ஆரம்பித்தார். யூலை மாதம் 28ஆம் திகதி பணியேற்பு நிகழ்வு புனித இராயப்பர் சின்னப்பர் பேராலயத்தில் நடைபெற்றது. பெனடிக்ரன் சபையின் முதல்வராக கண்டி மொண்டேபானோ இல்லத்தில் வசித்துவந்த கிளிற்றஸ் சந்திரிசிறி பெரோ அடிகளார் 1973ஆம் ஆண்டு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டவர். கண்டி மறை மாவட்டத்தின் குரு முதல்வராகவும் அம்மறைமாவட்டத்தின் கத்தோலிக்க தனியார் பாடசலைகளின் மேலாளராகவும் இவர் பணியாற்றியுள்ளார். கண்டி மறைமாவட்டத்தில் நீண்டகாலம் பணியாற்றிய இவர் தற்போது இரத்தினபுரி மறைமாவட்டத்தின் ஆயராக நியமிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## சமூகத் தொடர்பு ஊடகங்கள் பற்றி திருத்தந்தையின் அறைகூவல்!


மே மாதம் 20 ஆம் நாள் திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ற் தூய பேதுரு சதுக்கத்தில் மக்களுக்கு உரையாற்றுகையில் அண்மையில் தான் பயணம் செய்த பிரேசில் நாட்டிற்காகவும், அங்கு நடைபெறும் லத்தீன் அமெரிக்க ஆயர்களின் 5வது மாநாடு வெற்றிகரமாக நடைபெறவும் செபிக்க கேட்டுக்கொண்டார். மேலும் ‘குழந்தைகளும், ஊடகங்களும் இன்றைய கல்வித் துறையில் மாபெரும் சவால்’ என்ற தலைப்பில் நடைபெற உள்ள சமூகத் தொடர்பு நாளைக் குறிப்பிட்டு பேசினார். வெகுசன ஊடகங்களை முறையாகப் பயன்படுத்துவது குறித்து பெற்றோர்கள், ஆசிரியர்கள், திருச்சபைத் தலைவர்கள், குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். ஊடகங்கள் தனிமனித வாழ்வின் மகத்துவத்தையும், மனித வாழ்வின் தனித்துவத்தையும் உலகிற்குப் பறைசாற்ற வேண்டும். அதன் பயன்பாடு முறையாக அமைய தகுந்த பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்றும் உறுதி கூறினார். ஊடகங்கள் வழியாக ஏற்படும் சமூக விரோதச் செயல்களையும் முற்றிலுமாக தவிர்க்க வேண்டும். சமூகத் தொடர்பு ஊடகங்கள் மனித ஒழுக்க நெறிகளைச் சீர்குலைக்கும் செயற்பாடுகளை நாம் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது என்றும் பொது நலனை கருத்தில்கொண்டு ஊடகங்கள் செயற்பட வேண்டும் என்றும் திருத்தந்தை தம் உரையில் தெளிவுபடுத்தினார்.

## முத்தி. அல்போன்சாவுக்கு புனிதர் பட்டம் வழங்க திருத்தந்தை அனுமதி!

திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற், முத்திப்பேறுபெற்ற அல்போன்சாவுக்கு புனிதர் பட்டம் வழங்க அனுமதி அளித்துள்ளார். இந்தியாவில் கேரள மாநிலத்தைச் சார்ந்த அமலவை கன்னியர் மடத்தின் துறவியாக வாழ்ந்த முத்திப்பேறுபெற்ற அல்போன்சாவுக்கு புனிதர் பட்டமும், ஜப்பான் நாட்டு வேதசாட்சிகள் 188 பேருக்கு முக்திபேறு பெற்ற பட்டமும் வழங்க உத்தரவு பிறப்பித்துள்ளார்.

முத்திபேறுபெற்ற அல்போன்சா 1910 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19 ஆம் தேதி கேரள மாநிலத்தில் உள்ள குடமலூர் நகரில் முட்டத்வத்துபடைத்து என்ற இடத்தில் பிறந்தார். தூய பிரான்சிஸ்கன் மூன்றாவது சபையில் சேர்ந்து 1946ஆம் ஆண்டு பரனங்கானம் என்ற இடத்தில் ஜூலை 28 இறந்தார். 1986 ஆம் ஆண்டு திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் இந்தியாவிற்கு வருகை தந்தபோது கோட்டயத்தில் உள்ள நேரு ஸ்டேடியத்தில் பிப்ரவரி மாதம் 8 ஆம் தேதி அன்று அவர்களுக்கு முத்திபேறு பட்டம் வழங்கினார். அருட்சகோதரி அல்போன்சாவின் வியாதியும், அதனால் அவர் பட்ட துன்பமும் அவரை இயேசுவின் சிலுவைப்பாடுகளோடு இணைத்துத்தான் அவரைப் புனிதர்களின் பாதைக்கு வழி அமைத்தது என்று திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் பாராட்டியிருந்தார்.

## திருத்தந்தையுடன் பிரேசில் நாட்டு இளையோர் சந்திப்பு!



இளையோர் தங்கள் நண்பர்களுக்கு திருத்தூதர்களாக செயற்பட வேண்டும் என்று அழைப்பு விடுத்தார் திருத்தந்தை. பிரேசில் நாட்டில் திருப்பயணம் மேற்கொண்ட திருத்தந்தை இளைஞர், இளம் பெண்களைச் சந்தித்து உற்சாகப்படுத்தினார். கடவுளின் ஆழமான அன்பைச் சுவைத்து அனுபவித்தவர்கள் மட்டுமே இறைத் தூதர்களாக, சீடர்களாக இருக்க முடியும் என்று கூறினார்.

பிரேசில் நாட்டு திருப்பயணத்தில் இச்சந்திப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருந்தது. இளைஞர்கள் கையில் எதிர்காலம் இருப்பது மட்டுமல்ல, அவர்கள் நிகழ்காலத்தின் உயிரோட்டம் என்பதையும் சுட்டிக்காட்டி திருத்தந்தை பேசினார். இளையோர் தங்கள் நண்பர்களுக்கு மத்தியில் ஒவ்வொருவரும் இறைத் தூதராக செயற்பட வேண்டும். அப்படிச் செயற்படுவதால் ஒருவர் மற்றவரின் ஆன்மீக மற்றும் மனிதாபிமான செயற்பாடுகளில் தனிக்கவனம் எடுத்து அடுத்தவர் வளர்ச்சியில் அக்கறையோடு செயற்பட முடியும் என்றும் தெரிவித்தார்.

## பார்வை இழந்த முதல் இந்தியக் குரு!

கேரள மாநிலத்தில் அருட்தந்தை வில்சன் தாமஸ் காலிக்கல் (Fr. Wilson Thomas Kallikkal) பார்வையற்றவராகப் பிறந்தார். இவர் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டுள்ளார்.

எர்ணாகுளம் கர்தினால் மேதகு வர்க்கி விதயாத்தில் (Cardinal Varkey Vidhayathil) 2006 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் தேதி இவரை குருவாக அருள் பொழிவு செய்தார். இவருடைய விடாமுயற்சியும், தன்னம்பிக்கையுமே இவரை ஒரு குருவாக மாற்றியது என்று கர்தினால் குறிப்பிட்டுள்ளார். இவர் திருச்சபை வரலாற்றில் முதுகலைப்பட்டம் பெற்றவர். கேரள மாநிலத்தில், முரிங்கூர் (Muringoor) என்ற பகுதியில் இவர் பார்வையிழந்தவர்களுக்கான துறவற சபையை நிறுவி பயிற்சி அளித்து வருகின்றார். இதில் மொத்தம் 40 உறுப்பினர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

“உடல் குறைபாடு உள்ளவன் என்பதை தான் ஒருபோதும் உணர்ந்ததே இல்லை” என்று இவர் கூறியுள்ளார். ஒருவர் குருவாக திருநிலைப் - படுத்துவதற்கு பார்வையிழப்பு திருச்சபையின் சட்டத்தில் தடையாக இருக்க முடியாது என்று கர்தினால் வலியுறுத்தி கூறியுள்ளார்.

# பங்குத்தள சங்கதிகள்

## யுத்தகாலச் சூழ்நிலையிலும் விடத்தல்தீவு புனித இயாகப்பர் ஆலயத் திருவிழா

விடத்தல்தீவு புனித யாகப்பர் ஆலயத் திருவிழா யுத்த காலச் சூழ்நிலையிலும் பங்குத் தந்தை அருட்பணி எஸ். சத்தியராஜ் அடிகள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. 16.07.2007 மாலை 6 மணிக்கு பங்குத்தந்தை புனிதரின் கொடியை ஏற்றி நவநாளை தொடக்கி வைத்தார்.

நவநாட்களில் அருட்பணி. பீட்ஸ்மன் (அ.ம.தி.) அடிகள் செபவாழ்வை மையப்படுத்தி தமது மறையுரைகளை நிகழ்த்தினார். 24.07.2007ல் அருட்பணி சுரேஸ் றெவல் அடிகள் தலைமையில் நற்கருணை ஆராதனை நடைபெற்றது.

25.07.2007இல் திருநாட் திருப்பலிய்ய மடுக்கோட்ட முதல்வரும் மடுத் திருப்பதிப் பரிபாலகருமான அருட்பணி. எமிலியானுஸ்பிள்ளை அடிகள் தலைமை தாங்கி, ஏனைய அருட்பணியாளர்கள் சகிதம் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தார். இத்திருப்பலியில் மறையுரையாற்றிய சுரேஸ் றெவல் அடிகள், “புனித இயாகப்பர் இயேசுவின் அழைப்பை ஏற்று அவரது நற்செய்திகளை அறிவித்து யேசுவுக்காய் தம் உயிரையே அர்ப்பணித்தவர். இந்த புனிதரின் வீரம் மிக்க விசுவாச வாழ்வை வாழ்வோம்” எனத் தெரிவித்தார். திருப்பலி முடிவில் அலங்கார ஊர்தியில் புனிதரின் திருச்சுருபம் ஊரைச்சுற்றி பவனியாக கொண்டுவரப்பட்டது. திருச்சுருப ஆசீரும் இடம்பெற்றது.

## இடம்பெயர்ந்த நிலையிலும் தோட்டவெளியில் புனித இயாகப்பர் ஆலயத் திருவிழா

தோட்டவெளி ஜோசப்வாஸ் நகரில் வாழும் விடத்தல்தீவு பங்கு மக்கள் விடத்தல்தீவுக்கு வர இயலாத நிலையில் தோட்டவெளி பங்குத்தந்தை அருட்பணி. ஏ. இராயப்பு அடிகளாரின் அனுசரணையோடு 25.07.2007 காலை 6.30 மணிக்கு திருநாள் திருப்பலியுடன் புனித இயாகப்பரின் விழாவைச் சிறப்பாக நிறைவு செய்திருப்பது எல்லோருக்கும் இரட்டிப்பான ஆன்மீக மகிழ்ச்சியைத்தருகின்ற ஒரு சிறப்பம்சமாகும்.

## விடத்தல்தீவில் முதன்நன்மை விழா

புனித இயாகப்பர் ஆலயத் திருநாள் நவநாட்களில் விடத்தல்தீவுப் பங்கைச் சேர்ந்த 24 சிறுவர், சிறுமியர்களுக்கு கடந்த 22.07.07 ஞாயிறு தினம் நற்கருணை அருட்சாதனம் வழங்கப்பட்டது.

மன்னார் மறைமாவட்ட இயேசு சபை அகதிகள் பணி இயக்குனர் அருட்பணி. என். பாக்கிய றஞ்சித் அடிகள் தலைமை தாங்கி, பங்குத்தந்தை, மற்றும் அருட்பணியாளர்களோடு முதன்நன்மைத் திருப்பலியைக் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தார். பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், ஆசிரியர்கள், பெற்றோர் போன்றோர் இந்த அருள் நிகழ்வைச் சிறப்பாக ஆயத்தம்செய்து, ஒழுங்குபடுத்தியிருந்தனர்.

*பே. இராயப்பு,*
*தன்னார்வ பணியாளர், விடத்தல்தீவு*



# சிறுவர் பொழில்



## எது செல்வம்?

பா. றெஜீஸ்,
சூரியகட்டைக்காடு



அன்றொருநாள் தரம் 10ல் கல்விகற்கும் ஜர்சனுடைய வீட்டில் ஒரே வாய்த்தர்க்கமாக இருந்தது. "நீ இம்முறை விளையாட்டுப்போட்டி நிகழ்ச்சிகள் எதிலையும் சேரக்கூடாது. நீ எங்களுக்கு ஒரே மகன். உனக்கு உடம்புல ஏதாவது நோவு நோக்காடு என்றால் எங்களால தாங்கேலாது" இது தாயின் கூச்சல். "விளையாட்டுப் போட்டியில எடுக்கிற சேட்பிக்கேற்ஸ் நிறையப் பிரயோசனப்படுமென்று எங்க பி. ரி. சேர் அடிக்கடி சொல்வார். அதனால என்னத் தடுக்காதைங்க அம்மா" என்றான் ஜர்சன். "அம்மா சொல்றதக் கேளு மகன். நான்கூட உன்ன இன்னும் சைக்கிள்கூட ஓடவிடாம பைக்கில கூட்டிப்போறன்" இது அப்பாவின் இரைச்சல். எவ்வளவோ வாதாடிப்பார்த்த ஜர்சன் பெற்றோரின் கண்டிப்பிற்கு அடங்கி எல்லா மாணவர்களும் விளையாட்டுப் பழகச் செல்கையில் இவன் மட்டும் தனியாக ஏற்பாடான ரியூசனுக்குப் போனான்.

ரியூசன் முடிந்து வந்தபோது தோட்டத்தில் வேலை செய்து கொண்டு நின்ற தந்தையிடம், "அப்பா நானும் தோட்டத்தைக் கொத்தட்டுமா?" என்ற ஜர்சனை "வேணாம் மகன், கால்ல கொத்திப் போடுவாய். வீணா உடம்பு களைக்கும். நீ சும்மா நிண்டு பார்" என்றார் அப்பா. மாலையில் மாடுகளைக்கூட அவனது அப்பாதான் சாய்த்து வந்து கட்டுவார்.

ஜர்சன் வீட்டில் ஞாயிற்றுக் கிழமைகளிலென்றால் விசேட புரியாணிச் சமையல் இடம்பெறும். இது தவிர நாளாந்தம் விதவிதமான உணவுகளை அவனது தாய் சமைப்பாள். உறைப்பைக் குறைத்து இனிப்புப் பண்டங்களே அதிகம் தயாராகும். அவனும் தனிப்பிள்ளை என்பதால் வயிறு புடைக்க உண்பான். பாடசாலையில் நொறுக்குத் தீன் வாங்கவும் காசு இருக்கும்.

கிறிஸ்தவ முறைப்படி ஒருசந்தி, மாமிசத் தவிர்ப்பு நாட்களில்கூட அவன் பெற்றோர் மட்டுமே அதை அனுசரிப்பர். மகனைப் பட்டினியிருக்க விடுவதில்லை. இதனால் ஜர்சன் உடல் அழகிலும், கல்வியறிவிலும் ஏனைய மாணவர்களைவிடச் சற்று மேம்பட்டே காணப்பட்டான். "மகன் ஸ்கூல்ல காலையில செய்யிற உடற்பயிற்சி உனக்குக் கஸ்ரமாயிருந்தா அதச் செய்யாம விடு. வேணுமெண்டா அதிபருக்கு ஒரு கடிதம் தாறன்" என அம்மா கூற, "எனக்கென்னம்மா உடல் ஊனமா? இல்லையே! உடற்பயிற்சி செய்தால்தான் உடல் நல்ல சுகதேகமாயிருக்கும். புத்துணர்ச்சியோட நல்லாப்படிக்கலாமெண்டு அதிபர் அடிக்கடி சொல்வார்" என ஜர்சன் அளித்த விளக்கத்தை அம்மா காதில் போட்டுக்கொள்ளாமல், "தம்பி நேரமாகுது, அப்பா வெயிற் பண்றார். கெதியா ஸ்கூலுக்குப் போ" என்றாள்.

நாட்கள் நகர்ந்தன, ஜர்சன் தரம் 11ற்கு வந்ததும் அவன்மீதான வீட்டார் அழுத்தம் அதிகரித்தது. காலையில் நேரத்தோடு எழுந்து படிக்க வேணும், வேளாவேளைக்கு ரியூசனுக்குப் போகணும். ஒரு நாள் ஜர்சன் ஸ்கூல் முடிந்து வந்ததும், "அப்பா! ஓ. எல். வகுப்பில தச்சுவேலை, கொம்பியூட்டர் போன்ற பாடங்கள் அறிமுகப்படுத்தியிருக்கிறாங்க. எனக்குத் தச்சுவேலை பழக விருப்பம். அதனால் எதிர்காலத்தில நம்மட ஊரிலேயே தளபாடங்களைச் செய்யலாம்" என்ற ஜர்சனைத் தடுத்த அப்பா, "நீ கட்டாயம் கொம்பியூட்டர் படிக்கணும். அதுதான் இப்ப உலக வழி" என்றார் சட்டென. வீட்டில் - கிணற்றில் மோட்டார், பைப்லைன், மின்சாரத்தில் இயங்கும் பல பொருட்கள், நண்பர்களுடன் தொடர்புகொள்ள ரெலிபோன். ஆனால் ரி. வி இல்லை. காரணம் ஜர்சனின் படிப்பு.

ஸ்கூலில் ஜர்சனை சக மாணவர்கள் 'குண்டு' என்று கிண்டல் செய்து, "விளையாட்டுப் போட்டியில குண்டெறியவாவது வாவண்டாப்பா" என அழைத்தாலும் அவன் போவதில்லை. நாட்கள் நகர்ந்தன. ஜர்சன் ஏ. எல் படித்துப் பல்கலைக்கழகம் சென்று பட்டப்படிப்பும் முடித்து வந்த அவனுக்கு உடனடியாக அரசவேலை கிடைக்காதென்பதால் என். ஜீ. ஓ.வில் எதிலாவது சேரலாமென விண்ணப்பித்தான். நல்ல சம்பளத்துடன் வேலையும் கிடைத்தது. வீட்டாரும் சந்தோசப்பட்டனர்.

அது ஒரு பீல்ட் வேக் என்பதால், ஆரம்பத்தில் பல இடங்களுக்கு சைக்கிளில் செல்லுமாறு பணிக்கப்பட்டான். ஆனால் சரியாகக்கூட சைக்கிள் ஓடத்தெரியாத அவன் ஒருவாறு பழகிவிட்டான்.

சில நாட்கள் நகர்ந்தன. அவனுக்கு சைக்கிள் ஓடும்போது மூச்சு வாங்கியது. இடையிடையே தலைச்சுற்றும் ஏற்பட்டது. அடிக்கடி சிறுநீர் கழிக்கும் தேவையும் ஏற்பட அவனது அப்பா வைத்தியரிடம் கூட்டிச் சென்றார். பரிசோதித்த வைத்தியர் ஜர்சனுக்குப் பிறசரும், அத்துடன் ரி.பி க்கான ஆரம்ப அறிகுறிகளும் இருப்பதாகக் கூறினார். இதற்கு நல்ல உடற்பயிற்சிகளும், உணவுக் கட்டுப்பாடும் தேவையெனக் கூறப்பட்டது.

இந்த அறிவுரைகளைக் கேட்ட தந்தையோ ஜர்சனின் பாடசாலை நாட்களில் தாம் போட்ட தடைகளே அவனது வாழ்விற்குத் தடைக்கற்களாக அமைந்தன என்று எண்ணி மனம் நொந்தவராய் மகனையும் அழைத்துக்கொண்டு வீடு நோக்கிப் பயணமானார்.

## சிந்தனைத் துளிகள்

- உண்மையும் எண்ணெயும் எப்போதும் மேலிருக்கும்.
- பானையில் தேனில்லாவிட்டாலும் நர்விலாவது அதை வைத்திருக்க வேண்டும்.
- பொறுமையாளன் இறுதியில் தான் விரும்பியதை அடைவான்.
- எல்லாவற்றையும் பார்க்கும் கண் தன்னை மட்டும் பார்ப்பதில்லை.
- நண்பனை அவன் தவறுடன் சேர்த்து நேசி.
- மிகச்சிறந்த கண்ணாடி பழைய நண்பன்.
- ஒரு பெண்ணின் நாவு செம்மறியின் வால் போன்றது.
- நல்ல நண்பன் மழைக்கால வெயில் போன்றவன்.

*ப. நிறஞ்சலா*
*இல - 35, புதிய மூர்வீதி, மன்னார்*

## சற்றுச் சிந்தி



- கோபமாய்ப் பேசினால் குணத்தை இழப்பாய்
- அதிகமாய்ப் பேசினால் அமைதியை இழப்பாய்
- அதிகாரமாய்ப் பேசினால் அன்பை இழப்பாய்
- வெட்டியாய்ப் பேசினால் வேலையை இழப்பாய்
- வேகமாய்ப் பேசினால் அர்த்தத்தை இழப்பாய்
- ஆணவமாய்ப் பேசினால் ஆற்றலை இழப்பாய்
- அவதூறாய்ப் பேசினால் இறையருளை இழப்பாய்.

*ம. ஸ்ரெலா, மாவிலங்கேணி, முருங்கன்*

## மெல்லச் சிரிங்க... மெல்லச் சிரிங்க...

**ஓவியர்** :- தண்ணீர்ப் பஞ்சம் போய்விடுமோ என்று கவலையா இருக்கு!
**நண்பன்** :- என்ன உளறுகிறாய்?
**ஓவியர்** :- நண்பா ! தண்ணீர்ப் பஞ்சத்தை மையமாக வைத்து சுமார் ஆயிரக்கணக்கான "ஜோக்குகள்" தயாரித்து வைத்திருக்கின்றேன். தண்ணீர்ப் பஞ்சம் போய்விட்டால் அத்தனையும் வீணாப் போகுமே!

* * * * *

**மனைவி** :- புதுமாதிரிக் கைக்குட்டைகள் வந்திருந்தன. அதில் உங்களுக்கு ஒரு ஐந்து வாங்கிக்கொண்டு வந்திருக்கிறேன்.
**கணவன்** :- அவ்வளவு எதற்கு? தேவை இல்லையே!
**மனைவி** :- (சிரித்த முகத்துடன்) அத்தோடு அதுக்குப் பொருத்தமாய்ப் பார்த்து எனக்கு ஒரு புடவை மட்டும் எடுத்துக் கொண்டேன்.

*ர. ஸ்ராலின் ஜோர்ஜ், கருங்கண்டல், வட்டக்கண்டல்*

* * * * *

**ஒருவர்** :- எனக்கு பிடிக்காத மரக்கறின்னா அது பூசணிக்காய்தான்.
**மற்றவர்** :- ஏன்?
**ஒருவர்** :- அது என் பொண்டாட்டி மாதிரியே இருக்குதே!

*ஜே. கிறிஸ்ரி பெனான்டோ, தலைமன்னார் மேற்கு*



**ஆசிரியர்** :- பிள்ளைகளே! தாமிரபரணி எங்கே ஓடுது?
**மாணவன்** :- பொங்கலுக்கு ரிலீசாகி எல்லாத் தியேட்டர்லேயும் ஓடுது சார்.

* * * * *

**மகன்** :- அப்பா, நான் விளையாட்டில வாங்கின பரிசுப் பொருட்களை வைச்சு பரிசுப் பொருள் கடையே வைக்கலாம், என்னப்பா?
**அப்பா** :- ஆமாண்டா மகனே! நீ பரீட்சையில வாங்கின முட்டைகளை வச்சு ஒரு முட்டைக்கடையே ஆரம்பிக்கலாம்.


* * * * *

**ஆசிரியர்** :- பிள்ளைகளே! உடற்பருமன் குறைய என்ன செய்ய வேண்டும்? ராமு சொல்லு.
**ராமு** :- என்ன ரீச்சர் செய்யணும்?
**ஆசிரியர்** :- தினமும் கொஞ்ச நேரம் நீந்த வேண்டும்.
**ராமு** :- திமிங்கலம் ஒரே நீந்துகிறதே ரீச்சர். பருமன் குறைஞ்சிருக்கா?

*இ. ஸ்ரீபனா, முருங்கன்.*

# கவிதைப் பூக்கள்

## இறைவார்த்தை



பாவத்தை அகற்ற இறைவார்த்தை
பிறரை மன்னிக்க இறைவார்த்தை
அன்பைப் பகிர இறைவார்த்தை
கருணை காட்ட இறைவார்த்தை
உறவை வளர்க்க இறைவார்த்தை
அமைதி அளிக்க இறைவார்த்தை
நிம்மதி அளிக்க இறைவார்த்தை
இறைவழி செல்ல இறைவார்த்தை
சொத்தைப் பகிர இறைவார்த்தை
இறைவனை அறிய இறைவார்த்தை

*க. யசிந்தா (இதையா), உமனகரி, நானாட்டான்*

## பிரிவு

பாருக்குள் மானிடனாய்ப் பிறந்து
நட்பு எனும் சொல்லால் இணைந்தாலும்
பிரிவு எனும் சொல்லால் நாம் இன்று பிரியப்போகின்றோம்.

இந்தப் பிரிவு நிரந்தரம்! - இதைச் சொல்ல
எனக்கு மனசும் இல்லை தாங்குவதற்கு இதயமும் இல்லை.
நாம் பிரியும்போதுதான் தெரிகிறது நமது நட்பின் வலிமை.

இன்று பிரியப்போகின்றோம் எதைவிட்டுப் பிரிவது?
நமது பாடசாலையை விட்டுப்பிரிவதா?
இல்லை உயிர் நண்பர்களைவிட்டுப் பிரிவதா?

பாடசாலை நந்தவனத்தில் நமது நட்பின் பாதச் சுவடுகள்.
கண்ணீர்த் துளிகளாய் பதிக்கப்பட்டிருக்கின்றது.
ஒவ்வொன்றும் நம் நட்பின் உயிர்ச் சுவட்டை
எழுப்பிக்கொண்டே இருக்கும்.

நிழல்களுக்கு உயிர் கொடுக்கும்
உருவங்கள்போல் நம் நட்பைவிட்டுப் பிரிந்துவிட்டோம்
நட்பே இனி நீ யாரோ! நான் யாரோ!
ஒன்றாய் இருந்தோம் ஒருமித்துச் செயற்பட்டோம்.

நமக்குள் எந்த ஒழிவு மறைவும் இல்லாமல்
சோசலிசமாய்ப் பழகினோம், இனி முடியுமா?
நினைத்தால் வருகிறது கண்ணீர்!

*ஆர். ராதிகா, 9ம் வட்டாரம், வங்காலை*

## அன்பு ஊற்று



அன்பே தெய்வம், அன்பே செல்வம்
அன்புக்குமுண்டோ அடைக்குந்தாழ்?

முகிலின் அன்பு நீர் நதியாக
நீரின் அன்பு நெல் மணியாக
நெருப்பின் அன்பு குலவிளக்காக
இறைவன் அன்பு நற்குடும்பமாய் விளங்கும்.

தாயின் உதிரத்தில் ஊறுவ்து அன்பு!
தந்தையின் உழைப்பில் விளைவது அன்பு!
தலைவனின் நீதியில் தவழ்வது அன்பு!
இறைவனின் ஒழுங்கில் அனைத்தும் அன்பு!

*எஸ். வினோதினி (யூலி), தரம் : 11A*
*மன்/ பரிகாரி கண்டல் அ.த.க. பாடசாலை*

## எம் இயேசு

புது மலராய் மலர்ந்தாரே - எம் இயேசு
புது மணம் பரப்பினாரே - எம் இயேசு
புதைந்துபோன எம் மனங்களைப் புதுப்பித்தாரே - எம் இயேசு
பாவத்தைப் போக்க வந்துதித்தாரே - எம் இயேசு
புதுப்பொழிவு பொழிந்தாரே - எம் இயேசு
எம்மை நல்வழிப்படுத்த
புதுமலராய் மலர்ந்தாரே - எம் இயேசு
விரைந்து சென்றிடுவோம் நாம் - பாலகன் இயேசு
எம் உள்ளங்களில் பிறந்திட வேண்டிடுவோம்.

*க. அனிற்றன் தியோகுப்பிள்ளை (கிளின்ரன்)*
*உமனகரி நானாட்டான், தரம் : 03*

## துளிப்பா



**வெற்றி**
கடின உழைப்பின்
கைக் கூலி.

**எறும்பு**
சுறுசுறுப்பைக்
கற்றுத்தரும் உயிருள்ள
அகராதி.

**பார்வை**
ஈரப் புன்னகையையும்,
இனமறியாக் கலக்கத்தையும்
வெளிப்படுத்தும் சமிக்கை.

**உண்டியல்**
வட்டியில்லா வைப்பகம்.

**பறவைகள்**
சுதந்திரத்தை சுவாசிக்கும்
உயிருள்ள உத்தமர்கள்.

**மரணம்**
துயரம் மறந்து - விடைபெறும்
இனிய பொழுது.

**காலம்**
முட்கள் நகர முண்டியடிக்கும்
வெகுஜனப் புகையிரதம்.

**பிரிவு**
காத்திருப்பின் ஆரம்பம்
எதிர்பார்ப்பின் அறிமுகம்.

*த. சக்தி கமலம், செட்டிகுளம்*

திருத்தந்தை 16ம் பெனடிக்ற்

# தள்ளாத வயதிலும் தளராது தொடரும் திருத்தந்தையின் பணிப்பயணம்

திருத்தந்தை 16ம் பெனடிக்ற் பாப்பரசர் ஏப்ரல் மாதம் 16ம் திகதி தமது 80ஆவது பிறந்த தினத்தை நிறைவு செய்தார். மறைந்த இரண்டாம் யோவான் பவுல் பாப்பரசர் தனது 80ஆவது வயதை 2000ம் ஆண்டில் நிறைவு செய்தபோது அவர் பாரம்பரியத்தை உடைத்து தமது பதவியில் இருந்து இறங்குவாரா? தனது உடலின் இயலாமைக்குப் பணிந்து தனது பதவியை இராஜினாமா செய்வாரா? என்ற கேள்விக் கணைகளுடனேயே பலர் அவரைப் பார்த்தனர்.

16ம் பெனடிக்ற் பாப்பரசரை அவரது 80 ஆவது . வயதில் பார்த்தபோது பலரின் ஏக்கங்களும் எதிர்பார்ப்புகளும் தோற்றுப்போனதோ என்றே எண்ணத் தோன்றியது அவரின் புதிய திட்டங்களும் தீர்மானங்களும் எங்கே? என்ற ஏக்கத்துடனேயே பலர் அவரைப் பார்த்தனர். ஆனால் 16ஆம் பெனடிக்ற் பாப்பரசரோ இன்னும் ஆன்ம பலத்தோடும் உடல் நலத்தோடும் தம் நீண்ட பயணத்தை நடந்து சாதிக்கப் போகின்றேன் என்று கட்டியம் கூறுபவராகவே துணிந்து நிற்கின்றார்.

இயேசு பற்றிய அவரது நூல் பல மொழிகளில் அண்மையில்தான் வெளியாகி கிறிஸ்து இயல் பற்றிய பாப்பரசரின் கருத்துக்களை பரவவைத்திருந்தது.

இதற்குச் சற்று முன்னதாக மார்ச் மாதத்தில் நற்கருணை பற்றிய அறிக்கையை வெளியிட்டு அவர் திருப்பலி பற்றிய தம் கருத்துக்களை வெளியிட ஆயத்தமாக இருந்தார்.

வத்திக்கானில் நடைபெற்ற உச்சி மகாநாட்டின் பின்னர் சீன கத்தோலிக்கர்கள் பற்றிய பேச்சுவார்த்தையை அரசுடன் மேற்கொள்ள இருப்பதாகவும் அது திருச்சபையினுள் இருந்த பிரிவினையை நீக்கும் என்றும் அறிவித்திருந்தார்.

பிறேசிலுக்கான தனது பயணத்தைத் தொடரவும் இலத்தின் அமெரிக்க ஆயர்களுடன் மகிழ்வோடு கலக்கவும் ஆயத்தமாக இருந்தார்.

ஏப்ரல் மாதம் 19ம் திகதி தனது பாப்பிறையின் இரண்டாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடியபோது மக்கள் மத்தியில் மகிழ்வாகவும் மன உறுதியோடும் உடல் நலத்தோடும் தோன்றினார். தாம் தமது பணியின் காரணமாக மிகக் குறைந்த நேரமே தமது காரியாலயத்தில் அமர்ந்திருப்பதாகத் தெரிவித்த அவர் பரிசுத்த வாரத்தில் 10 முக்கிய வழிபாட்டு நிகழ்ச்சிகளில் கலந்து தமது உடல் உள உறுதியை வெளிப்படுத்தினார்.

கத்தோலிக்க திருச்சபையில் பணியாற்றுவோரில் 80 வயதுக்கு முன்னர் தமது பணிகளில் இருந்து ஓய்வுபெறும்படி கட்டாயப்படுத்தப்பட முடியாத ஒருவர் பாப்பரசராவார். கருதினால்மார்களும் வத்திக்கான் செயலகத்தில் பணியாற்றுவோரும் 80 வயதோடு தம் பணிகளில் இருந்து ஓய்வு பெறவேண்டும். ஆயர்கள் மற்றும் உரோமை கியூரியாவில் பணியாற்றுவோர் 75 வயதில் தமது பணிகளில் இருந்து ஓய்வு பெறவேண்டும்.

16ம் பெனடிற்க் பாப்பரசரே வத்திக்கான் பணியாளர்களுள் மிக வயதானவராக இருக்கிறார். மற்றவர்கள் அவருக்கு வெகு தூரத்தில் இல்லை. வத்திக்கானில் இயங்கும் 25 முக்கிய ஆணையங்களில் பணியாற்றுவோரில் ஒருவர் மட்டும்தான் 65 வயதுக்கு உட்பட்டவராக இருக்கிறார். இங்கு பணியாற்றுவோர் எல்லோரும் 2ம் யோவான் பவுல் பாப்பரசர் காலத்தில் இருந்தே பணியாற்றிக்கொண்டிருப்பவர்கள் ஆவார்.

இங்கு குறிப்பிடப்பட வேண்டியது என்னவென்றால் வரவிருக்கும் 12 மாதங்களில் வத்திக்கானில் இயங்கும் முக்கிய 25 ஆணையங்களில் 10இன் பொறுப்பாளர்கள் பதவியை முடிவு செய்யும் வயதை அடையப்போகிறார்கள் என்பதாகும். இந்தப் பத்து புதிய ஆணையங்களுக்கும் தலைவர்களை நியமிக்கும்போதுதான் 16ம் பெனடிக்ற் பாப்பரசர் தமது முத்திரையை பொறிக்கப்போகின்றார், தமது எண்ணங்களைச் செயற்படுத்தப் போகிறார். இந்த நியமனங்களைத் தமது திட்டங்களுக்கும், தீர்மானங்களுக்கும் ஏற்றவிதமாக அமைக்கப் - போகிறார்.



இந்த மாற்றங்களில் எல்லா நிலைகளிலும் பணியாற்றும் வத்திக்கானின் உயர் அதிகாரிகள் கொண்டுவரப்படலாம். 16ம் பெனடிக்ற் பாப்பரசர் தமது ஆட்களையும், தமது திட்டங்களை நிறைவேற்றுவோரையும் இன்னும் அதிகாரத்தில் அமர்த்தவில்லை என்று ஏமாந்துபோன பலர் இருக்கவே செய்கின்றனர். வத்திக்கான் அதிகாரி ஒருவர் கருத்து தெரிவிக்கும்போது "அவர் யாரையும் புண்படுத்த விரும்பவில்லை. எனவேதான் யாரையும் குழப்பாமல் விட்டு இருக்கிறார்" என்று தெரிவித்துள்ளார்.

*ரட்சிங்கர் புரட்சி* ஆரம்பமாகும் என்று ஆவலோடு காத்திருந்த பத்திரிகையாளரும், வேறு பலரும் திருச்சபையில் இவரது ஆளுகை தொடங்கி இரண்டு ஆண்டுகளாகியும் குறிப்பிடத்தக்க எந்தப் பெரிய மாற்றங்களுமே ஏற்படவில்லை என ஏமாந்து போயுள்ளனர்.

80 வயதை அடைந்துள்ள பாப்பரசரின் பதவி மாற்றங்கள் வத்திக்கானின் 25 முக்கிய ஆணையங்களில் பணியாற்றும் பத்துப்பேரின் மாற்றங்களின் பின்னர் செயற்படத் தொடங்கும் என்று வத்திக்கான் நிலைய அவதானிகள் தெரிவிக்கின்றனர். அப்படியானால் இனிவரும் 10 மாதங்களில் 16ஆம் பெனடிக்ற் பாப்பரசரின் மாற்றங்களை எதிர்பார்க்கலாமா?

நன்றி - பாதுகாவலன

## இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் இணையத்தளம்

ஜூன் மாதம் 01ம் திகதி இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் உத்தியோகபூர்வ இணையத்தளம் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர் மேதகு வியன்னி பெனாண்டோ ஆண்டகை அவர்கள் ஆணைக்குழுக்களின் தேசிய இயக்குனர்கள் மத்தியில் மேற்படி இணையத்தளத்தை ஆரம்பித்து வைத்தார்.

அவர் கருத்துத் தெரிவிக்கையில் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் நீண்டகால தேவையாக இருந்த இந்த இணையத்தளத்தை ஆரம்பித்து வைக்கின்றோம். கத்தோலிக்க ஆயர் பேரவை பற்றிய தகவல்களையும் செயல்பாடுகளையும் இலங்கை கத்தோலிக்க திருச்சபை பற்றிய விடயங்களையும் அறிந்துகொள்ள இது வழிவகுக்கும் என்று தெரிவித்தார். இந்த இணையத்தளத்தை அமைப்பதற்கு உதவிசெய்த அனைவருக்கும் நன்றி தெரிவித்த ஆயர் குறிப்பாக கொழும்பு புனித சூசையப்பர் கல்லூரி அதிபர் சில்வெஸ்ரர் ரணசிங்க அடிகளாருக்கு விசேட நன்றி தெரிவித்தார்.

## இத்தாலிய இளைஞர்கள் புண்ணிய பூமிக்கு திருப்பயணம்!

உலக ஒருமைப்பாட்டு உணர்வை உருவாக்க வேண்டும் என்பதற்காக இத்தாலிய இளைஞர்கள் புண்ணிய பூமிக்கு திருப்பயணம் மேற்கொண்டுள்ளனர்.

திருப்பயணத்தின் வழியாக மறைப்பணி ஆற்றும் உரோமை திருப்பயண மறைப்பணிக் குழுவானது உலக நாடுகளில் ஒற்றுமையும், ஒருமைப்பாடும் ஏற்பட வேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோளோடு புண்ணிய பூமிக்கு திருப்பயணமாகச் சென்றுள்ளது. இதில் பயணம் செய்யும் 200 இத்தாலிய இளைஞர்கள் இயேசு பிறந்து வளர்ந்த பெத்லகேம், எருசலேம் மற்றும் நாசரேத்து போன்ற இடங்களுக்குச் செல்வதோடு இஸ்ரேல் - பாலஸ்தீன இளைஞர்களையும் சந்தித்துப் பேச உள்ளனர். இதுவே இத்திருப்பயணத்தின் சிறப்பு அம்சமாகும்.

### நீங்காத நினைவுகள்

**31ம் நாள் நினைவு**

மலர்வு 23 - 05 - 1978



உதிர்வு 08 - 07 - 2007

**திருமதி. அ. ஜெயலலிதா (மீனா) - சவேரியார்புரம்**

இவர் அன்ரன் சுரேசின் அன்பு மனைவியும், குயிக்சன், நிரோஷன், தனுஷன், கனிஸ்டன் ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. காயாம்பு, திருமதி. பூரணம் ஆகியோரின் அன்பு மகளும், திரு. திருமதி. அமிர்தநாதன், சந்தானாள் றோச் ஆகியோரின் மருமகளும், திருமதி. ராணி, திரு. திருச்செல்வம், திருமதி. கலாரஞ்சனி, திரு. புஸ்பகுமார், திருமதி. அஞ்சலாதேவி, திரு. நவநீதன், திருமதி. பிறேமரூபி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், திரு. சூசையப்பு, திரு. மரியதாஸ், திரு. யோகேஸ்வரன், திரு. சாந்தலயன், திருமதி. ஜெயசீலி, திருமதி. ரஞ்சி, திருமதி. லதா, திருமதி. மேரிபிரான்சிஸ்கா (அமுதா) திரு. றொபேஸ், திரு. டயான ஆகியோரின் மைத்துனியும், திரு. மெல்றோஸ் குரூஸின் உடன்பிறவா சகோதரியும் ஆவார். இவரின் 31ம் நாள் நினைவை முன்னிட்டு சவேரியார் புரத்திலுள்ள புனித சவேரியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

தகவல்: திரு. அன்ரன் சுரேஸ் (கணவன்)

## ஆயர் ஜோய் குணவர்த்தன பற்றிய நூல் வெளியீடு

அநுராதபுர மறைமாவட்டத்தின் முன்னாள் ஆயர் மேதகு ஜோய் குணவர்த்தனா பற்றிய நூல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. *'ஜோய் குணவர்த்தனா - எமது காலத்தில் ஆயர்'* என்னும் தலைப்பில் அன்ரனி ஜெயமானே (அ.ம.தி.) அடிகளாரால் எழுதப்பட்ட நூல் அண்மையில் வெளியிட்ப்பட்டது. மறைந்த ஆயர் மேதகு ஜோய் குணவர்த்தன ஆண்டகை அனுராதபுர ஆயராகப் பணியாற்றி 2000ஆம் ஆண்டில் இறைபதம் அடைந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

### மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரி மாணவி

## அகில இலங்கை ரீதியான தமிழ்த் தினப்போட்டியில் முதல் இடம்



மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரி (தே.பா)யைச் சேர்ந்த செல்வி யோசப் ஆன் சாளினி பீரிஸ் என்பவர் அகில இலங்கை ரீதியான தமிழ்த் தினப்போட்டி பிரிவு I வாசிப்புப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று பாடசாலைக்கு பெருமை தேடித் தந்துள்ளார். இப்போட்டி கடந்த 09.06.2007 அன்று கொழும்பில் நடைபெற்றது.

இவரையும், இவரது பெற்றோரையும் மற்றும் இவரை நெறிப்படுத்திய ஆசிரியரையும் கல்லூரி அதிபர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சபை மாணவர்கள் வாழ்த்தி நிற்கின்றார்கள். இவர்களோடு இணைந்து மன்னாப் பத்திரிகையும் இவரை வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றது.

### கொழும்பு மறைமாவட்ட தமிழ் மக்களின் நலன்பேணிய

## மத்தியு அடிகளார் இறைபதம்



கொழும்பு மறைமாவட்டத்தைச் சேர்ந்த மத்தியு அடிகளார் மே மாதம் தமது 86வது வயதில் இறைபதம் அடைந்தார். தமது குருத்துவத்தின் பொன்விழாவை கொண்டாடிய மத்தியு அடிகளார் தமிழ் மக்கள் செறிந்து வாழும் செக்கட்டித் தெருப்பங்கில் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. கொழும்பு மறைமாவட்டத்தில் தமிழ் மக்களின் கடமைகளை நிறைவேற்ற சிறப்பாக நியமிக்கப்பட்டவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## வத்திக்கான் நகரில் பரபரப்பு

கடந்த ஜூன் 6ஆம் தேதி திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ற் மக்களுக்கு உரையாற்றிக் கொண்டிருக்கும்போது ஒருவர் பாதுகாப்பு வலையத்தையும் தாண்டி அத்துமீறி நுழைய முற்பட்டார். திருத்தந்தைக்கு எந்தவித ஆபத்தும் ஏற்பட்டுவிடாதவாறு மெய்க்காவலர்கள் அவரை தடுத்து நிறுத்திக் கைது செய்தனர்.

27 வயதான அந்த மனிதர் ஜெர்மனி நாட்டைச் சேர்ந்தவர். திருத்தந்தைக்கு எந்த ஆபத்தும் ஏற்படுத்துவதற்காக அல்ல, மாறாக மக்களின் கவனத்தை தன்பால் ஈர்த்துக் கொள்வதற்காகவே இந்தச் செயலில் ஈடுபட்டதாகவும் அவர் கூறினார்.

அவர் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்பது விசாரணையில் தெரியவந்தது. அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

அவரால் எந்தப் பாதிப்பும், திருத்தந்தைக்கும், வத்திக்கான் நகருக்கும் ஏற்படவில்லை என்று வத்திக்கான் செய்திக் குறிப்பு தெரிவிக்கின்றது.

### தமிழர்கள் வெளியேற்றம் குறித்து

## தேசிய கிறிஸ்தவ பேரவை கண்டனம்

கொழும்பிலிருந்து தமிழர்கள் வெளியேற்றப்பட்டமை கண்டனத்துக்குரியது என்று தேசிய கிறிஸ்தவ பேரவை தெரிவித்துள்ளது. இந்த மனிதாபிமானமற்ற நடவடிக்கை பொது மக்களிடத்தில் பாரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இக்குறுகிய பார்வை கொண்ட நடவடிக்கை நாட்டுக்கு கேடு ஏற்படுத்தும் ஒரு செயலாகும். அரசியலமைப்பினால் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமைகளை இது பாரிய அளவில் மீறி உள்ளது. கடத்தல், காணாமல் போதல், மற்றும் கப்பம் அறவிடுதல் போன்ற கொடூரமான செயற்பாடுகள் நம்மைச் சுற்றி நடக்கின்றன. வன்முறைகள் நான்கு மதங்களும் கற்பித்திருக்கும் மனிதாபிமான எண்ணத்திற்கு எதிரானது என்று மேலும் அப்பேரவையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கலை இலக்கியச் சாளரம்

# கவிதைக் களம்

## அதிகரித்த அவலங்கள்

முத்து முத்தான மனித உறவுகள்
முற்றத்தில் சிந்திடும் இரத்தக் கண்ணீர்கள்.
பற்றும் பாசமும் வைத்த உறவுகள்
பாதியில் பிரிந்திடும் துன்ப அவலங்கள்!

அன்னை மடியினில் தவழ்ந்த பிள்ளை
அன்பினைப் பெற்றிட யாருமே இல்லை.
பள்ளிப் படிப்பினைப் பாதியில் நிறுத்தி
பரிதவிக்கும் காலம் மலிந்துவிட்டது.

அனாதையும் விதவையும் அதிகரித்தனர்
அன்பினைப் பெற்றிட யாருமே இல்லை.
யுத்தம் நடக்கின்ற இரத்த பூமியில்
அரக்கர் கூட்டம் அதிகரித்து விட்டனர்.

காலைச் செய்தியில் நபரைக் காணவில்லை
மதியச் செய்தியில் மறைவாகக் கொலை
இரவுச் செய்தியில் இறந்து கிடக்கிறதாம்
இனந்தெரியாத முறையில் ஒரு மனித உடல்

வீதியின் அருகினில் அதிகரித்த கிளைமோர்
தவறிய இலக்குகளால் தடுமாறும் மனிதர்கள்
அப்பாவி மக்களுக்கு அவலங்கள் நேர்ந்ததே
ஆறாத் துயரினில் குடும்பங்கள் சோர்ந்ததே!

வானில் கேட்பது 'கிபீர் மிக்' ஓசை
காற்றோடு காற்றாய் மல்ரிபெரல் செல் ஓசை
காதில் கேட்பது மக்களின் புலம்பல் ஓசை
மொத்தமாய்க் கேட்பது மனித அவல ஓசைகள்

மூத்த உறவுகளின் முகம் பார்க்க முடியாது
சொந்த பந்தங்களின் சுகம் கேட்கமுடியாது
நன்மை, தின்மைக்கும் நாம் சேரமுடியாது
எம் வாழ்வில் விடிவு எப்போது மலரும்?

*தே. ஜெர்மா, சாளம்பன்*

## மனமே, என் மனமே....

எங்கும் பரந்திருக்கும்
ஏக பிரபஞ்ச சக்தியின் அகமே என் மனம்!
எதை எதையோ அறிந்திட வேண்டும்
எதை எதையோ தெளிந்திட வேண்டும்
எனத் துடிக்கும் நான்
ஏனோ என்னையே தெரிந்திட வேண்டும்
என நினைப்பதுகூட இல்லை!

ஆதியும் அந்தமும் இல்லாதவர்
என்னில் அடைபட்டு இருக்கிறார் என்பதை
அறிய மறுக்கும் என் மனமே....!

மனமே, உன் மகத்துவம்தான் என்ன!
மாண்பினை அறிந்திடு; மதிப்புடன் வளர்ந்திடு;
மனமே, என் மனமே!

*எவ். பி. நிஷாந், பண்டாரவளை, பதுளை*

## ஓர் ஆன்மாவின் உள்ளத்துக் குமுறல்



ஆத்துமம் என்னும் அழகிய பறவை
ஆவலில் பாடிடும் சங்கீதம்.

காத்திட வேண்டும் கருணையின்
தேவனே காவலும் நீயே எமக்கு.

விரைந்து நான் விடுபட வழியில்லை
இதை விபரிக்க எனக்கோர் மொழியில்லை.

*அ. மேசி, கீரி.*

# சிறுகதை

## திசை மாறிய பறவைகள்

**பி. பெனில்டஸ்**
**தோட்டவெளி**

சிட்டுக்குருவியாய் சிறகடித்துத் திரிந்த அந்த பொன்னான காலத்தைக் கண்ணீருடன் நினைவு கூர்ந்தான் சந்திரன்.

பள்ளி செல்லும் பருவத்து இளைஞனவன் வீட்டிலே செல்லப்பிள்ளை. கட்டுப்பாடுகள் இருக்கவில்லை. செலவுக்குத் தட்டுப்பாடுகளே இல்லை. எதிர்காலத்தில் சிறந்த மருத்துவனாக வரவேண்டும் என்ற எதிர்பார்ப்போடு ஆர்வமாகப் படித்துக்கொண்டிருந்தான்.

20 வயதே நிரம்பிய சந்திரன் உயர்தரம் படித்துக்கொண்டிருந்த வேளைதான் அவனது வாழ்வில் அத்திருப்புமுனை ஏற்பட்டது. அவனது முறை மாமன் மகளான சுகந்தியை நேசிக்கத் தொடங்கினான். நல்ல அழகான பெண். அதைவிட மென்மையான குணம் படைத்தவள். இருவரும் ஒன்றாகத்தான் பாடசாலை செல்வார்கள். ஒரு நாள் பாடசாலை செல்லும் வழியில் வைத்து அவனது காதலை அவன் தெரியப்படுத்தினான். முதலில் மறுப்புத் தெரிவித்த சுகந்தி தன்மேல் அவன் வைத்திருக்கும் எல்லையில்லாத அன்பைக் கண்டு காதலுக்குப் பச்சைக் கொடி காட்டினாள். இவர்களது காதல் யாருக்கும் தெரியாமல் ஆலமர விருட்சம்போல வளர்ந்துகொண்டே போனது.

இவர்கள் இருவரினதும் நடத்தையில் சந்தேகம் வர சுகந்தியின் தந்தை இருவரையும் உளவு பார்க்க ஆரம்பித்தார். நாளடைவில் அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் காதலிக்கின்றார்கள் என இரு வீட்டாருக்கும் தெரிய வந்தது. இரு வீட்டாரும் அவர்களைத் தனித்தனியே அழைத்து பலவிதமான புத்திமதிகளைப் பக்குவமாக எடுத்துக் கூறினர். அவர்கள் எதையும் கேட்பதாகத் தெரியவில்லை. மருத்துவனாக வந்து சமூகத்துக்கு சேவையாற்ற வேண்டும் என்ற எதிர் கால இலட்சியத்திற்கு சந்திரன் முற்றுப்புள்ளி வைத்தான். இப்போது அவனது ஒரே இலட்சியம் சுகந்தியைத் திருமணம் செய்வதுதான்.

ஒரு நாள் அவர்கள் இருவரும் தனிமையில் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்த வேளையில் சுகந்தியின் தந்தை கண்டுவிட்டார். சந்திரனை நன்றாகப் பேசிவிட்டு மகளை அவ்விடத்திலே வைத்து அடித்து இழுத்துக்கொண்டு போனார். இவ்விடயம் சந்திரனின் வீட்டிற்குத் தெரிய வந்தது. "உனக்கு என்னடா இப்ப காதல்? படிக்கவிட்டால் ஊர் மேய்கிறாயே? எல்லாம் நாங்கள் கொடுத்த செல்லம்தான் காரணம்". இப்படி அவன் சகோதரர்கள் அவனை வார்த்தையால் திட்டித்தீர்த்தனர். "மகனே நீ படித்து சமூகத்தில் ஒரு அந்தஸ்து உள்ளவனாக வந்த பிறகு, நீ யாரை வேண்டும் என்று கேட்டாலும் கட்டித் தருகின்றோம்" என அழுகையோடு கூறி முடித்தாள் அவனது தாயார். இப்போதெல்லாம் அவனுக்குக் கட்டுப்பாடுகள் அதிகமாயின. சுதந்திரமாகத் திரிந்தவன் இப்போது கூண்டுக் கிளியாக மாறினான்.

மீண்டும் பாடசாலை செல்ல ஆரம்பித்தான். ஒரு வாரகாலமாக சுகந்தி பாடசாலைக்கு வரவில்லை. அவளைக் காணாது, அவளோடு பேசாது பித்துப் பிடித்தவன்போல அலைந்தான்.

ஒரு நாள் ஞாயிற்றுக் கிழமை கோயிலுக்குப் போனபோது அங்கே சுகந்தியைச் சந்தித்தான். இருவரும் தனிமையில் மனந்திறந்து உரையாடினார்கள். இறுதியில் "நீ இல்லாமல் ஒரு பொழுதுகூட என்னால் வாழமுடியாது. வா வீட்டைவிட்டு எங்காவது போவோம்" எனக் கூறினான். அவளுக்கு இது பெரும் அதிர்ச்சியாக இருந்தது. இருந்தாலும் அவனை அவள் மிகவும் நேசித்ததாலும் வீட்டில் அவளுக்கு நடந்த கொடுமையினாலும் ஓடிப்போக சம்மதித்து அன்றே ஊரைவிட்டு ஓடிப்போயினர்.

வாழ்க்கையில் பக்குவம் புரியாத இந்த ஜோடிகள் சிறிது காலம் சந்தோசமாக வாழ்ந்தனர். பின்னர் உழைக்க வேண்டிய நிலைக்குச் சந்திரன் தள்ளப்பட்டான். ஒரு ரூபாய்கூட அவன் இதுவரை சம்பாதித்தது கிடையாது. இப்போது தினமும் கூலி வேலைக்குச் செல்கின்றான். மழையிலும் வெய்யிலிலும் கஷ்ரப்பட்டு உழைத்தான். இருபது வயதே நிரம்பிய அவனுக்கு அது பெரும் சுமையாக இருந்தது. "நாம் வீட்டில் செல்லப்பிள்ளையாக இருந்தோமே, எவ்வளவோ



புத்திமதிகளைச் சொன்னபோதும் கேட்கவில்லையே" என நினைத்துக் கண்ணீர் வடிப்பான். வீட்டிற்கு வந்ததும் சுகந்தியின் பாசமான வார்த்தைகளால் துயரங்களை மறந்துவிடுவான்.

இப்படியே காலம் கரைபுரண்டு ஓடியது. ஓர் ஆண் குழந்தையும் பிறந்தது. இரு வீட்டாரும் அவர்களை வந்து பார்க்கவில்லை. தனிமையில் யாரும் அற்றவனாக செய்வதறியாது தடுமாறினான். நாட்கள் நகர்ந்துகொண்டே சென்றன. வேலைக்குப் போவதற்கு அவனது உடலிலே வலு இருக்கவில்லை. எனினும் வேலைக்குச் சென்றான். அவன் உழைப்பது அந்த மூன்று ஜீவன்களுக்கும் போதுமானதாக இருக்கவில்லை. குழந்தைக்கு பால்மா வாங்கவோ, சுகந்திக்கு நல்ல உணவு வாங்கிக்கொடுக்கவோ வழியில்லை, வறுமை தலைவிரித்தாடியது. இவையனைத்தையும் சிந்திக்கலானான்.

ஒரு நாள் சுகந்தியிடம் "என்னால்தானே உனக்கு இந்த நிலை. நீ வீட்டில் இருந்தால் நன்றாக இருந்திருப்பாயே. என்னை நம்பி வந்து இவ்வளவு கஷ்ரப்படுகின்றாயே" எனக் கண்ணீர் மல்கக் கூறி அழுதான். "கவலைப்படாதீர்கள் இந்தக் கஷ்ரமெல்லாம் ஒரு நாள் நீங்கும். நாம் சந்தோசமாக இருக்கலாம்" என அவனைத் தேற்றுவதற்காகக் கூறுவாள். இதற்கிடையில் பிள்ளையின் முதலாவது பிறந்தநாளும் வந்தது. அதைச் சிறப்பாக கொண்டாட ஆசைப்பட்டான். பணம் தேவையென்பதை உணர்ந்து பக்கத்திலுள்ள பாடசாலை கட்டும் கட்டுமான வேலைக்குச் சேர்ந்து வேலை செய்தான் கடினமான வேலைதான் சம்பளம் பறவாயில்லை.

ஒரு நாள் சுகந்திக்கு கடிதம் எழுதினான். "மகனின் பிறந்த நாளை வெகுசிறப்பாகக் கொண்டாடலாம். நீ கவலைப்படாதே. நான் ஞாயிற்றுக் கிழமை வருவேன்" என்று கடிதம் போட்டான். கடிதம் போய்ச் சேர்வதற்குள் விதி அவன்மீது விளையாடியது. மேல்மாடிக் கட்டிடம் கட்டிக்கொண்டிருந்தபோது தவறி விழுந்து கால் எலும்பு முறிந்துவிட்டது. இதையறிந்து பிள்ளையையும் தூக்கிக்கொண்டு மருத்துவமனை நோக்கி ஓடினாள் சுகந்தி. அங்கே சத்திரசிகிச்சை முடிந்து கட்டிலிலே படுத்திருந்தான் சந்திரன். இரண்டு வாரங்கள் மருத்துவமனையில் இருந்த பின்னர் வீட்டுக்கு அவனை அழைத்துவந்தாள் சுகந்தி. மகனின் பிறந்தநாளும் மருத்துவமனையிலே அரங்கேறியது. இப்போது அவனால் முன்புபோல நடக்கமுடியாது. வேலைக்குப் போகவில்லை. பிள்ளைக்கும் கணவனுக்கும் உழைத்து உணவு கொடுக்க வேண்டிய அவசியம் சுகந்திக்கு ஏற்பட்டது.

பக்குவம் புரியாத வயதிலே உறவுகளைத் தள்ளிவிட்டு, உடன் எடுத்த தவறான முடிவினால் இப்போ இந்த நிலை வந்துவிட்டதே என நினைத்து அழுதுகொண்டே தூங்கிவிட்டாள் சுகந்தி. குழந்தையின் அழுகுரல் கேட்டு கண் விழித்தெழுந்தாள். பொழுது விடிந்திருந்தது. ●

## தொடர் கட்டுரை – அங்கம் 50



## கத்தோலிக்க கலை இலக்கிய பாரம்பரியங்கள்

### - அருட்பணியாளர் விக்ரர் பிலேந்திரன் -

### வட இலங்கையில் பாடுகளின் காட்சிகள்

### 19. "பாசோ" உடக்கு பாஸ் பாடுகளின் காட்சிகள்

#### அறைந்து இறக்கும் சடங்கும், ஆசந்தியும்

இலங்கையின் வடபகுதியிலும், தென்பகுதியிலும் நீண்ட பல காலமாக வழக்கில் வந்த மற்றொரு மரபு பெரிய வெள்ளிக்கிழமைகளில் அநேக ஆலயங்களில் வருடா வருடம் இடம்பெற்று வந்த 'அறைந்து இறக்கும் சடங்கு' எனப்படும் தவக்காலப் பக்தி முயற்சி ஆகும். யாழ் - குருநகர் புனித இயாகப்பர் ஆலயத்தில் இன்னும் இச்சடங்கு பெரிய வெள்ளிக்கிழமையில் இடம்பெறுகின்றது. கல்லறைச் சுரூபங்கள் உள்ள எல்லா ஆலயங்களிலும் வருடா வருடம் பரிசுத்த வாரத்தில் வெள்ளிக்கிழமைகளில் ஆலய முன்றலிலுள்ள வெளியரங்கில் இச்சடங்கு இடம்பெறுவதுண்டு. 'அறைந்து இறக்கும் சடங்கு' ஆலயத்தின் உள்ளும் இடம்பெற்று வந்துள்ளது எனக் கொள்வதற்குச் சில ஆலயங்களில் பலிப்பீடத்திற்கு முன்பு சிலுவை நிறுத்தப்படுவதற்காகக் கட்டப்பட்டுள்ள நிரந்தரமான கிடங்கு காணப்படுகின்றது. இது காரணமாகவே இச்சடங்கு ஆலயத்தினுள் இடம்பெற்றது எனப்பொருள் கொள்வது மிகப்பொருத்தமானது.

சில ஆலயங்களில் மரத்தினால் செதுக்கப்பட்டுள்ள கல்லறைச் சுரூபம் தவக்காலம் முழுவதும் சிலுவையில் அறையப்பட்டு பீடத்தின் முன் அமைக்கப்பட்ட கிடங்கினுள் நிறுத்தப்பட்டிருக்கும். வேறு சில இடங்களில் வசதிக்கேற்ப புனித வாரத்தில் மட்டும், அதாவது குருத்து ஞாயிறு தினத்தில் சிலுவை நிறுத்தப்பட்டு கல்லறைச் சுரூபம் சிலுவையில் அறையப்படும். இவ்வாறு சிலுவை நிறுத்தப்படுவதும், சிலுவையில் கல்லறைச் சுரூபம் அறையப்படுவதும் சடங்கு முறையில் இடம்பெறுவதில்லை.

2ஆம் வத்திக்கான் சங்கம் இடம்பெற்ற காலம் வரையும் (1962 – 1965), பாஸ்கா வழிபாடுகள் எல்லாம் காலையிலேயே இடம்பெற்றன. பொதுவாக, கல்லறைச் சுரூபங்கள் உள்ள எல்லா ஆலயங்களிலும் மிக நீண்டகாலமாக பெரியவெள்ளி மாலையில் அறைந்து இறக்கும் சடங்கு இடம்பெற்று வந்தது. பெரியவெள்ளி மாலையில் இச்சடங்கிற்குத் தயார் செய்யப்பட்ட இடத்தில், அதாவது, ஏற்கனவே சிலுவை நிறுத்தப்பட்டு சிலுவையில் கல்லறைச் சுரூபம் அறையப்பட்டிருக்கும்.

பெரிய வியாழன் நற்கருணை ஏற்படுத்திய நினைவுத் திருப்பலியில் இருந்து உயிர்ப்பு ஞாயிறு வரையும் ஆலயத்தின் மணிகள் ஒலிப்பதில்லை. துக்கப்பறை எனப்படும் மரத்தினால் செய்யப்பட்ட ஒரு கருவியின் துணைகொண்டு எழுப்பப்படும் ஒலியே ஆலயமணி ஒலிக்குப் பிரதியீடாகப் பயன்படுத்தப்பட்டது. பொதுவாக, மாணவர்கள் கிராமத்தின் பல திசைகளுக்கும் சென்று துக்கப்பறையின் ஒலியை எழுப்புவார்கள். இந்த ஒலியே மக்களை வழிபாடுகளுக்கு ஒன்றுகூட்டும். இவ்வாறு மக்கள் ஒன்றுகூடிய பின்பு வியாகுல பிரசங்கத்திலிருந்து 8ஆம் பிரசங்கம் வாசகர் ஒருவரால் உரத்த தொனியில் துக்க மெட்டில் பாடப்படும்.

சிலுவையில் அறையப்பட்ட நிலையில் கிறிஸ்துவிற்கு ஏற்பட்ட உடல்வேதனை, கிறிஸ்து சிலுவையில் மரணித்த காட்சி தத்துரூபமாகக் காண்பிக்கப்படும், சிலுவையில் அறையப்பட்டிருந்த கல்லறைச் சுரூபம் இயக்கப்படுவது அல்லது அசைக்கப்படுவது வியாகுல பிரசங்கத்தின் வாசகத்துடன் இசைவு பெற்றதாகவே அமைந்திருக்கும். கல்லறைச் சுரூபத்தின் இயக்கம் அல்லது அசைவு அனைத்தும் ஏற்கனவே திருச்சுரூபத்துடன் ஏற்படுத்தப்பட்டிருந்த நூலின் துணைகொண்டே இயக்கப்படும். இயேசு சிலுவையில் மரணித்தார் என்னும் பகுதி படிக்கப்படும்போது நூலினால் இயக்கப்படும் திருச்சுரூபம் அறையப்பட்ட நிலையிலேயே சற்று எழுந்து, கண்களை மூடி மரணத்தைத் தழுவிக் கொள்வது போன்று காட்சி அமையும். கிறிஸ்துவின் மரணத்தின் கொடூரத்தை எடுத்துக்காட்ட பயங்கரமான ஓசைகள் எழுப்பப்படும்.

(தொடரும்...)

## துளிப்பா

**அவமானம்**

தலை தானாகவே
பூமிக்கு இழுக்கப்படும்
ஈர்ப்பு சக்தி.

**தேவை**


எல்லையற்ற
பாதை வழியே
செல்லும் ஊர்தி.

**ஆசை**

அனைத்தையும்
அள்ளத் துடிக்கும்
அறிவுகெட்ட ஆசாமி.

**பெண்மை**

அமைதியாக
அடங்க வேண்டிய
உண்மை.



*ஆர். சந்திரிக்கா, பெரியமுறிப்பு*

# மன்னார் மறைமாவட்டத்தில் குருத்துவ வெள்ளிவிழாக்காணும் அருட்பணியாளர்கள்

## அருட்பணியாளர் சூ. ஜெயபாலன் குரூஸ்



பேசாலையைச் சேர்ந்த திரு. திருமதி. சூசையப்பு குரூஸ் தம்பதியினரின் குழந்தைச் செல்வங்கள் எண்வரில் இரண்டாவது மகனாக 08.07.1955ல் பிறந்தவர்தான் அருட்தந்தை சூ. ஜெயபாலன் குரூஸ் அடிகளார்.

தனது சொந்தக் கிராமத்தில் ஆரம்பக்கல்வியை முடித்த பின்னர் 1966ம் ஆண்டு யாழ். புனித மாட்டீனார் ஆரம்பக் குருத்துவக் கல்லூரியில் இணைந்து புனித பத்திரிசியார் கல்லூரியில் தனது கல்வியைத் தொடர்ந்தார். 1974ம் ஆண்டு இந்தியா/ புனே பாப்பரசர் உயர் குருத்துவக் கல்லூரியில் மெய்யியல் கல்வியையும், 1978ம் ஆண்டு கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியில் இறையியல் கல்வியையும் கற்றார்.

03.08.1982ல் மேதகு ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் பேசாலை வெற்றிநாயகி ஆலயத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். ஆயர் அவர்களின் ஆயர் பட்டமளிப்பின் பின்னர், முதன்முதலாக அவரால் திருநிலைப்படுத்தப்பட்ட மறைமாவட்டக் குரு இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அருட்தந்தை அவர்கள் கடந்து வந்த பாதையில் தடம்பதித்த சுவடுகள் பல. 1982ல் யாழ்/ குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் உதவிப்பங்குத் தந்தையாகப் பணியை ஆரம்பித்த இவரது பணிகள் 1983ல் கிளிநொச்சி – மாங்குளம் ஆகிய பங்குகளில் தற்காலிக பங்குத்தந்தையாகவும் 1984ல் நானாட்டான் பங்குத்தந்தையாகவும், 1985 – 1989 முருங்கன் பங்குத்தந்தையாகவும், பணியாற்றியது வரை பரந்து சென்றது. 1989 – 1993 வரை உரோமா புரியில் உள்ள பாப்பரசர் விவிலிய நிறுவகத்தில் (Pontifical Biblical Institute) விவிலியத்தில் உயர் கல்வியை மேற்கொண்டார்.

1994 - 1998 வரை யாழ்/ கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் விவிலிய விரிவுரையாளராகவும், உருவாக்கல் பயிற்றுனராகவும் (Formator) உப அதிபராகவும் (Vice Rector) பணியாற்றினார்.

1998ல் மறைமாவட்டத்திற்குத் திரும்பிய அருட்தந்தை அவர்கள் 1998 – 2000 வரை மீண்டும் முருங்கன் பங்குத்தந்தையாகப் பொறுப்பேற்றார். 2000 – 2005 வரை வவுனியா பங்குத்தந்தையாகவும் 2005 தொடக்கம் இற்றைவரை இலுப்பைக்குளம் பங்குத் தந்தையாகவும் பணியாற்றுகின்றார். 2000ம் ஆண்டிலிருந்து பகுதிநேர விரிவுரையாளராக (Visiting Lecturer) யாழ் உயர் குருத்துவக் கல்லூரிக்குச் சென்று வருகின்றார்.

இவரது பணிக்களப் பாதையைத் திரும்பிப் பார்க்கையில் நானாட்டான், முருங்கன் போன்ற பங்குத்தளங்களில் பணியாற்றியபோது வழிபாட்டுக் குழுக்களை அமைத்து, கிரமமாக நடத்திச் சென்று வழிபாடுகளுக்கு மெருகூட்டினார். மன்னார் மறைமாவட்டத்தில் முதன்முதலாக வழிபாட்டுக் குழுக்களை அமைத்து ஊக்குவித்தவர் இவராகத்தான் இருக்கமுடியும்.

சிறந்த கல்விப்புலமை கொண்ட இவர் சிறந்த விரிவுரையாளர் எனக் குருத்துவக் கல்லூரியில், குருத்துவ மாணவர் மத்தியில் பெயரெடுத்தவர். ஒவ்வொரு விடயத்தையும் மிக நுணுக்கமாகப் பகுப்பாய்வு செய்து, ஆராய்ந்து, குறை நிறைகளை இனங்கண்டு சுட்டிக்காட்டும் திறமை மிக்கவர்.

இவர் மனித உறவுகளை மதிப்பவர்; வெளிப்படையான உரையாடல்களை ஊக்குவிப்பவர்; குருக்கள் குழுமத்தில் உறவைப்பேணுவதில் முன்நிற்பவர்; நகைச்சுவையாளர்; வகுப்புகளில் நகைச் - சுவையுடன் பேசி, பாடங்கள் மாணவரின் மனதில் இலகுவில் பதியும்படி செய்பவர்.

இவர் முருங்கனில் பணியாற்றியபோது தனது அருமை அன்னையை இழந்தார். இவரது தந்தையார் பேசாலையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒருவர். ஆலய நிர்வாகத்தில் முதுகெலும்பாகத் திகழ்ந்து, பேசாலையின் பாரம்பரியங்களைக் கட்டிக் காப்பவர். உடக்குப் பாஸ் பழக்குவதில் முக்கியமானவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அருட்பணியாளர் ச. எமிலியானுஸ்பிள்ளை



"நீங்கள் என்னைத் தேர்ந்துகொள்ளவில்லை. நான்தான் உங்களைத் தேர்ந்துகொண்டேன்" எனக்கூறி இற்றைக்கு 25 ஆண்டுகளுக்கு முன்னர் அருட்பணியாளர் ச. எமிலியானுஸ்பிள்ளை அடிகளாரை தனது பணிக்கென அழைத்தார் இறைவன்.

இவர் மன்னார் பறப்பாங்கண்டலைச் சேர்ந்த திரு. திருமதி சந்தியாப்பிள்ளை தம்பதியரின் குடும்பத்தில் மலர்ந்த பன்னிரெண்டு புத்திரச் செல்வங்களில் ஏழாவது மகனாக 19.9.1953ல் பிறந்தார். பறப்பாங்கண்டலில் தனது கல்வியை ஆரம்பித்த இவர் 1972ல் யாழ் புனித மாட்டினார் ஆரம்பக் குருத்துவ பயிற்சியகத்தில் இணைந்து புனித பத்திரிசியார் கல்லூரியில் உயர்தரக் கல்வியை கற்றார்.

1974ம் ஆண்டு கண்டி தேசியக் குருத்துவக் கல்லூரிக்கு அனுப்பப்பட்டு அங்கு மெய்யியல் இறையியல் கல்வியைக் கற்று 4.8.1982ல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். இவரது திருநிலைப்படுத்தல் திருச்சடங்கு பறப்பாங்கண்டலில் மேதகு ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் நடத்தப்பட்டது. ஆயர் அவர்களால் இரண்டாவதாகத் திருநிலைப்படுத்தப்பட்ட மறைமாவட்டக் குரு இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அருட்தந்தை அவர்கள் தனது திருநிலைப்படுத்தலுக்கு முதல் வருடம் தனது அருமை அன்னையை இழந்தார்.

இவரது பணித்தளங்களைத் திரும்பிப் பார்க்கையில் 1982ல் உதவிப் பங்குத் தந்தையாக மன்னார் பேராலயத்திலும் 1983ல் செட்டி குளத்திலும் பணியை ஆரம்பித்தார். 1983 - 1986 வரை பண்டிவிரிச்சான் பங்குத்தந்தையாகப் பணியாற்றிய அதேவேளை மடுத்திருத்தல உதவிப் பரிபாலகராகவும் பணிபுரிந்தார்.

1986 - 1989 வரை தாழ்வுபாடு பங்குத்தந்தையாக இருந்த காலத்திலேயே இன்றைய தாழ்வுபாட்டின் புதிய ஆலயம் நிர்மாணிக்கப்பட்டது. 1989 - 1992 வரை முருங்கன் பங்குத் தந்தையாகப் பணியாற்றினார்.

பின்னர் உயர்கல்வியை மேற்கொள்வதற்காகப் பெல்ஜியம் நாட்டிற்கு அனுப்பிவைக்கப்பட்டார். 1992 - 1996 வரை அங்கு "இறையியலும் சமூகவியலும்" என்னும் கல்வியை மேற்கொண்டு கலைமுதுமாணிப் பட்டத்தையும் (M.A,) இறையியல் முதுமாணிப் பட்டத்தையும் (S.T.L.) பெற்றுக்கொண்டார்.

1996ல் நாடு திரும்பிய அருட்தந்தை அவர்கள் மன்னார் மறைமாவட்ட வாழ்வுதய இயக்குனராக நியமிக்கப்பட்டார். இக்காலத்தில் இவர் வாழ்வுதய நிறுவனத்தை முன்னேற்றப்பாதைக்கு கொண்டுவர அரும்பாடுபட்டு உழைத்தார்.

அத்துடன் மன்னார் பிரஜைகள் குழுவின் உறுப்பினராக அங்கத்துவம் வகித்ததோடு நான்கு ஆண்டுகளாக இதன் தலைவராக இருந்து உறுப்பினர்கள் மத்தியில் ஐக்கியத்தையும் அர்ப்பணிப்பையும் கட்டிக் காத்து வந்தார். கடந்த நான்கு வருடங்களாக "சமாதானத்திற்கும் மீள் இணக்கத்திற்குமான வளங்கள்" (RPR - R esource for Peace and Reconciliation) என்ற நிறுவனத்தின் தலைவராகவும் இருந்து செயற்பட்டு வருகின்றார்.

2001 - 2006 வரை மன்னார் பேராலயப் பங்குத் தந்தையாக இருந்து பல்வேறுபட்ட பணிகளையும் முன்னெடுத்துச் சென்றார். 2006 தொடக்கம் மடுப்பரிபாலகராகப் பொறுப்பேற்றுள்ள இவர் தற்கால யுத்த சூழ்நிலைகள் மத்தியில் நிறைந்த சவால்களுக்கும் சொல்லொண்ணாத் துயர்களுக்கும் முகம்கொடுத்து வருகின்றார். தற்துணிவு கொண்டவரும் வெளிப்படையாகப் பேசக் கூடியவருமான அருட்தந்தை அவர்கள் அனைத்து நிகழ்வுகளிலும் சம்மந்தப் பட்டவர்களுடன் உரையாடி, உறவாடி அனைத்துப் பிரச்சினைகளுக்கும் சுமுகமான தீர்வைக் காண முயற்சித்து வருகின்றார்.

இவரது இளைய சகோதரி திருக்குடும்ப சபையில் துறவியாக இருந்து கடந்த 20 ஆண்டுகளாக ஆபிரிக்கா கமறூனில் மறைபரப்பாளராகப் பணியாற்றுகின்றார்.

# அருட்பணியாளர் தமிழ் நேசன் அடிகளாருடைய இரண்டு நூல்களின் வெளியீட்டு விழா

### 1. தண்ணீருக்குள் தாகமா?

### 2. வெளிச்சத்தின் வேர்கள்

மன்னா பத்திரிகையின் பதிப்பாசிரியரும் மன்னார் மறைமாவட்டத்தின் மறைக்கல்வி, கல்வி, விவிலிய ஆணைக்குழுவின் இயக்குனரும், மற்றும் மறைபரப்புப் பணிகள் ஆணைக்குழுவின் இயக்குனருமான அருட்பணியாளர் தமிழ் நேசன் அடிகளார் கடந்த யூன் மாதம் 30ந் திகதி இரண்டு நூல்களை வெளிக்கொணர்ந்துள்ளார்.

'தண்ணீருக்குள் தாகமா?' 'வெளிச்சத்தின் வேர்கள்' என்ற இரண்டு நூல்களையே அவர் வெளியிட்டுள்ளார். மன்னார் மறைமாவட்டத்தில் தற்போது நடைமுறையில் இருக்கும் செப ஆண்டை வலுப்படுத்தும் வகையிலேயே இந்த இரண்டு நூல்களும் 'மன்னா' வெளியீடாக வெளிவந்துள்ளன.

மன்னார் மறைக்கல்வி நிலையத்தில் நடைபெற்ற இந்த நூல்களின் வெளியீட்டு விழாவுக்கு மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். மன்னார் அரசாங்க அதிபர் உயர்திரு. ஏ. நீக்கிலாஸ்பிள்ளை, மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் உயர்திரு. எம். ஆபேல் றெவல், மன்னார் பிரதேச செயலாளர் திருமதி ஏ. ஸ்ரான்லி டிமெல் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

இவ்விழாவுக்கு மன்னார் மடுமாதா சிறிய குருமட அதிபர் அருட்பணியாளர் பி. யேசுறாஜா அடிகளார் தலைமை தாங்கினார். நூல்களின் வெளியீட்டுரையை அருட்பணியாளர் எஸ். அன்புராசா (அ.ம.தி) அவர்கள் நிகழ்த்தினார். முதல் பிரதியை முதன்மை விருந்தினர் மேதகு மன்னார் ஆயர் அவர்கள் நூலாசிரியரின் மூத்த சகோதரர் திரு. பி. ஆசீர்வாதம் அவர்களுக்கு வழங்கினார்.

நூல்களுக்கான நயப்புரைகளை மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினர் பேரவைத் தலைவர் திரு. ஏ. அந்தோனிமுத்து அவர்களும் மன்னார் வலயக் கல்விப் பணிமனையின் தமிழ்பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி பெப்பி விக்ரர் லெம்பேட் அவர்களும் நிகழ்த்தினார்கள். தொடர்ந்து முதன்மை விருந்தினர்களும் சிறப்பு விருந்தினர்களும் ஆசியுரைகளை வழங்கினார்கள். இறுதி நிகழ்வாக முருங்கனைச் சேர்ந்த கலாபூசணம் கலைஞர் குழந்தை அவர்களின் நாடகம் இடம்பெற்றது.

இந்நூல் வெளியீட்டு விழாவில் 600ற்கும் அதிகமான மக்கள் கலந்து சிறப்பித்தனர். குருக்கள் துறவியர் உட்பட உயர் அதிகாரிகளும், பங்குகளில் பல்வேறு பணிகளில் ஈடுபட்டுழைக்கும் பொதுநிலையினரும் பெரும் தொகையாக இந்நிகழ்வில் பங்கேற்றனர். விழாவில் அழைக்கப்பட்ட பிரமுகர்களுக்கான சிறப்புப் பிரதிகளை மன்னார் ஆயர் அவர்கள் வழங்கினார். ஏனைய பிரமுகர்களுக்கு நூலாசிரியர் நேசன் அடிகளார் வழங்கினார். 350 பிரதிகளை வருகைதந்திருந்த பிரமுகர்கள் விழாவின்போது நூலாசிரியரிடமிருந்து பெற்றுக்கொண்டனர். அண்மைக் காலத்தில் இலங்கையில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாக்களில் அதிக தொகையான மக்கள் கலந்துகொண்ட நூல் வெளியீட்டு விழாவாக இந்நிகழ்வு அமைந்திருந்ததென விழாவில் பங்கேற்ற அனைவரும் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

இந்நூல்கள் இலங்கை கிறிஸ்தவ மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. மன்னார் மறைமாவட்டத்திற்குள்ளேயும், இலங்கையின் ஏனைய பாகங்களிலும், இதைவிட வெளிநாடுகளில் வாழும் தமிழ் கிறிஸ்தவ மக்கள் மத்தியிலும் இந்நூல்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

'தண்ணீருக்குள் தாகமா?' என்ற நூல் இறைவனின் இனிய இயல்புகளை விவிலியக் கண்ணோட்டத்தில் வெளிக்கொணரும் நூலாக அமைந்துள்ளது. 'வெளிச்சத்தின் வேர்கள்' என்ற நூல் செபம் பற்றிய புரிதல்களை விவிலிய இறையியல் பார்வையில் வழங்கும் நூலாக உள்ளது.

இந்நூல்களை அனைத்து மறைமாவட்ட மறைக்கல்வி நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

## நிகழ்வின் நிழல்கள்







### வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் கிறிஸ்தவ மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற

# செப மாநாடு - 2007

## "செபத்தின் வழியில் இறைவன் மடியில்"

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் கிறிஸ்தவ மன்றத்தின் ஏற்பாட்டில் கடந்த 23ம் திகதி யூன் மாதம் ஓர் செபமாநாடு நடாத்தப்பட்டது. மன்னார் மறைமாவட்டத்தில் இவ்வாண்டு செப ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் செபவாழ்வை ஆழப்படுத்தும் கருத்துக்களையும் அனுபவங்களையும் பகிர்ந்துகொள்ளும் நோக்கத்தோடு இம்மாநாடு கூட்டப்பட்டது.

கல்வியியற் கல்லூரியின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இம்மாநாட்டு நிகழ்வுகளுக்கு கல்லூரியின் பீடாதிபதி திரு. க. பேர்ணாட் அவர்கள் தலைமை தாங்கினார். கல்லூரியின் விரிவுரையாளரும் கிறிஸ்தவ மாணவர்களின் ஆன்மீக வழிகாட்டியுமாகிய அருட்பணியாளர் ஜெயந்தன் பச்சேக் (அமதி) அவர்கள் இம்மாநாட்டிற்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தார். அனைத்து விரிவுரையாளர்கள் மாணவர்களின் ஒத்துழைப்போடு இம்மாநாடு இனிதே இடம்பெற்றது.

ஒளியேற்றல் நிகழ்வோடு ஆரம்பிக்கப்பட்ட இம்மாநாட்டில் வரவேற்புரையை திரு. ரி. எம் தேவேந்திரன் அவர்கள் நிகழ்த்தினார். தொடக்கவுரையை மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணியாளர் விக்ரர் சோசை அவர்கள் நிகழ்த்தினார். மாநாட்டின் நோக்கங்கள் பற்றி பீடாதிபதி அவர்கள் விளக்கினார்.

மூன்று அமர்வுகளாக நடைபெற்ற இம்மாநாட்டின் முதல் அமர்வுக்கு 'வணபிதா பி. ஏ. தோமஸ் அரங்கம்' எனப் பெயரிடப்பட்டிருந்தது. இந்த அமர்வுக்கு அருட்பணியாளர் ம. போல் நட்சத்திரம் (அமதி) அவர்கள் தலைமை தாங்கினார்.

இந்த முதல் அமர்வின் உரையை மன்னா பதிப்பாசிரியரும் மறைக்கல்வி நிலைய இயக்குனருமாகிய அருட்பணியாளர் தமிழ்நேசன் அவர்கள் நிகழ்த்தினார். *"வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் செபம்"* என்னும் தலைப்பிலான இந்த உரையைத் தொடர்ந்து கலந்துரையாடல் நடைபெற்றது. தொடர்ந்து திரு. எஸ். என். ஜி நாதன் அவர்களினால் கிறிஸ்தவ நாட்டார் பாடல் பாடப்பட்டது. இத்துடன் முதல் அமர்வு நிறைவுபெற்றது.

தேனீர் இடைவேளையைத் தொடர்ந்து இரண்டாம் அமர்வு ஆரம்பமாகியது. இந்த அமர்வுக்கு 'வீரமாமுனிவர் அரங்கு' எனப் பெயரிடப்பட்டிருந்தது. இதற்கு அருள்திரு. குகனேஸ்வரன் (தென்னிந்தியத் திருச்சபை) அவர்கள் தலைமை தாங்கினார். இந்த அமர்வின் உரையை மன்னார் மறைமாவட்ட நிரந்தர மறையாசிரியர் திரு. சவிரி அவர்கள் நிகழ்த்தினார். உரையைத் தொடர்ந்து கலந்துரையாடல் நடைபெற்றது. தொடர்ந்து முருங்கன் கலாபூசணம் கலைஞர் குழந்தை அவர்களினால் கிறிஸ்தவ நாட்டார் பாடல் பாடப்பட்டது. இத்துடன் இரண்டாம் அமர்வு நிறைவுபெற்றது.

மதிய உணவின் பின்னர் மூன்றாம் அமர்வு ஆரம்பமாகியது. இந்த அமர்வுக்கு 'அன்னை திரேசா' அரங்கு எனப் பெயரிடப்பட்டிருந்தது. இந்த அமர்வுக்கு கிறிஸ்தவ பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி றதி பீரிஸ் அவர்கள் தலைமை தாங்கினார். இந்த அமர்வின் உரையை திரு. கரிகரன் (வை. எவ். சி) அவர்கள் நிகழ்த்தினார். உரையைத் தொடர்ந்து கலந்துரையாடல் நடைபெற்றது. தொடர்ந்து கலைநிகழ்வுகள், மதிப்பீட்டுக் கருத்துரைகள், நற்கருணை ஆசீர் என்பவற்றோடு மாநாட்டு நிகழ்வுகள் இனிதே நிறைவுபெற்றன.

### மன்னார் ஆயர் மேதகு
## இராயப்பு யோசேப்பு ஆண்டகை
### அவர்களின் ஆசிச்செய்தி




வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி கிறிஸ்தவ மன்றம் மன்னார் மறைமாவட்டத்தின் இவ்வாண்டுப் பணித் திட்டத்திற்கமைய, ஏற்பாடு செய்துள்ள செப மகாநாடு 2007ஐ முன்னிட்டு வெளிவரும் நினைவு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். தனது வாழ்வின் இருபத்தைந்து ஆண்டுகளை நிறைவுசெய்து ஒரு புதிய சகாப்தத்தில் காலடி எடுத்து வைக்கும் எமது மறைமாவட்டத்தில், நாம் தொடர்ந்து வரும் ஐந்து ஆண்டுகளிலும், "கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியை நோக்கிய" பயணத்தை இலக்காகக் கொண்டு, இந்த முதல் ஆண்டில் (2007) செப வாழ்வை ஆழப்படுத்தும் திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றோம்.

கிறிஸ்தவ வாழ்வு என்பது பரிசுத்த ஆவியானவருக்கு அடிமைப்பட்டு வாழப்படும் வாழ்வாகும். இது ஊன் இயல்பைத் தோற்கடித்த வாழ்வாகும் (கலா 5:16-26). இவ்வாழ்வை மனிதருக்கு வழங்கவே கிறிஸ்து மனிதனாக அவதாரம் எடுத்தார். இதை யோவான் அருளப்பர், "நாம் வாழ்வு பெறும் பொருட்டு கடவுள் தம் ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார். இதனால் கடவுள் நம்மீது வைத்த அன்பு வெளிப்பட்டது" என்று சுட்டிக் காட்டுகிறார் (1 யோவான் 4:9).


இந்த இறைவாழ்விலே நாளாந்தம் வளர்ச்சி பெற்று முதிர்ச்சியடைவதால் மட்டுமே நாம் கிறிஸ்துவின் சீடர்களாகவும், நற்செய்தியைப் பறைசாற்றுபவர்களாகவும் திகழ்ந்து, நம்மைச் சூழ்ந்திருக்கும் இருளின் மத்தியிலே ஒளியாகத் திகழ முடியும்.

கல்வியியற் கல்லூரி கிறிஸ்தவ மன்றம், "செபத்தின் வழியில் இறைவன் மடியில்" என்ற தலைப்பில் மாநாடு எடுக்கும் இவ்வேளையில் பீடாதிபதி, அருட்தந்தையர், துறவியர், மாணவர்கள், கிறிஸ்தவ மன்றத்தினர் அனைவரையும் உளமாரப் பாராட்டுவதோடு, கல்வியியற் கல்லூரிச் சமூகம், தனித்தும் சமூகமாகவும் செப அனுபவம் பெற்று வீறு நடைபோட இறையாசீர் வேண்டுகிறேன்.

## மாநாட்டு நிகழ்வுகள் - ஓர் பார்வை!



கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி உயர்திரு. பேணாட் அவர்கள் உரை நிகழ்த்துகின்றார்.



திரு. நாதன் அவர்கள் பாடல் பாடுகின்றார்.



திரு. சவிரி அவர்கள் உரையாற்றுகின்றார்.



மன்னா பத்திரிகையின் பதிப்பாசிரியர் அருட்பணி. கிறிஸ்து நேசன் அவர்கள் உரையாற்றுகின்றார்.



கலாபூஷணம் குழந்தை அவர்கள் பாடல் பாடுகின்றார்.



நற்கருணை ஆசீர்வாதம் இடம்பெறுகின்றது.



செப மாநாட்டிற்கு வருகைதந்துள்ள பார்வையாளர்களின் ஒரு பகுதியினர்.

### வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி
## பீடாதிபதியின் ஆசியுரை

*"இறைபதம் நோக்கிய செபத்தைத் தவிர வேறு வழியே இல்லை"*

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் கிறிஸ்தவ மன்றம் காலத்தின் தேவையுணர்ந்து முதற் தடவையாக ஏற்பாடு செய்து நடாத்தும் செபமாநாடு 2007 குறித்து எனது மனமகிழ்ச்சியையும் நல்லாசிகளையும் தெரிவித்து நிற்கின்றேன்.

மக்களைச் சூழ்ந்துள்ள அபாய நிலைகள் அவர்களை வழியறியாது திகைக்க வைத்துள்ளன. கைகளை உயர்த்தி இறைவனை நோக்கிச் செபிப்பதைத்தவிர வேறு வழியே இல்லை என உணர்ந்துகொண்டுள்ள நிலையில் "செபத்தின் வழியில் இறைவன் மடியில்" என்ற தொனிப்பொருளில் மாநாட்டை நடாத்தி மக்களை திசைமுகப்படுத்த வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரியின் கிறிஸ்தவ மன்றம் எடுத்துள்ள முயற்சி பயன்மிக்க ஒன்றாகவும், மன்னார் மறைமாவட்டத்தின் செப ஆண்டு 2007 பிரகடனத்துக்கு வலுச்சேர்க்கும் முயற்சியாகவும் அமைவது பாராட்டுக்குரியதாகும்.

இம்மாநாட்டை ஏற்பாடு செய்து நடாத்தும் கிறிஸ்தவ மாணவ ஆசிரியர்கள் தாம் பெறும் அனுபவங்கள் ஊடாக எதிர்காலத்தில் தமது செபவாழ்வை அப்போஸ்தலிக்க மறைபரப்பு பணியாக மாற்றிக்கொண்டு செல்ல அடித்தளமாக அமையப்போவதும் மகிழ்ச்சிக்குரியதாகும். ஆசிரியப்பணியை இவர்கள் இயேசுவின் நல்லாசிரியர் பணியாக மேற்கொள்ள உதவும் என்பது மாநாட்டின் விளைவாக அமையும். இம்மாநாட்டை ஏற்பாடு செய்து நடத்த முன்னிற்கும் அனைவருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன் மாநாட்டின் வெற்றிக்கு இறையாசிகளையும் வேண்டிநிற்கின்றேன்.

**க.பேர்னாட், பீடாதிபதி**

### கிறிஸ்தவ மன்ற ஆன்ம குரு
### அருட்பணியாளர் ஜெயந்தன் பச்சேக்
### அவர்களின் ஆசியுரை

*"என் நற்செயல்களில் கடவுள் என்னை மதிக்கிறார்*
*என் தியாக வேளையில் அவர் என்னுடன் அன்புறவாடுகின்றார்."*
*- ரவிந்திரநாத் தாகூர்-*

வேக யுகத்தில் வாழும் எமக்கு வேலைகளே விரிந்துகொண்டு செல்கின்றன. தரித்து நின்று தியானிப்பதற்கு நாழிகை கிடைப்பதே அரிது என்கிற நிலைமை பொதுமையாக்கப்பட்டு மானிட ஆன்ம தேடல் ஓரம் கட்டப்படுகின்ற அபாய வளைவில் வரலாறு திரும்பிக் கொண்டிருக்கிறதோ என அஞ்சுகின்றோம்.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் கிறிஸ்தவ மன்றம் "செபத்தின் வழியில் இறைவன் மடியில்" எனும் தொனிப் பொருளில் மாநாடு கூட்டி உலகமயமாக்கலுக்குள்ளும் 'செபமே இயக்க சக்தி' எனத் தன்னை மீள்திசைமுகப்படுத்த எடுத்த முயற்சி வெல்லுக.

நம்நாட்டு சமகாலச் சமூகக்குழுக்கள் அரசியல் சித்தாந்தங்களையும் அதிகார மாயாஜாலங்களையும் நம்பி இன்று போக்கிடம் இன்றி முடிவின் விளிம்பில் நிற்கின்றன. 'ஆண்டவன் திருவடிகளே எம் தஞ்சம், அதுவே எம் இறுதி மார்க்கம்' என உணருவதற்கும் உணர்த்துவதற்கும் இம்மாநாட்டுச் சந்தர்ப்பம் வழிசமைக்கும்.

### மாநாட்டின் நோக்கம்

- செபவாழ்விலும், செபநாட்டத்திலும் காணப்படும் சமநிலையற்ற தன்மைகளை நீக்கி செபவழியில் செல்லல்.
- செபத்தின் முக்கியத்துவத்தினை தெளிவுபடுத்தி உணர்வுபூர்வமாக செபிப்பதற்குத் தூண்டல்.
- செபத்தின் மூலம் ஏற்படும் ஆன்மீக விடுதலையையும், மனநிம்மதியையும் பெற்றுக்கொள்ளல்.
- மனித நடத்தை மாற்றங்களுக்காக செபத்தை ஆத்மசோதனைக் கருவியாக பயன்படுத்தப் பழகுதல்.
- செபத்தின் தேவையையும், அதன் முக்கியத்துவத்தினையும் உணரச்செய்தலும் செபித்தலுக்கான ஊக்குவித்தலை வளர்த்துக் கொள்ளலும்.
- நாட்டின் சமகால சூழ்நிலையில் செபத்தையே சமாதானத்தை வென்றெடுப்பதற்கான கருவியாக்குதல்.

### மாநாட்டுக்கான தேவை

காலத்தின் தேவை கிறிஸ்தவர்களை தமது இறுதி ஆயுதமாகிய செபத்தைக் கையில் எடுக்கவேண்டிய கட்டாயத்திற்கு கொண்டுவந்துள்ளது. ஆதரவற்ற அவலநிலையை உணர்ந்துள்ள மக்களை இறைவன்தான் காப்பாற்ற வேண்டுமென குரல்கள் ஒலித்துக்கொண்டிருக்கும் நிலையில் இறைவனை நோக்கிய செபத்தின் தேவை காத்திரமாக உணரப்பட்டுள்ளது.

மன்னார் மறைமாவட்டத்தின் அதிவந்தனைக்குரிய ஆயர் அவர்களால் 2007ஆம் ஆண்டு செப ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அதற்கான முன்னெடுப்புக்கள் முடக்கி விடப்பட்டுள்ளவேளை நாமும் அதில் இணைந்து ஆன்மீக ஊட்டம் பெற்று செப ஆண்டுப் பிரகடனத்திற்கு வலிமை சேர்க்கின்றோம்.

# இலங்கை இந்திய இணைப்புப் பாலமாக விளங்கும் மன்னார் மாதலம்

சென்ற இதழ் தொடர்ச்சி...

- மக்கள் காதர் -

மன்னார் மக்கள் பதறிச்சிதறி அடைக்கலம் தேடி ஓடி பள்ளிவாசல்கள், கோவில்கள், ஆலயங்கள், பாடசாலைகள் போன்ற உயர்ந்த கட்டிடங்களில் தஞ்சமடைந்தனர். வந்த கடல் சுமார் 15 நிமிடங்களின் பின்னர் வடிந்து தனது சொந்த இடத்தை அடைந்தது. சூறாவளியும் தனது ஆக்ரோசத்தைக் குறைத்தது. கட்டிடங்கள் இடிந்து வீழ்ந்தன, கால்நடைகள் செத்து மடிந்தன, மரங்கள் வேரோடு சாய்ந்தன, ஆனாலும் என்ன அதிசயம். மக்களின் ஓரிருவரைத் தவிர வேறெவரும் சாகவில்லை.

கடற்கரையில் வீடமைத்து வாழ்ந்து வந்ததால்தான் ஓரிருவர் இறக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இலங்கையின் இரண்டாவது பிரதமர் டட்லி சேனநாயக்கா அவர்களால் திறந்து வைக்கப்பட்ட மன்னாரில் புகழ் பெற்ற 'அயின் படமாளிகை' முற்றாகவே இடிந்து விழுந்தது. அவ்வேளையில் அத்திரையரங்கில் 'கல்யாணப் பரிசு' இரண்டாம் காட்சி பார்த்துக்கொண்டிருந்த நானுட்பட பல நூற்றுக்கணக்கானவர்கள் பதறியோடி உயிர் தப்பினோம்.

மன்னார்த் தீபகற்பம், இலங்கையின் பெரும் நிலப்பரப்பிலிருந்து துண்டிக்கப்பட்டு மன்னார்த் தீவாக மாறியது. மன்னார் தாம்போதி (பெரிய பாலம்) பலவிடங்களில் உடைப்பெடுத்தது. ஊழிக்கால இரவுபோல் அன்று விடியும்வரையில் மக்கள் விழித்திருந்து காத்திருந்தார்கள். மறுநாள் வானொலி மூலம் கேட்ட செய்தி மன்னார் மக்களை வியப்பில் ஆழ்த்தியது. இந்தியாவின் இராமேஸ்வரம் முற்றாகவே அழிந்தது. புகழ்பெற்ற 'பாம்பன் பாலம்' உடைந்து கடல் நீரில் வீழ்ந்தது. அதில் ஓடிக்கொண்டிருந்த 'மெட்ராஸ் மெயில்' புகையிரதம் அதிலிருந்த மக்களுடன் கடலில் அமிழ்ந்தது. பல்லாயிரம் மக்கள் உயிரிழந்தனர். அதேபோல் இலங்கையில் பல பாகங்களிலும் குறிப்பாக கிழக்கு மாகாணம் பாரிய அழிவுக்குள்ளாகியது. பலநூறு பேர் உயிரிழந்தனர். பலகோடி பெறுமதியான உடைமைகள் அழிந்தன. ஆயினும் மன்னாரைப் பாரிய உயிர்ச் சேதம் எதுவுமின்றி இறைவன் காப்பாற்றினார்.

மறுநாள் இம்மக்களின் உணவாகத் தேங்காய்களும், குடிநீராக இளநீர்களும் உதவின. தற்பொழுது மன்னார் விளையாட்டு அரங்கில் (STADIUM) அமைந்துள்ள நீர்த்தாங்கி (தற்பொழுது அந்த இடத்தில் புதிய நீர்த்தாங்கி அமைக்கப்பட்டுள்ளது) நல்லவேளையாக சேதமாகாமல் மன்னார் மக்களுக்கு நீரை வழங்கியது. இதன் விளைவாக மன்னார் மக்கள் மின்சாரமில்லாமல் சுமார் ஆறு மாதங்களும், தாம்போதி (பெரிய பாலம்) சேதமுற்றதால் சுமார் ஒரு வருடம் சீரான போக்குவரத்துப் பாதையுமின்றி கஸ்ரப்பட்டனர். தலைமன்னார் முகாமில் அடைக்கப்பட்டிருந்த இந்தியக் குடியேறிகள் அந்த முகாம் உடைந்ததால் தப்பி ஓடினர். தலைமன்னார்த் துறையில் கட்டப்பட்டிருந்த இராமேஸ்வரம் - தலைமன்னார் இடையே சேவையிலிருந்த 'இராவின்' என்னும் சரக்கு – பிரயாணிகள் கப்பல் பாரிய உணவுப் பொருட்களுடன் சுமார் 20 மீற்றர் முன்னேவந்து தரைதட்டியது. பின்னர் இக்கப்பலை கடலுக்குள் கொண்டு செல்ல சுமார் ஆறு மாதங்கள் சென்றன. வருடம் முழுவதும் நடைமுறையில் இருந்த இந்தக் கப்பல் சேவை, அந்தச் சூறாவளிக்குப் பின்னர் நவம்பர், டிசம்பர் மாதங்களில் முற்றாக நிறுத்தப்பட்டது.

சூறாவளியின் கொடூரப் பிடியிலிருந்து மன்னார் மக்கள் உயிர் பிழைத்தாலும் பாரிய உணவுத் தட்டுப்பாட்டிலும், மின்சாரமின்மையாலும் கட்டிடப் பொருட்கள் வராமையினாலும் பல்வேறு கஸ்ரங்களை அனுபவித்தனர். அந்தச் சந்தர்ப்பத்தை பதுக்கல் வியாபாரிகளும், பகல் வேஷக்காரர்களும், பகல் கொள்ளைக்காரரும், தரகர்களும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தினர். அரசாங்க அதிகாரிகளின் அலட்சிய அசமந்தப் போக்கால் மக்கள் கொதித்தெழுந்தனர். அவ்வேளையில் மன்னார் பட்டினசபைத் தலைவராக ஜனாப். எம். எஸ். ஏ. நஹீம் அவர்களும், மன்னாரின் பாராளுமன்ற உறுப்பினராக திரு. வி. ஏ. அழகக்கோன் ஐயா அவர்களும், மன்னாரைப் பழையநிலைக்குக் கொண்டுவர எவ்வளவோ பாடுபட்டனர். அதில் அவர்கள் வெற்றிபெற முடியவில்லை.

அந்த நேரத்தில் உருவானதுதான் எனது 'மக்கள்' சஞ்சிகை. மன்னாரில் முதலாவது செய்தி ஏடாக – சஞ்சிகையாக 'புரட்சிப் புயலாக அது தன் கன்னிப்பயணத்தைத் தொடர்ந்தது. மக்கள் புரட்சி ஏடு, நல்லோரைப் பாடியும், தீயோரைச் சாடியும் மக்களையும், அரசாங்க அதிகாரிகளையும் விளிப்படையச் செய்தது. பதுக்கல் வியாபாரிகளைப் படம்போட்டுக் காட்டியது. அதன் அதிபராகவும் - செய்தி ஆசிரியராகவும் நான் இருந்தேன். ஆலோசகராக – பிரதம ஆசிரியராக எனது மூத்த சகோதரர் வித்துவான் றகுமான் இருந்தார். ஆசிரியராக எனது இளைய சகோதரன் 'கலைவாதி கலீல்' ஆகியோர் பணிபுரிந்தோம். இந்த மூவேந்தர்களின் மேற்பார்வையில் சுமார் இரண்டு வருடங்கள் பவனி வந்தது 'மக்கள்' புரட்சி ஏடு. அதன் மூலம் மன்னார் ஓரளவு சீரடைந்தது. பாதை (தாம்போதி) திறக்கப்பட்டது. மின்சாரம் பெறப்பட்டது. ஆனாலும் சுமார் ஐயாயிரம் இல்லங்களில் அழகு நடை பயின்ற 'மக்கள்' தன் பணியை நிறுத்திக்கொண்டது. காரணம் தொடர் வழக்குகளும் பொருளாதாரக் கஸ்ரங்களும் ஆகும்.

சென்ற 2005ல் ஆசியக் கண்டத்தையே ஆட்டிப்படைத்த மாபெரும் 'சுனாமி' என்ற ஆழிப்பேரலையில் இலங்கையில் வடக்கு, கிழக்கு, தெற்குப் பகுதிகள் அழிவுற்று பல்லாயிரம் மக்களைக் காவுகொண்டபோது மன்னார்க் கடல் எவ்வித சலனமுமின்றி மிகவும் அமைதியாகவிருந்தது. சுனாமியின் கோரக் காட்சிகளை தொலைக்காட்சி வழியாகக் கண்டும், கேட்டும், கண்ணீர் சிந்தாத மன்னார் மக்களே இல்லையெனலாம்.

இலங்கையில் இரண்டாவது பெரிய கிறிஸ்தவத் தேவாலயம் பேசாலையில் 'வெற்றி மாதா தேவாலயம்' என்ற பெயரில் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. மன்னாரின் பிரமாண்டமான மூன்று பள்ளிகளும், மன்னார் மூர்வீதியிலும், எருக்கலம்பிட்டியிலும் (இரண்டு) பக்திப் பரவசம் கமழ்கின்றன. இந்துக்களின் கோவிலான சித்திவிநாயகர் கோவில், நூறு வருடம் பழமைவாய்ந்த பௌத்தர்களின் சுவர்ண பிம்பாராம விகாரை என்பன இங்குதான் உள்ளன. அத்துடன் இலங்கையின் முதலாவது மீன் பதனிடும் தொழிற்சாலை, மன்னார் பேசாலையில் 1972ல் அமைக்கப்பட்டது. நாட்டின் அசாதாரண சூழ்நிலைகாரணமாக இது இயங்காமல் இன்று மூடிக் கிடக்கின்றது.

இன்னும், யாழ் சங்கிலிய மன்னன் இங்கு வந்து 5ம் கட்டையிலுள்ள தோட்டவெளியென்ற இடத்தில் பல நூறு கிறிஸ்தவர்களை வெட்டிச் சாய்த்த வரலாறு சொல்லும் 'வேதசாட்சி ஆலயம்' இலங்கையில் அதிக மக்கள் கூடும் மடுமாதா உற்சவத்திற்கு வருகைதரும் கூடுதலான பக்தர்கள் இவ்வேதசாட்சிகள் ஆலயத்தை தரிசிக்கத் தவறுவதேயில்லை. இதேபோல் ஐயாயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த பாடல்பெற்ற திருத்தலமான திருக்கேதீஸ்வரக் கோவிலில் இந்துக்களின் புனித தினமான சிவராத்திரி இரவில் இலட்சக்கணக்கில் திரளுவது கண்கொள்ளாக் காட்சியாகும். இத்திருத்தலம் எமது தீபகற்பத்திற்கு கிழக்கே அமைந்துள்ளது. அத்துடன் தலைமன்னார் 'கப்பல் ஒலிதர்ஹா' என்பனவும் வரலாற்றுச் சாட்சிகளாகும். கரையோரக் கிராமமான புதுக்குடியிருப்பில் உள்ள வரலாறு சொல்லும் '60 தாலியறுத் குளம்', போர்த்துக்கேயரின் கொடூரம் சொல்லும்.

இங்கு 83களில் இராணுவத்தினரின் இடைவிடாத எறிகணை தாக்குதல் தாங்காமல், இறந்துபட்டோர் போக மீதமுள்ள பல்லாயிரக்கணக்கான தமிழ், முஸ்லிம் மக்களை வரவேற்று வாழ்வளித்து, அரவணைத்த எருக்கலம்பிட்டிக் கிராமமும், அதன் முற்றுமுழுதான முஸ்லிம் மக்களுக்கு, தமிழ் - முஸ்லிம் உறவுப்பாலத்தின் ஓர் உந்து சக்தியாகும். சுமார் 8 கிலோ மீற்றர் நீளமும், 1 கிலோ மீற்றர் அகலமும் கொண்ட நாற்புறமும் கடலால் சூழப்பட்ட இக்கிராமம் ஒரு இலட்சம் மக்களை மாதக் கணக்கில் வைத்துக் காப்பாற்றும் வல்லமைகொண்டது என்பதைப் பல சந்தர்ப்பங்களில் நிரூபித்துள்ளது.

இலங்கையின் முதலாவது எண்ணெய் வள ஆய்வு எமது மன்னார்த் தீபகற்பத்தில் நடைபெற்றது. 1971ல் இவ்வாய்வு ஆரம்பித்து கடலுக்கடியில் மூன்று கிணறுகள் தோண்டப்பட்டன. இரண்டு கிணறுகளுக்கான நிதி ரூபா இரண்டு கோடியை சோவியற் ரஷ்யக் குடியரசும், ஒரு கிணறுக்கான ஒரு கோடி ரூபாவை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் வழங்கியிருந்தன. ஆயினும் இம்முயற்சி தோல்வியில் முடிந்தது. சோவியற் குடியரசிலிருந்து இவ்வேலைகளுக்கான எண்ணெய் ஆய்வு நிபுணர்கள் இங்கு முகாமிட்டிருந்தனர். மன்னார் கீரியில் அவர்களுக்கான வீடுகள் அமைக்கப்பட்டு 'சனி விலேஜ்' (உஷ்ணக் கிராமம்) எனப் பெயரிடப்பட்டு அவர்கள் குடும்பத்துடன் தங்கித் தமது பணியைச் செய்தனர். இருந்தும் எமது நாட்டு அரச ஊழியர்களின் கபடத்தனத்தினாலும், பிழையான அணுகு முறையினாலும் இம்முயற்சி தோல்வியில் முடிந்தது. ஆய்வு பூரண வெற்றியென்று அன்றைய பிரதமருக்கு சபுகஸ்கந்தையிலிருந்து மசகு எண்ணெய் கொண்டுவந்து காண்பிக்கப்பட்டது.

அவரும் உண்மையென நம்பி ஏமாந்தார். இந்த உண்மையை முதலில் அரசுக்கு உணர்த்தியவன் நான். அவ்வேளையில் நான் 'லேக்ஹவுஸ் - மன்னார் குரூப் நிருபராகக் கடமையாற்றினேன். எனது முறைப்பாட்டைப் பார்த்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் உடனடியாகவே மன்னாருக்கு விசேட குழுவொன்றை அனுப்பிவைத்தார். ஆனாலும் அதில் உண்மை வெளிப்படவில்லை. ஏன்? இந்தக்குழு வருவதை அறிந்த மன்னார் நிர்வாகிகள், பெற்றோலியக் கூட்டுத்தாபனம். இரண்டாம் கட்டையில் அமைந்திருந்த அலுவலகத்தை தீக்கிரையாக்கினர். பகல் 2 மணியளவில் கொழுந்து விட்டெரிந்ததில் பல கட்டிடங்களையும், பெறுமதிமிக்க உபகரணங்களையும், சகல ஆவணங்களையும் தீ தனது கொடிய நாக்கால் விழுங்கி ஏப்பமிட்டது. ரூபாய் மூன்று கோடி முழுதாகவே எரியுண்டது. இதுதான் இங்கே எண்ணெய் ஆய்வின் வரலாறு. இப்போது மீண்டும் பூதம் புறப்பட்டதுபோல் புதிய ஆய்வுகள் பல நூறுகோடி பணவிரயத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக செய்திகள் வெளிவருகின்றன.

இன்று துரதிஸ்டவசமாக மன்னார் கடத்தல்காரர்களின் இணைப்புப்பாலமாக மாறிவிட்ட கொடுமையையும் சொல்லித்தான் ஆகவேண்டும். அதில் உச்சக் கட்டமாக மனிதப் பேரழிவின் கோரமுகத்தைக் காட்டும் போதைவஸ்து (சிங்களத்தில் குடு) வின் நுழைவழியாகவும் இணைப்புப் பாலமாகவும் மன்னார் மாறிவிட்டதோடு பலகோடி ரூபா பணப்பரிமாற்றத்தின் கேந்திர நிலையமாகவும் மாறிவிட்டது.

இன்று இலங்கை முற்றுமுழுதாக இந்தியாவையே தங்கிநிற்கின்றது. உணவுப்பொருட்கள், மருந்துப்பொருட்கள், சைக்கிள், ஓட்டோ, கார் முதல் பல்வேறு கனரக வாகனங்கள், கட்டடப்பொருட்கள், தொழிற்சாலை உபகரணங்கள், கணினித் தொழில் நுட்பங்கள், கனரக ஆயுதங்கள், திரைப்படங்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், பத்திரிகைகள், நூல்கள், கலைகலாச்சார விழுமியங்கள் என சுமார் 90% மான பொருட்கள் இந்தியாவில் இருந்தே வருகின்றன. இதனால் இலங்கையின் செல்வங்கள் இந்தியாவைச் சென்றடைகின்றன. இதில் விமான, கப்பல்கள் மூலம் இலங்கையின் பெருமளவு அந்நியச் செலாவணிகள் இழக்கப்படுகின்றன.

தலைமன்னார் துறைமுகத்தை மீளவும் புனரமைத்து, கடலைச் சற்று ஆழப்படுத்தி புகையிரத ஓடுபாதைகளையும் அமைத்தால் மன்னார் தீவினூடாக இந்தியப் பொருட்களை இறக்குமதி செய்வதன் மூலமும், ஏற்றுமதி செய்வதன் மூலமும் பல்லாயிரம் கோடி வெளிநாட்டுச் செலவாணியைப் பெறுவதோடு, மன்னார் மக்களுக்கும் வேலை வாய்ப்பை வழங்கி அவர்களையும் வளப்படுத்துவதன் மூலமும் நாட்டைச் செல்வம் கொழிக்கவைக்கலாம். அதிஸ்டவசமாக மன்னாரில் மசகு எண்ணெய் கிடைத்தால்? அந்த வளத்தால் இலங்கையின் தலைவிதி? மன்னார் தலைநகராக மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

முடிவாக, முன்பு மன்னார் மாதலத்தின் 'ஒற்றுமைப் பாலம்' வரலாறு சொன்னேன். இப்போது இலங்கை - இந்திய இணைப்புப் பால வரலாறு சொல்கிறேன். விரைவில் மன்னார் மாதலத்தின் புனித வரலாறு, இயற்கை வரலாறு, பொருளாதார வரலாறு என்பவை பற்றித் தனித்தனியாக சொல்வேன் என்று கூறி இவ் வாக்கத்தை நிறைவு செய்கின்றேன். ●

# மரத்துப் போனது மனிதம்

ஆசிரியர் எம். எம். நிக்சன்
மன்/ அடம்பன் ம.ம.வி

படைப்பின் வரலாற்றினை நோக்கும்போது இறைவன் மனிதனுக்கு வேண்டிய சகலத்தையும் படைத்துவிட்டு அனைத்திலும் மேலானதாக மனிதனைப் படைத்தார். அனைத்தையும் ஆண்டு நடத்தும் அதிகாரத்தையும் மனிதனுக்குக் கொடுத்தார். "படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக. மனுவைப் படைத்தான் தனை வணங்க"

ஒவ்வொரு மனிதனும் வாழப் படைக்கப்பட்டவன். அவன் எப்படியும் வாழலாமென படைக்கப்படவில்லை மாறாக இப்படித்தான் வாழ வேண்டுமெனப் படைக்கப்பட்டான். ஆனால் இன்றோ மனிதன் எப்படியும் வாழலாமென்ற நிலைக்கு வந்துவிட்டான். இது மனிதனின் துர்ப்பாக்கிய நிலைக்கு வழிவகுக்கின்றது என்பதுடன் இறை இரக்கத்தில் இருந்து அவனை விலகி வாழ வழிசமைக்கின்றது. மனிதனின் மகத்துவம் இன்று எந்தளவிற்கு உணரப்படுகின்றது என்பது சிந்திக்க வேண்டிய தொன்றே.

படைப்பின் இறைவனை மறந்து இன்று எங்கும் மனிதன் மனித இனத்திற்கு எதிராகச் செயற்படுகின்றான். எங்கும் கொலைகளும் கடத்தலும் களவும் மிரட்டலும் பழிக்குப் பழிவாங்குதலும் மலிந்து போய்விட்டது. இவற்றையே எல்லாத் தினசரிப் பத்திரிகைகளிலும் வானொலி, தொலைக்காட்சிச் செய்திகளிலும் கேட்டும் பார்த்தும் வருகின்றோம். மனிதன் சுகந்திரமாக நடமாட முடியவில்லை. மரத்துப்போன மனித மனங்களால் மனித மாண்பின் மகத்துவம் சின்னாபின்னமாக சிதறிடிக்கப்படுகின்றது.

"ஒவ்வொரு மனிதனும் என் நண்பன் ஒவ்வொரு மனிதனும் சகோதரன். வறுமையில் வாழ்பவன் என் நண்பன். வருத்தத்தில் இருப்பவன் சகோதரன். அல்லப்படுபவன் என் நண்பன். காரணம் அவனும் மனிதன்" என்ற மேன்மையான அர்த்தம் நிறைந்த எண்ணம் - உணர்வு இன்று அடியோடு அருகிவிட்டது. சில மிருகங்களில் அவதானிக்கின்ற ஒற்றுமை இரக்க சுபாவம் பரிவு இன்று ஏன் ஆறறிவு படைத்த மனிதனிடம் அருகிவிட்டது? மனிதனுக்கு இருக்கவேண்டிய உயர்ந்த எண்ணமும் சிந்தனையும் ஏன் இன்று மனிதனிடம் காணமுடியாதிருக்கின்றது?

இவற்றிற்குக் காரணம் மனிதன் இறப்பைப்பற்றி சிந்திப்பதில்லை. மனித வாழ்க்கை ஒரு குறிப்பிட்டகாலத்திற்கே என்பதை எண்ண அவன் மறந்துவிடுகின்றான். உயிர் ஒன்று உடலுடன் இருக்குமட்டுமே அவனுடைய ஆணவமும் மரத்த உணர்வுகளும் மேலோங்கிக் காணப்படும். உயிர் உடலைவிட்டுப் பிரிந்த மறுகணமே அவன் பிணமாகின்றான். இந்நிலைமைகளை அவன் நினைப்பதில்லை. இவற்றை அவன் ஆழமாகச் சிந்திப்பானாகில் மட்டுமே அவன் உயர்ந்த மனிதப் பண்பு கொண்டவனாக வாழமுடியும். அப்போதுதான் அவனிடம் அன்பு பாசம் பகிர்வு விட்டுக்கொடுப்பு போன்ற மனிதப் பண்புகள் மிளிரும்.

*மனிதன் மிருகமாகலாம். மனிதன் மனிதனாகலாம் மனிதன் புனிதனாகலாம்* என்ற மூவகை நிலைகளில் மனிதன் புனிதனாக மாற வேண்டுமென்ற கட்டாயத் தேவையல்ல. அவன் மனிதனாக, மனிதப் பண்புகள் கொண்டவனாக வ்ாழ்ந்தாலே போதுமானது. "இச்சின்னஞ் சிறுவர்களுக்கு செய்ததெல்லாம் எனக்கே செய்தீர்கள்" என்று கூறுமளவிற்கு மனிதனை நேசித்து படைத்த இறைவனைத் திருப்திப்படுத்த ஏன் மனிதனால் இன்று முடியவில்லை?

ஒற்றுமையாய் ஒன்றுபட்டு கைகோர்த்து நிற்கும் நிலையில்தான் மனிதம் உதயமாகும், மனிதம் மலரும். ஒவ்வொரு தனிமனிதனும் முதலில் சமபார்வையுடயவனாக இருக்க வேண்டும். இந்நிலையே அவனை ஒரு புதிய மனிதனாக காலப்போக்கில் மாற்றிவிடும். அமைதியை இழந்து சமாதானமின்றி சுதந்திரமின்றி ஒற்றுமையின்றி இருக்கும் நிலை நீங்க ஒவ்வொரு மனிதனும் உழைக்க வேண்டும். இதுவே வீட்டிலும் குடும்பத்திலும் சமூகத்திலும் நாட்டிலும் ஒளிமயமான எதிர்காலத்தைத் தோற்றுவிக்கும். எனவே மனித மாண்பின் மகத்துவம் அற்றுப்போய் மனிதம் இறந்து கிடக்கின்ற நிலையை மாற்றி அதற்கு உயிர்கொடுப்போம். மனிதனை மனிதனாக மதிப்போம். மனித மாண்பின் மகத்துவத்தைக் கட்டியெழுப்புவோம். மனிதன் மனிதனாக வாழ இறைவனை வேண்டுவோம்.

# கறிற்றாஸ் - வாழ்வுதயம்

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

மன்னார் மறைமாவட்ட நீதி, சமாதான, மனித முன்னேற்ற நடுநிலையம்

*"நான் தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தணித்தீர்கள்"*

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

போஷகர்
அதிவந்தனைக்குரிய
ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை

இயக்குனர்
அருட்தந்தை பெப்பி சோசை

Affiliated to National Secretariat for Justice, Peace & Human Development Commission of the Catholic Bishops' Conference in Sri Lanka incorporated by Act of Parliament, No. 17 of 1983 - Caritas - Valvuthayam, Diocese of Mannar, No. 17, Main Street, Mannar - Sri Lanka. T.P: 023-2222140, Fax : 023-2222893, E-mail : valvum@sltnet.lk


## கறிற்றாஸ் வாழ்வுதயத்தினுடைய தொழிற்பயிற்சி பிரிவின் 6 மாத காலப் பணி



கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் தொழிற்பயிற்சிப் பிரிவானது கடந்த 6 மாத காலமாக பயனாளிகளுக்குத் தனது பயிற்சிகளை வழங்கி பூரண வெற்றியைக் கண்டுள்ளது.

கடந்த 6 மாத காலம் வீட்டு மின் பாவனைப் பொருட்கள் திருத்தும் பயிற்சி, தையல் பயிற்சி, அழகுப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி, பன்னை வேலைப் பயிற்சி, கணனிப்பயிற்சி, அச்சகப் பயிற்சி போன்ற தொழிற் பயிற்சிகளையே வாழ்வுதயம் வழங்கியுள்ளது. குறிப்பாக 14 - 18 வயதிற்குட்பட்ட இளம் பராயத்தினருக்கு இப்பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இப்பயிற்சிக்கான மாணவர்கள் தெரிவின்போது அதிக கவனம் செலுத்தப்பட்டது. அதாவது யுத்தத்தினாலும், இயற்கை அனர்த்தங்களாலும் கல்வியை இடை நிறுத்தியவர்களுக்கும், தாய் தந்தையர்களை இழந்தவர்களுக்குமே முன்னுரிமை வழங்கப்பட்டது.

150க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் இப்பயிற்சியைப் பூர்த்தி செய்தனர். கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் நோக்குக்கு அமைவாக இன மத குல பேதமற்று இம்மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். இப்பயிற்சியானது பெரிய கமம், மன்னார், கீளியன் குடியிருப்பு, உப்புக்குளம், எருக்கலம்பிட்டி, தோட்டவெளி, பேசாலை ஆகிய பிரதேசங்களில் வழங்கப்பட்டது,

இப்பயிற்சி நெறிக்கு ILO நிறுவனம் நிதியுதவி வழங்கி ஒத்துழைப்பு நல்கியுள்ளது. இப் பயிற்சிக்கென ILO நிறுவனம் அறுபது இலட்சம் ரூபா நிதியினை வழங்கியது.

மேலும் பல ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் இந்நிறுவனம் வழங்கியமை பாராட்டக்கூடிய விடயமாகும்.

## வவுனியா மாவட்ட கிராமிய விழிப்பூட்டல் குழு உறுப்பினர்களுக்கான அனர்த்த முகாமைத்துவக் கருத்தமர்வு

வவுனியா மாவட்டத்தில் கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் கீழ் 34 கிராமிய விழிப்பூட்டல் குழுக்கள் சமூக, பொருளாதார, கலை கலாச்சார, ஆன்மீக செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்கின்றன. குழுமங்களாக இக்குழு உறுப்பினர்கள் ஒற்றுமையில் சிறந்து விளங்கி சிறப்பாக இயங்கி வருகின்றனர். இக்குழு உறுப்பினர்களுள் 48 பேருக்கு அண்மையில் வாழ்வுதயக் கிராமிய விழிப்பூட்டல் பிரிவினால் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான முழுநாள் கருத்தமர்வு வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலய கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டது.

இக்கருத்தமர்வை புனித அந்தோனியார் ஆலய உதவிப்பங்குத்தந்தை அருட்பணி. ஆரோக்கியம் அடிகளார் இறை ஆசீரோடு ஆரம்பித்து வைத்தார். அவர் அங்கு உரையாற்றுகையில் - கறிற்றாஸ் வாழ்வுதயம் இன்று மக்கள் மத்தியில் மிகவும் சிறப்பாக இவ்வாறான விழிப்பூட்டல் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றமை பாராட்டப்படவேண்டியது என்றும் குறிப்பாக இன மத வேறுபாடு இன்றி கிராமிய விழிப்பூட்டல் குழுக்களை அமைத்து அவர்களை உண்மையிலும், நேர்மையிலும் சிறந்து விளங்குவதற்கு விழிப்பூட்டுவது சமகாலத்தில் சாலப்பொருத்தமானதாகும் என்றும் அத்தோடு கறிற்றாஸ் அமைப்பு அன்று தொட்டு இன்றுவரை மனிதநேயச் செயற்பாடுகளில் தனிக்கவனம் செலுத்தி மக்களின் அபிவிருத்திக்காகவும் பாடுபடுகின்றது என்றும் கூறி கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் பணி மேலும் சிறப்பாக அமைய வாழ்த்தி உரையை நிறைவுசெய்தார்.

இக்கருத்தமர்வுக்கு வளவாளராக வாழ்வுயத்தின் திட்ட இணைப்பாளர் திரு. செல்வின் அவர்கள் செயற்பட்டார். இந்த அமர்வை வவுனியா மாவட்ட வாழ்வுதய அலுவலர் திரு. விமலநாதன் அவர்கள் ஒழுங்குபடுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தேசிய சமாதான விழிப்பூட்டல் செயற்பாடுகள்



கடந்த மாதம் தேசிய சமாதானப் பிரிவினால் வளர்ந்தோருக்கும், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் சமாதான விழிப்பூட்டல் செயற்பாடுகள் பரவலாக கொடுக்கப்பட்டுள்ளன. இதில் பலர் விழிப்பூட்டல் பெற்று நன்மைகள் அடைந்துள்ளனர்.

மன்னார் மறைமாவட்ட ஆணைக் குழுக்களுடன் இணைந்தும் பல்வேறு செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக 17.06.2007 அன்று பேசாலையில் அருட்தந்தை அகஸ்ரின் அடிகளார் தலைமையில் சமாதான விழிப்புணர்வுக் கருத்தமர்வு இளைஞர் யுவதிகளுக்கு நடாத்தப்பட்டது. இதில் 40 இளைஞர் யுவதிகள் கலந்துகொண்டு பயனடைந்தனர். இவற்றைவிட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வன்முறையற்ற தொடர்பாடல் என்னும் தலைப்பில் வாழ்வுதய மண்டபத்தில் செயலமர்வு ஒன்றும் நடாத்தப்பட்டது.

24.06.2007இல் மன்னார் மறைக்கோட்ட மாணவர்களுக்கும் **"வன்முறையற்ற தொடர்பாடல்"** என்னும் தலைப்பில் செயலமர்வு ஒன்று வாழ்வுதய மண்டபத்தில் நடாத்தப்பட்டது. இவ் அமர்வுக்கு வளவாளராக திரு. ரியூட்டர் அவர்கள் செயற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இவற்றைவிட கடந்த மாதம் முருங்கன் பிரதேசத்தில் வாழ்வுதயத்தால் கல்வி உதவி பெறும் 7ம் ஆண்டுக்கு மேற்பட்ட மாணவ மாணவிகளுக்கு சமாதானம் பற்றி விழிப்பூட்டல் கொடுக்கப்பட்டது.

அத்தோடு அன்பிய ஆணைக்குழுக்களுடன் இணைந்து மறைக்கல்வி நிலையத்தில் அன்பிய இணைப்பாளர்களுக்கு **"கிறிஸ்துவே நம் சமாதானம"** என்னும் தலைப்பில் திரு. **C.M.A** ஜெயதாஸ் அவர்களால் கருத்துரை ஒன்றும் இடம்பெற்றது. இதில் 50 அன்பிய இணைப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

இவற்றோடு சமாதான செயற்றிட்ட பிரிவினரால் சர்வமத ஒன்றிப்பு கலந்துரையாடல்களும் ஒழுங்குசெய்யப்பட்டு கோட்ட மட்டங்களில் நடாத்தப்பட்டுள்ளன.

## சுய தொழில் வாய்ப்பு தொடர்பான ஒருவார காலப் பயிற்சி நெறி

கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் கிராமிய விழிப்பூட்டல் பிரிவினால் ஒருவார கால சுயதொழில் வாய்ப்பு பயிற்சிநெறியானது வாழ்வுதயத்தின் மாதிரிக் கிராமமான மளுவராயர் கட்டையடம்பன் கிராமத்தில் நடாத்தப்பட்டது.

இங்கு இயங்கும் வாழ்வுதயக் கிராமிய விழிப்பூட்டல் குழு உறுப்பினர்களில் 25 பேருக்கு முதல் தடவையாக **SYB** எனப்படுகின்ற ***வியாபாரத்தை எவ்வாறு ஆரம்பிப்பது*** என்பது தொடர்பான பயிற்சிநெறி கடந்த மாதம் நடாத்தப்பட்டது. இப்பயிற்சி நெறியை கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் இயக்குனர் அருட்தந்தை. எஸ். ஜே. பெப்பி அடிகளார் ஆரம்பித்து வைத்தார்.

இப்பயிற்சி நெறிக்கென கறிற்றாஸ் சிறீலங்காவின் **NPA** பிரிவு நிதி உதவியினையும் வளவாளர்களையும் தந்துதவியுள்ளது.

இப்பயிற்சிக்கென **ILO** நிறுவனத்தினால் சிறப்பாக பயிற்றுவிக்கப்பட்ட திரு. உதயராஜன் அவர்களும், திரு. ஜெகன் அவர்களும் வளவாளர்களாக செயற்பட்டனர்.

இப்பயிற்சியின் பின்னர் **ILO** மற்றும் கறிற்றாஸ் நிறுவனத்தின் பெறுமதிமிக்க சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இப்பயிற்சியில் வாழ்வுதய உதவியாளர்கள் 5 பேர் கலந்துகொண்டு பயனடைந்தனர். அத்தோடு இப்பயிற்சியை பூர்த்திசெய்தவர்களின் தொழில் வாய்ப்பை மேம்படுத்துவதற்கு அவரவர் தொழில் வாய்ப்புக்கு ஏற்ப கடன் பணமும் வாழ்வுதயத்தினால் வழங்கப்பட உள்ளது. இப்பயிற்சியானது இம்மக்களுக்கு மிகவும் பயனுள்ள ஓர் பயிற்சியாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## மன்னார்! அன்றும் இன்றும்!

**மக்கள் காதர்**



எமக்கு சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னர் தமிழர்களும், முஸ்லீம்களும் சாதிமத இனபேதமின்றி செல்வச் செழிப்பில் வாழ்ந்தவர்கள். மும்மதமும் சம்மதமாய் ஓரணியில் நின்றவர்கள். ஏன் சிங்களவர்கள், பௌத்தர்கள்கூட நூற்றுக்கணக்கில் இங்கு வந்து வாழ்ந்து வளம் பெற்றார்கள். சுதந்திரத்திற்குப் பின்னர் இந்த நிலமை மாறி இப்போது இங்கு அரசபடைகள், கடற்படைகள் காவலர்களைத் தவிர சிங்களவர்கள் வேறு எவருமில்லை.

கடந்த நூறு வருடங்களாக நம் நாட்டில் புயல், வெள்ளம், சுனாமி, இனக்கலவரம் போன்ற பேர் அழிவுகள் ஏற்பட்டபோதும்கூட எவ்விதக் கவலையின்றி மகிழ்சியுடன் வாழ்ந்து வந்தவர்கள் மன்னார் மக்கள்.

வருடம் இரு போகம் வேளாண்மை, வருடம் முழுவதும் மீன்பிடி, சிறு தானிய பயிர்ச் செய்கை இடைக்கிடையே பழச் செய்கை பல்வேறு பாரிய மரவளம், உப்பு உற்பத்தி என்பனவற்றுடன் வர்த்தகர்களாகவும், அரச ஊழியர்களாகவும், தொழிலாளர்களாகவும், உழைத்து போதும், போதும் என்று வாழ்ந்தவர்கள்! இவர்கள்தான் இன்று பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளனர்.

கடந்த இருபது வருடங்களில் நாட்டில் ஏற்பட்ட வன்முறையின் உச்சக்கட்டமாக கடந்த இரண்டு வருடங்களாக எம் மக்கள் சொல்லொண்ணாத் துன்பத்தில் துவண்டு போயுள்ளனர். இந்த மாதலத்தில் 60 விகிதம் விவசாயமாகும், 40 விகிதம் மீன்பிடியாகும். அவைகள் முற்றாகவே சிதைந்துள்ளன.

விவசாயத்தைப் பொறுத்த வரையில் விவசாய நிலங்களில் அதிகமானவை கண்ணிவெடிப் புதை நிலங்களாகவும், அதியுயர் பாதுகாப்பு நிலங்களாகவும் உள்ளது. செய்யும் சிறிய அளவு நெல் உற்பத்தியும் விலை போகாமல் தேங்கிக்கிடக்கின்றது. மன்னார் மக்களின் விவசாய வருமானம் 40% வீதமாகவே உள்ளது.

முன்பொரு காலத்தில் விவசாயக் குடும்பங்கள் தங்கள் காலபோக அறுவடையின் பின்னர் மிகவும்ஆடம்பரமாக வாழ்ந்தனர். வாகனங்கள், புதிய வீடுகள், தங்க ஆபரணங்கள், ஆடம்பரமான திருமணங்கள், திருவிழாக்கள் என்று வாழ்ந்தவர்கள் இன்று அரை வயிற்றுச் சோற்றுக்குக்கூட அல்லாடுகின்றனர்.

அதுபோலதான் மீன்பிடியும். இந்துமா சமுத்திரத்தின் வங்காள விரிகுடாவின் அதிக மீன் விளையும் பிரதேசம் எமது மன்னார்க் குடாவாகும். அது இன்று உறக்கத்தில் ஆழ்ந்துள்ளது. இரவு முற்றாகவே மீன்பிடித்தடை. பகலில் ஒரு கிலோ மீற்றர் தூரம் மட்டுமே மீன்பிடிக்க அனுமதி, பாஸ் நடைமுறை, எரிபொருள் தட்டுப்பாடு, கடற்சமர் இப்படி பல்வேறு தடைகளால் மீன்பிடித் தொழில் 75% அழிந்துவிட்டது. முன்பு கடலில் வள்ளங்கள் பல்லாயிரம் கிலோ மீன்களை அள்ளிக்கொண்டு வந்தன. இன்று சில நூறு கிலோ மீன்கள்கூட கிடைப்பதில்லை.

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு விசம்போல் உயர்ந்துவிட்டது. உணவுப் பண்டங்களின் அபார விலை, கொழும்பிலிருந்தும், தம்புள்ளையிலிருந்தும் வரும் பொருட்கள் பல இடங்களில் ஏற்றி இறக்கப்படுவதால் ஏற்படும் காலதாமதம் அதனால் ஏற்படும் அதிகரித்த விலை உயர்வு என்பனவற்றால் உழைப்பின்றியும், போதிய வரவின்றியும் வாடும் சுமார் ஒரு இலட்சம் தமிழ் பேசும் மக்கள் பட்டினிச்சாவை எந்த நேரமும் எதிர்பார்த்துக் காத்துள்ளனர். இதைப் பயன்படுத்தி பல்லாயிரக்கணக்கான தமிழக மீனவர்கள் பல்வேறு கடற் கலங்கள் ஊடாக வந்து அத்தனை மீன் வளத்தையும் அள்ளிச் செல்கின்றனர். இவ்வாறாகவே மன்னாரின் இன்றைய நிலை காணப்படுகின்றது.

## *தொழிற் பயிற்சி மாணவர்களின் உள்ளத்திலிருந்து*

### மங்காப்புகழுடன் மாண்புறும் வாழ்வுதயம் வாழியவே...

பல்வேறு குடும்பங்களில் பல்வேறுபட்ட
குண இயல்புகளுடன், ஒரே கோழியின்
குஞ்சுகளாய் ஒன்றிணைந்து உணவு ஊட்டி
பாராட்டி தொழிற்பயிற்சியென்னும்
கலையதனால் எம்மைத் தேர்ச்சியுற
வைத்த மன்னாரின் திலகமென
திகழும் எம் வாழ்வுதயமே!

அன்புடன் எம்மை ஒன்றிணைத்தாய்!
அறிவாலே எம் வாழ்வுதனை நிறைத்தாய்!
மாணவர்கள் எம்மை அன்பு என்னும்



பாச வலையால் இணைத்த பெருமை
வாழ்வுதயமே உனக்குத்தான்!

எம் வாழ்வை மேம்படுத்த நிதி தேடினாய்!
ILO விடம் - எங்கள் வாழ்வில் ஒளியேற்றி
நிதி கொடுக்கச் சொன்னாய்.
ILO வே! அவனியிலே நின்பணி நிறையவே!
இறைபாதக் கமலமதை
சிரம் தாழ்த்தி வணங்குகின்றேன்!


எம்மை வழிநடாத்திய குருத்துவத் தந்தையே!
அதன் பணியாளர்களே!
எம் மண்ணில் உம் பணி
ஆலவிருட்சமாய் வளர்ந்தோங்கிட
துன்புறும் மக்களின் வாழ்வை
தூய வாழ்வாய் நிதம் மாற்ற
தொழிற்கலை மாணவர் நாம்
வாயார வாழ்த்துகின்றோம்!
வாழ்க வாழ்வுதயம்! வாழிய அதன் பணிகள்!


செய்தித் தொகுப்பு :
**எஸ். அன்ரன் ராஜகாரியர் (ராஜன்)**
இணைப்பாளர், கிராமிய விழிப்பூட்டல் பிரிவு, வாழ்வுதயம், மன்னார்

# கதையும் கருத்தும் களமும்

அருட்பணியாளர். அன்புராசா அ.ம.தி





காதலன் ஒருவன் காதலிக்கு கடிதம் வரைந்தான். "என் ஆருயிர் அன்பே, உன்னை நினையாத பொழுதில்லை. நீ இல்லாமல் எனக்கு வாழ்வேது? வாழ்ந்தால் அது உன்னோடுதான். ஏழு மலைகள் கடந்து வந்தேனும் உன்னைக் காண்பேன். ஐந்து சமுத்திரங்கள் தாண்டியேனும் உன்னை அடைவேன். சுனாமி போல் எவர் என்னை எதிர்த்து எதிர்ப்பட்டாலும் உன்னை அடைந்தே தீருவேன். இது சத்தியம், சத்தியம், சத்தியம். உன் உயிரோடு கலந்துவிட்ட, உனக்குள் உறைந்துபோன உன் காதலன்" எனத் தன் கையொப்பத்தையும் இட்டிருந்தான். அதே மடலில் கையொப்பத்திற்குக் கீழே 'முக்கிய குறிப்பு' எனக் குறிப்பிட்டு அதனை சிவப்பு மையால் பின்வருமாறு 'அண்டலைன்' (கோடிட்டிருத்தல்) செய்திருந்தான். "செல்லம், இன்று பின்னேரம் மழை இல்லாவிட்டால் உன்னைக் கட்டாயம் வந்து பார்ப்பேன்".

இக்காதலனுடைய யதார்த்த வரிகள் 'முக்கிய குறிப்பு' என எழுதப்பட்ட வரிகளே. யதார்த்தமான, உண்மையான நிலையும் அதுதான். எழுதிய காதல் கடிதம் கவிதை வரிகளே தவிர யதார்த்த வரிகள் அல்ல. வேண்டுமானால் இக்கவிதை வரிகளை இரசிக்கலாம், சுவைக்கலாம், மேலும் இவ்வரிகள் கற்பனை உலகிலே மிதக்க உதவலாம். இல்லையென்றால், 'மலைகளைக் கடந்து, சமுத்திரங்களைத் தாண்டி, எதிர்ப்புக்களை எதிர்கொண்டு உன்னை அடைந்தே தீருவேன்' என்பவருக்கு ஒரு வேளை மழையா இவரின் வருகைக்கு தடையாக இருக்க முடியும்.

இப்படியான ஒன்றைத்தான் தொலைக்காட்சி, சினிமா வளர்த்துக்கொண்டிருக்கின்றது. யதார்த்த – உண்மை நிலைகளை மறைத்து ஒரு மாயையைத் தோற்றுவித்துக் கொண்டிருக்கின்றது! அதாவது மேலே உள்ள கடிதத்தில் 'முக்கிய குறிப்பு' என்பதைத் தவிர்த்து ஏனைய பகுதியைப்போல சினிமாவும், தொலைக்காட்சியும் மாயைகளை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன.

"ஏன்? தொலைக்காட்சியில் எத்தனை நல்ல விடயங்களை, நிகழ்ச்சிகளை எல்லாம் காட்டுகின்றார்களே!" என்ற வாதத்தை முன் வைப்பவர்கள் உள்ளனர். உண்மைதான். அதனை எவரும் மறுக்க முடியாது. ஆனால் தொலைக்காட்சியில் இப்படியான நல்ல, பயனுள்ள, சிறந்த, ஏகாந்த நிகழ்ச்சிகளையா மக்கள் பார்க்கிறார்கள்? உதாரணத்திற்கு ஒன்று சொல்கின்றேன். அநேக வீடுகளில் செய்திகள் பார்க்க என்றுதானே தொலைக்காட்சியையே வாங்கியிருக்கிறார்கள். ஆனாலும் நாளடைவில் அவர்கள் பார்க்காத ஒரே ஒரு நிகழ்ச்சி 'செய்தி' ஒன்றாகத்தான் இருக்கும். ஏனைய அனைத்து நிகழ்ச்சியையும் ஒன்றன்பின் ஒன்றாகப் பார்ப்பார்கள். அனேக வீடுகளில் செய்தி நேரம்தான் இடைவேளை நேரமாக இருப்பதை அவதானிக்கலாம். கூடுதலாகத் தாய்மாரும் செய்தி நேரம்தான் உணவைத் தயார் செய்கின்ற, பரிமாறுகின்ற நேரமாக மாறியிருப்பதை பார்க்கலாம். செய்திகள் பார்ப்பதற்கென்று கொண்டு வரப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டி இப்போது அதனைத் தவிர்த்து மற்ற அனைத்தையும் பார்க்க வைத்திருக்கிறது! நீரைத் தவிர்த்து பாலைக் குடிப்பதற்கு நாம் ஒன்றும் அன்னப்பறவைகள் அல்லவே!.

இன்று பல குழந்தைகளும், சிறுவர்களும் காரணம் இல்லாமலே தொலைக்காட்சியைப் பார்க்கப் பழகிவிட்டார்கள். தொலைக்காட்சியைப் பார்த்துக்கொண்டே இருக்கின்ற சிறார்கள் ஒருவகை அடிமை நடத்தை (ADDICT BEHAVIOUR) உடையவர்கள் என்று றொபின் ஸ்மித் என்பவர் கூறுகின்றார். இதே விடயத்தை றொபேட் மைக்கல் அவதானிக்கின்றபோது, "தொலைக்காட்சி போதைப்பொருளுக்குச் சமமாகப் பாவிக்கப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து பார்ப்பவர்கள் அதற்கு அடிமையாக மாறி விடுகின்றார்கள்" என்று தொலைக்காட்சி ஊட்டும் போதையைத் தன் ஆய்வினூடாக நிறுவுகிறார். மேலும், அலன் ரூபன் என்ற ஆய்வாளர் இப்படி தொடர்ந்து தொலைக்காட்சி, சினிமா பார்ப்பவர்களுக்கு எதன்மீதும் நாட்டம் இருக்காது என்றும், இவர்கள் எதிலும் முழு ஈடுபாடு காட்டமாட்டார்கள் எனவும் கூறுகிறார்.

இதனைப் பற்றி எத்தனை பெற்றோர் கவலைப்படுகிறார்கள்? கரிசனை எடுக்கிறார்கள்? அவர்களே தொலைக்காட்சிக்குள் மூழ்கியிருக்கும்போது யாரைப்பற்றி யார் கவலைப்படுவது? கரிசனை கொள்வது? அல்லது 'எங்களுக்குத் தொல்லை தராமல் எதையாவது செய்யட்டும்' என்ற மனநிலையில்தான் பெற்றோர்களும், பெரியவர்களும் செயற்படுகிறார்கள். இத்தகைய மனப்பாங்குகள் ஆரோக்கியமானவை அல்ல. இதன் விளைவு காலப்போக்கில் எப்படியிருக்கும் என்பதை கவிஞர் வைரமுத்து வர்ணிக்கையில், "இனிமேல் பிறக்கும் குழந்தைகள் அம்மா என்று அழைக்காது சினிமா நடிகையின் பெயரைச் சொல்லித்தான் குவா குவா எனக் கூவும்" என்கிறார். "நம் பிள்ளைகளுக்குப் பல் முளைக்கும் முன்பே சினிமா மீசை முளைக்க வைத்துவிட்டது" என்ற கவிஞனின் வரிகள் சிந்திக்கத்தக்கன.

சிறார்கள் தொலைக்காட்சியைக் கூடுதலாகப் பார்ப்பதற்கான காரணங்களை கண்டறிவதற்கான ஆய்வை மேற்கொண்ட டிப்பான் வியூரன் 'தப்பித்தல்' காரணத்திற்காகவே தொலைக்காட்சியில் அமிழ்ந்துபோய் விடுகின்றார்கள் என்கிறார். எதிலிருந்து இவர்கள் தப்பிக்க முற்படுகின்றார்கள் என்றால் தங்களின் அன்றாட கடமைகள், நிஜமான வாழ்க்கைச் சூழல் போன்றவற்றிலிருந்து தப்பித்துக்கொள்கிறார்கள்.

நடைமுறையில் அதிகமான வீடுகளில் 24 மணி நேர வைத்திய, போக்குவரத்து சேவைகளைப்போல, தொலைக்காட்சி அல்லது படக்காட்சிகள் ஓடிக்கொண்டே இருக்கும். சாப்பிடுவது, படிப்பது, உறங்குவது, ஓய்வெடுப்பது என்று எல்லா செயற்பாடுகள் நடக்கிறபோது பின்னணி இசையைப்போல் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாகப் போய்க்கொண்டே இருக்கும். உறவாடலுக்கு சொற்பநேரத்தையும் கொடுக்காமல் தொலைக்காட்சியோடே காலம் கழிப்பவர்கள் இன்று அதிகரித்து விட்டார்கள். யாராவது விருந்தினர் வீட்டுக்கு வந்தால் கூட அவர்களைப் பற்றி அக்கறை கொள்ளாமல் இருக்கின்ற எத்தனையோ பேர் இன்னும் உயிருடன் நம் வீடுகளில் இருக்கத்தான் செய்கிறார்கள்! .. இதனால் உண்மையான உறவை வளர்ப்பதற்கு வாய்ப்பில்லாமல் வெறுமை நிலை உருவாகிறது.

இதனைப் பற்றிச் சிந்திக்கின்ற போதுதான் கவிஞன் வைரமுத்துவின் வைரவரிகள் நினைவுக்கு வருகின்றன. "நம்மூர் ஜனங்கள் வாழ்க்கையை வெளியே தொலைத்துவிட்டு சினிமா கொட்டகையின் செயற்கை இருட்டிற்குள் தேடிக்-கொண்டிருக்கிறார்கள்" என்று குறிப்பிடுகிறார். இன்று சினிமாக் கொட்டகைகளுக்காக படமாளிகைகளுக்குப் (THEATRES) போகவேண்டிய கட்டாயம் இல்லை. இச்சினிமாக் கொட்டகைகள் புதிய வடிவங்களில் நம்முடைய வீட்டுக்குள், ஏன் படுக்கை அறைக்குள்ளேயே வந்துவிட்டன! அதுதான் 'கேபிள் ரிவி' (CABLE TELIVISION) ஆக. நம்முடைய வாழ்வில் 'விஷனை' (VISION) சரியாக, தெளிவாக வகுக்கவில்லை என்றால் 'விஷனை' (VISION) 'ரெலிவிஷன்' (TELEVISION) விழுங்கிவிடும்.


"ஆண்டவர் என் ஆயன், எனக்கு ஒரு குறையுமில்லை. பசும்புல் மேய்ச்சல் நிலத்தில் என்னைப் படுக்கச் செய்கின்றாரே. தேற்றும் நீரருகே என்னை அழைத்து புத்துயிர் ஊட்டுகின்றாரே, தம் பெயர் பொருட்டு என்னை நேரிய வழியில் நடத்திச் செல்கின்றாரே. காரிருள் கணவாயில் நான் நடந்தும் தீமை எதற்கும் அஞ்சேன். ஏனெனில் உம் தண்டும் கோலும் என்னைத் தேற்றும். என் பகைவர் பார்த்திட விருந்து ஒன்று ஏற்பாடு செய்கிறீர். என் தலைக்கு எண்ணை பூசுகிறீர். என் கிண்ணம் நிரம்பி வழிகின்றதே. அன்பும் தயவும் என் வாழ்நாளெல்லாம் என்னைத் தொடருமன்றோ. ஏனெனில் ஆண்டவருடைய இல்லத்தில் நீடூழி குடியிருப்பேனே" என்று விவிலியத்தின் திருப்பாடல் 23 கூறுகிறது. முன்னைய தலைமுறையின் ஆயன் ஆண்டவர் (கடவுள்), இன்றைய தலைமுறையின் ஆயர் ரீ.வீ. (T.V) என்று நவீன திருப்பாடல் ஒன்றை விவிலியப் பேராசிரியர் வை. இருதயராஜ் எழுதியிருக்கிறார். ஆறுதலாகப் படித்துப் பாருங்களேன்!.

"ரீ.வி எனது ஆயன் ஆகவே எனக்கொரு குறையுமிராது. அது என்னைப் பஞ்சுமெத்தையில் படுக்கச் செய்கிறது. என்னை விசுவாச வாழ்விலிருந்து விலகச் செய்கிறது. என் மனச்சாட்சியை மழுங்கடிக்கிறது. எனவே எத்தகைய பாவத்திற்கும் அஞ்சமாட்டேன். தனிமையைக் கண்டு பயப்படமாட்டேன். ஏனெனில் T.V என்னுடன் இருக்கிறது. 'கேபிள் டி.வியும், ரிமோட் கண்ரோலும்' எனக்கு மிகவும் ஆறுதல் அளிக்கின்றன" என்று தற்கால தலைமுறையின் போக்கைச் சுட்டிக்காட்டுகிறார்.

அதனால்தான் "திருவள்ளுவர் கூறும்போது திரும்பாத மனிதன் திரிஷா, அசின், நமீதா, போன்ற நடிகைகள் கூப்பிடும்போது கூனிக்குறுகி கும்பிடுகிறான்" என இத்தலைமுறையின் நடத்தையை நாடிபிடித்துக் காட்டுகிறார் கவிஞர் வைரமுத்து.

இவ்விடத்தில் இன்குளாப் கூறுவதோடு சேர்ந்து நானும் உங்களுக்கு ஒன்றை நினைவூட்ட விரும்புகிறேன். "தமிழா விழித்தெழு - இல்லையேல் வெள்ளித் திரைக்கென்று உன் வேட்டியையும் திருடிக்கொள்வார்கள்" ஜாக்கிரதை! புரியல்ல... கவனம்! ஆமா... ●

# மன்னா விளம்பரப் பலகை



"குறுக்கு வழியில் ஆயிரம் ரூபாவைச் சம்பாதிப்பவன் விரைவில் பத்தாயிரம் ரூபாவை இழப்பதற்கு தயாராகி விட்டான் என்பதே உண்மையாகும்"
*யே.அன்ரோ நிஷாயா, மாவிலங்கேணி, முருங்கன்*

"ஒருவனுக்கு உதவி புரிந்து இன்னொருவனை வேதனைக்குள்ளாக்கினால் செய்த உதவிகூட இல்லையென்றாகிவிடும்"
*ஷெறின், தலைமன்னார் மேற்கு*

"நம்பி எதையும் துணிந்து செய்யும் அன்பு எதையும் பொறுத்துக்கொள்ளும்"
*ச. பொலின் ஜீவகி, பாலையடிப் புதுக்குளம், உயிலங்குளம்*

"எவன் ஒருவன் தாய்க்குத் தலை வணங்குகிறானோ
எவன் ஒருவன் விதவைக்கு பொட்டிட்டு பூச்சூடுகிறானோ
அவனே மனித சமூகத்தின் மனித தெய்வம்" - *வின்சன்ட், வாழ்க்கைப்பெற்றான் கண்டல், முருங்கன்*

"ஓரிடத்தில் ஓய்வுவெடுக்க வேண்டுமானால் - நீ முதலில் துரிதமாக ஓடவேண்டும்"
*ச.போள் ஜீவிதன், பாலையடிப் புதுக்குளம், உயிலங்குளம்*

"தற்காலிக சுகபோகங்களுக்காக நாம் நம்முடைய
ஒழுக்கத்தை பழுதாக்கி கொள்ளலாகாது.
வாழ்வில் இன்பம் பெறுவதற்குரிய வழி
நம்முடைய ஒழுக்கத்தைப் பாதுகாப்பதேயாகும்."
*பி.நிரஞ்சலா, எமில்நகர், மன்னார்*

"பறந்து செல்லுங்கள். உலகம் ஆறு நாட்களில் படைக்கப்பட்டது என்பதை மறந்துவிடாதீர்கள்"
*சி.றோமி, மன்/ ஆண்டாங்குளம் R.C.T.M.S*


"அன்புதான் மலிவான பொருள், மிக விலை உயர்ந்ததும் அன்புதான்"
*டீ.ஜெனட் நீரஜா, கண்டி*

"ஒற்றைக் கம்பியில் நடப்பதற்கும் ஒழுக்கத்தில் நடப்பதற்கும் வேறுபாடில்லை. கம்பியில் தவறினால் இறப்புதான், ஒழுக்கத்தில் தவறினால் உயிர் நிலைபெறாது."
*பி.ஏஞ்சல், எமில்நகர், மன்னார்.*

"நீ என்ன சொன்னாலும், நீ என்ன செய்தாலும்
உனக்குள் ஒரு மையம் பார்த்துக் கொண்டிருக்கிறது"
*(அண்மையில் நிக்ஷன்னின் உரையில் சிந்திக்க வைத்தது)*
*ஏ. ஜெசி, வாழ்க்கைப்பெற்றான் கண்டல், அளவக்கை.*

"உண்மையாக நடப்பதால் துன்பங்கள் குவிகிறது
என்பதற்காகப் பொய் வாழ்கையைத் தேடாதே"
*அ. றெஜிற்ரா, பிடாரி குளம், முருங்கன்.*

"மலரைப் பார், கொடியைப் பார்,
வேர் எப்படி இருக்கும் என்று பார்க்காதே
அதைப் பார்க்க முயன்றால் அப்புறம் நீ
மலரையும் கொடியையும் பார்க்க முடியாது"
*செ. மேரிஜெசில்டா, இல.சி.08, மடுக்கோவில்*



"அன்பு ஒரு கண்ணாடிமாதிரி. இறுகப் பிடித்தாலும் உடைந்துவிடும், இழகிப் பிடித்தாலும் உடைந்துவிடும். அதனால் உறவுக்கு எல்லை போடக் கற்றுக்கொள்."
*அ.றெஜிற்ரா, பிடாரிகுளம், முருங்கன்.*

"மனித முகங்களை நேசிக்கும் முன்
மனித மனங்களை நேசிக்கக் கற்றுக்கொள்"
*செ.ஜெசி, மடுக்கோவில்*

"திடசித்தமும் அறிவும்தான் ஒரு மனிதனுக்குப் பெரியபலம். கொழுத்த சரீரம் அல்ல"
*க.அசோக்குமார், தட்சனாமருதமடு*

"பாவம் செய்வோர் அழிந்தாலும் மற்றவரை அன்பு செய்வோருக்கு அழிவே இல்லை."
*செ.இமாக்குலேற்றா, தோட்டவெளி*

இந்த விளம்பரப் பலகை உங்களுக்கானது. இதில் நீங்களும் எழுதலாம். இதுபோல 'சுருக் 'நறுக்சுவையாய் ...... எழுதி அனுப்புங்கள்.

முகவரி :
மன்னா விளம்பரப் பலகை
மன்னா பணியகம்,
மறைக்கல்வி நிலையம்,
புனித செபஸ்தியார் பேராலய வீதி,
மன்னார்.

# இளைஞர் மொழிவு

## கல்வியில் வெற்றி பெற...

கல்வி நமது வாழ்வை மேன்மை அடையச் செய்கின்றது. கல்வியால் நாம் அறிவிலும் ஞானத்திலும் வளர்கிறோம். நமது தொழில் முயற்சிகள்கூடக் கல்வியால் முன்னேற்றம் பெறுகின்றன. நமது தமிழ் மக்கள் கல்வியைக் கண்ணெனப் போற்றுகின்றனர். எந்தத் துன்பங்கள், இடர்கள் நடுவிலும் கல்வியைக் கைவிடாது தொடரக் கடும்முயற்சி செய்கின்றனர். "பிச்சை புகினும் கற்கை நன்றே" என்பதற்கு ஏற்ப வாழ்கின்றனர்.

இத்தனை சிறப்புமிக்க கல்வியை நாம் உகந்த வழியிலே, குறைந்த நேர விரயத்துடன் பெறவேண்டுமானால், நல்ல கற்றல் முறைகளைப்பயன்படுத்த வேண்டும். ஆம், பாடசாலைகளில் நமக்கு பலவித பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன, ஆனால் கற்பதற்கு முறைகள் உண்டு என்றோ, நல்ல கற்றல் முறைகளை எப்படி நடைமுறைப்படுத்துவது என்றோ பாடசாலைகளில் சொல்லித்தருவது ஏனோ மிகமிக அரிதாய் உள்ளது. எனவே சிறந்த கல்விச் செல்வங்களை நாம் பெறவும், பெற்றதை நீண்ட காலம் மனதில் இருத்திவைத்துப் பயன்படுத்தவும் சிறந்த கல்வி முறைகள்பற்றி நாம் அறியவேண்டும். பரீட்சைகளைத் துணிவோடு எதிர்கொண்டு உயர்ந்த பெறுபேறுகளை அடைய உகந்த வழிவகைகள் பற்றியும் நாம் தெரிந்து கொள்ளவேண்டும். இவற்றைச் சற்று அலசித் தொகுப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

### பகுதி 1: கற்றல் முறைகள்

கற்றலின் முழுப் பயனை நாம் அடைவதற்கு நமது நேரத்தை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். அதுமட்டுமல்ல, நாளாந்த மீட்டல் மிக முக்கியம் என்பதை உணரவேண்டும். மேலும், வெற்றி பெறும் மாணவர்கள் கடைப்பிடிக்கும் வேறு சிறந்த வழிமுறைகளையும் அறிந்து பின்பற்ற வேண்டும்.

### நேரத்தைத் திட்டமிட்டுப் பயன்படுத்தல்

படித்தல் என்பது கடினமான ஒன்றாகத் தோன்றுவதற்கு ஒரு முக்கிய காரணம், நாம் கிரமமாக ஓரிடத்தில் உட்கார்ந்து படிக்காமை என்பதாக இருக்கலாம். இதை வெல்வதற்கு நாம் படிப்பதற்கென்று நமக்கே ஒரு நேர சூசியை வகுத்து, அதன்படி ஒழுக தொடர்ந்து முயற்சிக்க வேண்டும். எல்லாப் பாடங்களையும் கற்க வேண்டும். ஆனால் கடினமான பாடங்களுக்குக் கூடிய நேரம் ஒதுக்கவேண்டும்.

படிப்பதற்கென்று ஒரு நேரசூசிகையைக் கடைப்பிடிப்பதால் நாம் நமது நேரத்தையும் சக்தியையும் சிறந்த முறையில் பயன்படுத்துவோம். நேரத்தை வீணடிப்பதைத் தவிர்ப்போம். கடினமான பாடங்களை புறக்கணிக்கமாட்டோம். பரீட்சை நெருங்கும் போது "விழுந்து விழுந்து" படிக்கத் தேவையில்லை. எனவே பின்வரும் குறிப்புக்களை மனதில்கொண்டு, நமக்கென நேரசூசிகையை அமைத்து அதைப் பின்பற்ற வேண்டும்.

1. நீண்டகாலத் திட்டம் ஒன்றை ஆண்டு முழுவதற்கும் அமைத்துக்கொள்ளுங்கள்.
2. வார நேர சூசிகையை ஒவ்வொரு வாரமும் புதிதாக அமைத்துக்கொள்ளுங்கள்.
3. வீட்டில் படிக்கத் தொடங்கும்போது, முதலில் கடினமான ஒரு ப்ாடத்தைப் படியுங்கள். பின்பு, இலகுவான ஒரு பாடத்தையும், இவ்வாறு மாறி மாறிப் படியுங்கள்.
4. ஒரு மணிநேரம் படித்த பின்பு ஐந்து நிமிடம் ஓய்வு எடுங்கள், பின்பு படிப்புக்கு திரும்புங்கள்.
5. இரவிரவாகப் படிக்காதீர்கள் ஐந்து அல்லது ஆறு மணிநேரத் தூக்கம் அவசியமாகும். பொழுது சாயும் நேரமும், விடியற்காலை நேரமும் படிப்பதற்கு மிக உகந்த நேரமாகும்.
6. செயல் திட்டங்கள், ஒப்படைகள் என்பவற்றை நீங்கள் சமர்ப்பிக்க வேண்டும் என்றால், நேரகாலத்தோடு வேலையைச் செய்யத் தொடங்குங்கள்.
7. மற்றவர்களோடு ஏதாவது பேசவேண்டும் என்று நினைவு வந்தால், படிப்பு நேரத்தைக் குழப்பவேண்டாம், மாறாக ஒரு தாளில் அந்த விடயத்தைக் குறித்து வைத்துவிட்டு, படிப்பு நேரம் முடிந்த பின்பு அவர்களோடு பேசுங்கள்.

### நாளாந்த மீட்டலின் முக்கியத்துவம்

நாம் படிப்பதில் பெரும் பகுதியை விரைவில் மறந்து விடுகின்றோம் என்பது பலரின் சாதாரண அனுபவமாகும். ஆனால் சில மாணவர்களோ தாம் படிப்பதை நீண்டகாலம் நினைவில் வைத்திருக்கின்றார்கள். இதன் இரகசியம் என்ன என்று தேடும்போது, உளவியலாளர்கள் முக்கிய உண்மை ஒன்றைக் கண்டுகொண்டார்கள். அது என்னவென்றால், ஒரு நாளில் படித்தவற்றை அன்றைய தினமே மீட்டல் செய்பவர்களுக்கு, அது மனதில் ஆழப்பதிகின்றது, அது மறக்கப்படும் வீதமோ குறைகின்றது.

இது ஓர் எளிமையான உண்மை. ஆனால், எளிமையானது என்பதால் அதை நாம் புறக்கணிக்கக்கூடாது. வெற்றி கண்ட பல மாணவர்களின் வெற்றியின் அத்திவாரம் இதுவாக இருக்கின்றது. எனவே பாடங்களைப் படித்த அன்றே மீட்டல் செய்யுங்கள் எப்படியும் 24 மணி நேரத்துக்குள் மீட்டல் செய்துவிடுங்கள்.

### பயனுள்ள இன்னுமொரு குறிப்பு:

அடுத்த வகுப்புக்கு நீங்கள் செல்லும் முன்பு, அதே பாடத்தின் முன்னைய வகுப்பில் நீங்கள் எழுதிய குறிப்புகளை வாசித்து ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். அப்போது முந்திய வகுப்புடன் இந்த வகுப்புக்கு உள்ள தொடர்பு உங்களுக்குத் தெளிவாகும். மேலும் வாரம் முழுதும் படித்தவற்றை வார முடிவில் தொகுத்துப் பார்த்து ஒரு விரைவு மீட்டல் செய்பவர்கள் வெற்றி ஏணியில் மேலேறிச் செல்வர்.

### SQ3R கற்றல் முறை

வெற்றி கண்ட மாணவர்கள் பலரது கற்றல் முறைகள் பற்றி ஆராய்ந்த அமெரிக்க உளவியல் அறிஞர்கள் அவற்றைத் தொகுத்து "SQ3R கற்றல் முறை" என அழைப்பர். ஒரு புத்தகத்தை அல்லது ஒரு புத்தகத்தின் அத்தியாயம் ஒன்றை நாம் கற்றுக்கொள்ள வேண்டுமானால், இந்த முறையின் படிகளைப் பின்பற்றி நாம் பெரும் பயன் பெறலாம். வகுப்பறையில் நாம் இதே படிகளை நாம் பயன்படுத்தலாம். இதன் படிகள் பின்வருமாறு அமைகின்றன.

S – Survey - பார்வையிடு
Q – Question – வினா எழுப்பு
R – Read – வாசித்து விளங்கு
R – Recite – சொல்லிப் பார்
R- Revise – மீண்டும் மீட்டல்செய்

### S – Survey - பார்வையிடு

படிக்க வேண்டியதை விரைவாகவும் மேலோட்டமாகவும் பார்வையிடுங்கள். படிக்க வேண்டியது ஒரு புத்தகமாயின், பொருளடக்கம், முன்னுரைகள், முடிவுரைகள், பின் இணைப்புக்கள், துணை நூல் பட்டியல், சொற் பட்டியல் என்பவற்றைக் கவனியுங்கள். அது ஓர் அத்தியாயமாயின், த்லைப்பு, துணைத் தலைப்புக்கள், அட்டவணைகள், வரைபடங்கள் என்பவற்றைக் கவனியுங்கள்.

### Q – Question – வினா எழுப்பு

நீங்கள் பார்வையிட்டதன் அடிப்படையில், "இந்தப் பகுதியில் ஆசிரியர் என்ன பிரச்சினைகளுக்கு தீர்வு தருகிறார்? என்ன வினாக்களுக்கு விடை தருகிறார்?" என்று சிந்தியுங்கள். இந்த விளாக்களை உங்கள் குறிப்புப் புத்தகத்தில் எழுதிக் கொள்ளுங்கள்.

### R – Read – வாசித்து விளங்கு

உங்கள் வினாக்களுக்கு விடை தேடியபடி வாசியுங்கள். வாசிப்பதை நன்றாகப் புரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள். புரியாத சொற்கள் எதிர்பட்டால், அகராதியின் உதவியை நாடுங்கள்.

### R – Recite – சொல்லிப் பார்

ஒரு சிறு பகுதியை வாசித்து முடித்தபின் சற்றுத் தரியுங்கள். நீங்கள் படித்து விளங்கிக் கொண்டதை ஒழுங்காக உங்களால் திரும்பச் சொல்ல முடியுமா என்று முயற்சி செய்து பாருங்கள். நீங்கள் புரிந்துகொண்ட, சொல்லிப் பார்த்ததன் சாரத்தை உங்கள் சுருக்கக் குறிப்புப் புத்தகத்தில் எழுதிக்கொள்ளுங்கள். பொதுவாக, சொல்லுக்குச் சொல்லாகப் பாடம் ஒப்புவிக்கத் தேவையில்லை வரைவிலக்கணங்கள், சூத்திரங்கள், திகதிகள், பெயர்கள் போன்ற ஒரு சில விடயங்களை மட்டும் சொல்லுக்குச் சொல்லாக மனனம் செய்யவேண்டியிருக்கும்.

### R - Revise – மீண்டும் மீட்டல்செய்

நீங்கள் "சொல்லிப் பார்த்தல்" செய்யும்போது சில விடயங்கள் புரியாமல் அல்லது நினைவுக்கு வராமல் இருந்திருக்கலாம். வாசித்த பகுதிக்கு மீண்டும் சென்று, உங்கள் சந்தேகங்களை நிவர்த்தி செய்துகொள்ளுங்கள். மீண்டும் அந்தப் பகுதியை உங்களால் சரியாகத் திரும்பச் சொல்ல முடியுமா என்று "சொல்லிப் பாருங்கள்". இப்படிச் சீராக மீட்டல் செய்து வந்தால், அதிகம் மனனம் செய்யவேண்டுமே என்று பெரும் சுமை இராது. வார முடிவிலே அல்லது பாடத்தின் ஓர் அத்தியாயம் முடிவுறும்போது, இதுவரை படித்தவற்றை விரைவாக மீட்டல் செய்யுங்கள் இதற்கு உங்கள் சுருக்கக் குறிப்புப் புத்தகத்தை (தாள்களை) பயன்படுத்துங்கள்.


சிலர் SQ3R + U என்று, பின்வரும் படிப்பையும் சேர்த்து கூறுவர்: (U – Use – பயன்படுத்துங்கள்) நீங்கள் கற்றதை உறுதிசெய்து கொள்வதற்கு, அதை செய்முறையில் பயன்படுத்துங்கள்:

1. கற்றதைப் பிறருக்குக் கற்பியுங்கள்
2. கற்றது பற்றிக் குழுவாகக் கலந்துரையாடுங்கள்.

கற்றது தொடர்பான பயிற்சிகளைச் செய்து பாருங்கள்.

# வாழப் பிறந்தவர்கள் நாம்!

அருட்சகோ. பா. றொசான்,
இத்திக்கண்டல், அடம்பன்.



மனிதனாக மண்ணில் அவதரித்த ஒவ்வொருவரும் வாழப்பிறந்தவர்கள். வாழ்க்கை எனும் கொடையை வளம்பெறச் செய்பவர்கள். ஆனால் இன்று வாழ்க்கை எனும் கப்பலில் பயணித்துக்கொண்டிருக்கும் எம்மை, அலைமோதும் அலைகளான பயங்கரவாதம், வன்முறைக் கலாச்சாரம், பொருளாதாரப் பிரச்சினைகள், ஏமாற்றங்கள், தோல்விகள், கவலைகள் போன்றன எமது வாழ்க்கைக் கப்பலை கரைதெரியாது, திசையறியாது தத்தளிக்கச் செய்துகொண்டிருக்கின்றன. இன்றைய சமுதாயம் இந்தப் பயங்கர அலைகளைக் கண்டு வாழ்க்கையின் அர்த்தத்தை மறந்து, வாழவேண்டிய பருவத்தில் தற்கொலைகளை நாடுகின்றது. இவை உண்மைதான்.

ஆனால் "வாழ்க்கை என்பது, மெத்தையில் கிடக்கும் றோஜாப் பூ போன்றதல்ல" மாறாக இது கரடு முரடான பாதையை ஒத்தது. மனிதர்களாகிய நாம் இதை உணர்ந்து பயணிக்கின்றபோதுதான் வெற்றி எம் கரங்களில் தவழ்கின்றது.

இன்றைய சூழலில் கவலையில்லாத மனிதன் உலகில் இல்லை. ஆனால் அந்தக் கவலையின் ஊற்று, பிறப்பிடம் எது என்பதில்தான் சிக்கல். அந்தக் கவலை எவ்வளவு காலம் நம்மோடு தங்கியுள்ளது என்பதுதான் பிரச்சினை. நாம் ஏழ்மையாக இருப்பது, கவலையுடன் இருப்பது கடவுளின் விருப்பமில்லை. நாம் காலம் முழுவதும் கவலையிலும், கண்ணீரிலும் கிடந்து மூழ்கவேண்டும் என்பது கடவுளின் திருவுளம் அல்ல. அதிலிருந்து மீள்வதும், மீண்டபின் புத்துயிர் பெற்று எழுவதும், புதுவாழ்வை அமைத்துக்கொள்வதும் நம் கையில்தான் உள்ளது. இவ்வாறு இந்தக் கவலையினின்று பெறும் மீட்சியையும் ஒரு சிலர் பிறரின் மீட்புக்காக, உய்வுக்காக, நல்வாழ்விற்காகப் பயன்படுத்திக் கொள்ளும் அளவுக்குப் பக்குவப்பட்டு விடுகின்றனர். கவலையின்றிக் கற்கின்றனர். வருத்தங்களின் மத்தியிலும் வாழ்வைக் கண்டடைகின்றனர். இறந்தும் உயிர்த் - தெழுகின்றனர்.

எம் வாழ்க்கைப் பயணத்திற்கு ஓர் இலட்சியம் தேவை. "இலட்சியமில்லாத மனிதன் திசையறி கருவியில்லாத கப்பலையொப்பான்." என்பார்கள். நாம் பயணிக்கின்ற வாழ்க்கை இலட்சியம், குறிக்கோள் இன்றி பயணிக்கின்றபோது துன்பம், பயம், அறியாமை, தெளிவின்மை, ஏமாற்றம், தோல்வி என்பன எம்மைச் சுற்றி வலை வீசுகின்றன. நாம் இவற்றிற்கு அடிமையாகி, வாழ்க்கையின் அர்த்தத்தை உணராது வாழ்க்கையை இழக்கின்றோம். இலட்சியமும் ஊக்கமும் உள்ள மனிதனே எப்போதும் வெற்றி பெறுகின்றான்.

வாழ்க்கைப் படகில் செல்லும் எமக்கு, தன்னம்பிக்கை இன்றியமையாததொன்றாக அமைகின்றது. பண்டைய மதங்கள், கடவுள் நம்பிக்கை இல்லாதவனைத்தான் நாத்திகன் என்று குறிப்பிட்டன. ஆனால் புதிய மதம் தன்னம்பிக்கை இல்லாதவனைத்தான் நாத்திகன் என்று சொல்கின்றது. "வாழ்க்கையே வெறுத்துப் போச்சு என்று சொல்பவர்கள், அதிகபட்சம் பிரச்சினைகளை, தடைகளை வெற்றிகரமாக சமாளித்து வாழலாம் என்ற நம்பிக்கையை வளர்த்துக்கொள்ளுங்கள். நம்பிக்கை இன்னொருவனிடமிருந்து கடன் வாங்குவதல்ல, மாறாக அது உங்களிடமே உள்ளது. அதை தட்டிக்கொடுத்து அதன் சிறகை விரித்து வானில் பறக்க விடுங்கள். அது வானைத் தொட்டுப்பார்க்கும் அளவிற்கு, ஒவ்வொரு நாளும் பறக்கும். "நம்பிக்கை இல்லாத மனிதன் முதுகெலும்பு இல்லாத பிராணிக்கு சமமானவர்கள்" இடையூறு எனும் படிக்கட்டில் ஏறித்தானே, மனவலிமை எனும் மாடியை அடைய முடியும்! படிக்கட்டில் தவறிவிழாமல் இருக்க, நம்பிக்கை எனும் ஊன்றுகோலின் துணை இருந்தால், விரைவிலே மாடியை அடையலாம். "யானையின் பலம் தும்பிக்கையில் மனிதனின் பலம் நம்பிக்கையில்." தன்னம்பிக்கை உங்கள் சுயமதிப்பை உயர்த்துகின்றது. சவால்களைச் சந்திக்க, உங்களைத் தயார்படுத்துகின்றது. வெற்றியைப் பெறவைக்கின்றது. வாழ்க்கையில் சந்திக்கும் துன்பங்கள் - துயரங்கள், ஏக்கங்கள் ஏமாற்றங்கள், கண்ணீர்கள் - கவலைகள், வெறுப்புக்கள் - எதிர்ப்புக்கள், சோதனைகள் - வேதனைகள் இவை எல்லாம் எமக்கு மோசமான எதிரிகள். ஆனால் இத்தகைய பலமான எதிரியுடன் மோதும்போதுதான், நம் திறமைக்குப் பரிசு கிடைக்கின்றது.

*"முள்ளின்றி அரியணையில்லை*
*சிலுவையின்றி மணிமுடியில்லை*
*அறிவு பூர்வமான உழைப்பின்றி வெற்றியில்லை"*

சாதனைகள் எல்லாம் சாமானிய மனிதனால் செய்யப்பட்டவைதான். சோதனைகள் அவனை வலிமை மிக்கவனாக மாற்றுகின்றன. அதனால்தான், பெரிய சாதனைகளைச் செய்ய முடிகின்றது. மாற்றங்களை மகிழ்ச்சியாக ஏற்றுக்கொள்ளுங்கள், பிறகு ஏற்றங்கள் உங்களுக்கு ஏணியாக அமைந்துவிடும்.

"வாழ்க்கை என்பது ஒரு பொக்கிஷம்" என்பார்கள். வாழப்பிறந்த எமக்கு வாழ்க்கையில் ஓர் நிம்மதி, திருப்தி வேண்டும். அந்த நிம்மதியைத்தான் "சேவை" என்பார்கள். இது எம் வாழ்வின் இறுதியிலே மகிழ்ச்சியைக் கொண்டுவருகின்றது. இது இல்லாவிட்டால் கவலை நம்மைப் பற்றிக்கொள்கின்றது. "பிறருக்குச் சேவை செய்வதே பிறவி எடுத்த பயன்" என்பார்கள். எங்கே நிம்மதி? அங்கே கிடைக்குமா? இங்கே கிடைக்குமா? என்று தேடினால் நீங்கள் காணமாட்டீர்கள். அது உங்கள் உள்ளத்துக்குள்ளே ஒளி மயமாக நிற்கின்றது. அதுதான் பிறர் சேவையில் நீங்கள் கொள்ளுகின்ற விருப்பம், ஆர்வம். இதற்குத்தான் இயேசு "தேடுங்கள் கண்டடைவீர்கள்" என்று கூறுகின்றார். "நெஞ்சுக்கு நிம்மதி ஆண்டவன் சந்நிதி, நினைத்தால் எல்லாம் உனக்குள்ளே!" என்று கவிஞன் நிம்மதியைப்பற்றி பாடுகின்றான். நமக்கு முன்னால் வாழ்ந்து இறந்தவர்கள் எல்லாம் ஆயுட்காலம் அமைதியாக இருந்து செத்தவர்கள் அல்ல. இனி வரப்போகின்ற - வர்களும் நிரந்தர நிம்மதிக்கு உத்தரவாதம் வாங்கிக்கொண்டு வரப்போகின்றவர்களல்ல. ஆனால், முன்பு வாழ்ந்தவர்களில் சிலர் மகாத்மா காந்தி, அன்னை திரேசா, மாட்டின் லூதர் கிங், ஆபிரகாம் லிங்கன், யகவல்கார் நேரு போன்றவர்கள் சேவையை மதித்து பிறருக்காகத் தங்களையே சேவையின் மூலம் அர்ப்பணித்தவர்கள். இவர்களே எங்களுக்கு முன் உதாரணமாகத் திகழ்பவர்கள். இவர்களின் அடிச்சுவடுகள் எமக்கு பாதை காட்டுகின்றன.

ஆகவே, நிம்மதியற்ற மனிதனாக நீங்கள் இல்லாமல் ஒரு யோகியாக, ஞானியாக மாறுங்கள். கோடிக்கணக்கான மக்களை பழக்குவதற்கு குருவாக மாறுங்கள். சமுதாயத்தை ஆனந்த மயமான சமுதாயமாக்க, ஒத்துழையுங்கள். உள்ளத்தில் உண்மை ஒளியைக் காண்பதற்கு உலகிற்கு வழிகாட்டுங்கள்.

*வெந்ததைத் தின்று – வாயில் வந்ததைப்பேசி*
*விதி வந்ததும் சாவோம்... என்று இருப்பது*
*ஓர் வாழ்வாகுமா? – அல்லது*
*நிறைவும் மகிழ்வும் தரும்*
*ஆனந்த வாழ்வாகுமா?*
*தேடுவோம் அர்த்தமுள்ள வாழ்வை!*
*நாடுவோம் அன்பு நெஞ்சங்களின் நல்லுறவை!*
*கற்றுத்தெளிவோம் வாழப்பிறந்தவர்கள்*
*நாம் என்பதை!*
*களிப்புடன் பகிர்வோம் பெற்ற பெருவாழ்வை!*

**வழிபாடு பற்றிய ஆழமான அர்த்தங்களை இங்கு தமிழில் வெளிக்கொணரும் புதிய தொடர்!**

# வாழ்வும் வழிபாடும்

தருவது வலண்டின் ஜோசப்

தொடர் - 7

## முத்தான பவனிகள் மூன்று

நம்மில் பலருக்கு வழிபாட்டு நேரங்களில் ஆலயத்தில் எங்கோ ஒரு மூலையில் அமர்ந்துவிட்டு பின் தலைமறைவாகி விடவேண்டும் என்ற எண்ணம்தான் இருக்கின்றது. வழிபாட்டிற்குச் செல்லும் நேரங்களில் கடைசி இருக்கைகளையும் இருட்டுப் பகுதிகளையும் தேடிச்செல்வோர் அதிகம்.

கிறிஸ்தவ வழிபாட்டில் கலந்துகொள்ளும் அனைவருமே பங்கேற்பாளர்கள், கொண்டாடுபவர்கள் என்பதுதான் வழிபாட்டு மெய்மை. ஒரு நாடகத்தில் நடிகர்கள் பலர் பல்வேறு பாத்திரங்களில் நடிப்பது போன்று வழிபாடு என்ற புனித நாடகத்தில் எல்லோருமே நடிகர்கள்தான். பார்வையாளர்கள் என்று யாரும் இல்லை.

பங்கேற்கும் ஒவ்வொரு நபரும் ஏதாவது ஒருவிதத்தில் தன்னுடைய நம்பிக்கையை, தன்னுடைய மனநிலையைப் பிறருக்கு வெளிப்படுத்திக்கொண்டுதான் இருக்கிறார்.

அந்த விதத்தில் நற்கருணைக் கொண்டாட்டத்தில் மூன்று பவனிகள் முக்கிய இடம்பெறுகின்றன. *ஒன்று வருகைப் பவனி. மற்றொன்று காணிக்கைப் பவனி. பிறிதொன்று திருவிருந்துப் பவனி.*

### வருகைப் பவனி



திருவழிப்பாட்டிற்கு முத்தாய்ப்பான முதல் செயல் வழக்கமாகத் திருப்பலி நிறைவேற்றும் குருவை மரியாதையோடு அழைத்து வருகின்ற செயலாக இருந்தது. இது இன்று புதிய வடிவம் பெற்றிருக்கிறது. குரு மட்டுமல்ல வழிபாட்டில் முக்கிய பணியாளர்கள் - பீடப்பணியாளர்கள் அனைவரும் வருவது முறை. இந்தப் பவனியில் விவிலியம் எடுத்து வரப்படுவது சாலச் சிறந்தது. நாம் விவிலியத்தைக் கொண்டாடப்போகிறோம் என்பதைக் குறிக்கும் செயலாக அது அமைகிறது. விவிலியத்தை ஆடம்பரமாக இசைக் - கருவிகள் முழங்க எடுத்து வருகிறோம்.

அன்றைய நாளில் முக்கிய இடம்பெறும் நபர்களும் வருகைப் பவனியில் அழைத்து வரப்படலாம். திருமணத் தம்பதிகள், வெள்ளி விழா நாயகர்கள், புதுநன்மை வாங்கும் குழந்தைகளும் குடும்பத்தினரும், திருமுழுக்குப் பெறும் குழந்தைகளும் - அதன் பெற்றோரும் என்று பவனியின் வரிசை சூழலுக்கு ஏற்ப மாறிக்கொண்டே செல்லலாம்

திருவழிபாட்டைப் பொறுத்தவரை இறைவன்முன் ஏற்றத்தாழ்வுகள் இல்லை. அடிப்படையான சமத்துவம் அங்கு திகழ வேண்டும். அதே சமயம் பணிகளைப் பொறுத்தவரையில் சிலர் முதன்மைப்படுத்தப்படலாம். திருப்பலிக்கு வருகின்ற பிரமுகர்களையோ ஆதரவாளர்களையோ முதன்மைப்படுத்தி அவர்களுக்குத் தனி இருக்கைகளும் சிறப்புச் சலுகைகளும் கொடுக்க வேண்டுமென்ற தேவையே இல்லை. வழிபாட்டில் அனைவரும் சமமானவர்களே!

சில இடங்களில் வருகைப் பவனியின்போது நடனம் ஆடுகின்றார்கள். இசைக்கருவிகளை மீட்டிக்கொண்டு நடந்து வருகின்றார்கள். இவையெல்லாம் சரியா என்ற கேள்வி பலரின் உள்ளங்களில் எழுகிறது. இவையெல்லாம் ஒட்டுமொத்தமாக சரியானவை என்று கூறிவிட முடியாது. எந்தச் சூழலில் யார் மையப்படுத்தப்படுகிறார் என்பதைப் பொறுத்து அதன் தேவையைக் கணிக்க முடியும்.

வழிபாடு என்பது கொண்டாட்டம். வாழ்க்கையில் அரும்பெரும் காரியங்களைச் செய்கின்ற இறைவனின் உறவைக் கொண்டாடுகின்ற நிகழ்வு. எனவே இறைவன் மைய இடம்பெற வேண்டும். இறைவனை நோக்கி நம்மை அழைத்துச் செல்கின்ற செயலாக அது அமைய வேண்டும். வீதியில் நடக்கின்ற ஊர்வலங்களைப் போன்று கௌரவத்தையோ பரபரப்பையோ உண்டாக்குகின்ற ஊர்வலங்களாக இவை இருக்கக்கூடாது.

வருகைப் பவனியில் அனைவரும் அவர்களுக்கே உரிய முறையில் கலந்துகொள்ள வேண்டுமென்று திருச்சபை விரும்புகிறது. அன்பினில் பிறந்த இறைகுலம் நாம் கலந்துகொள்ளும் நேரங்களில் நாமெல்லாம் இறைவனால் அழைத்து ஒன்றுசேர்க்கப்பட்டவர்கள் என்ற உணர்வு நமக்குள் ஏற்படவேண்டும். இதுவே வழிபாட்டின் முதல் கொண்டாட்டம்.

### காணிக்கைப் பவனி



வழிபாட்டில் நடைபெறும் மற்றொரு பவனி காணிக்கை பவனி. வழக்கமாகக் காணிக்கைப் பவனியின் நோக்கத்தையோ அவசியத்தையோ சொல்வதற்குப் பலர் தயங்குகின்றனர். கோயிலுக்கு ஏதாவது காணிக்கை தர வேண்டும் என்ற எண்ணத்தில்தான் பலர் காணிக்கைகளைக் கொண்டு வருகின்றனர். நற்கருணைக் கொண்டாட்டத்தில் காணிக்கைப் பவனி சிறப்பான அடையாளச் செயல். அப்ப இரசக் காணிக்கைகள் நிலத்தின் விளைவும் மனித உழைப்பின் பயனுமாக அர்ப்பணிக்கப்படுகின்றன. மனிதனின் உழைப்பு வெற்றி தோல்வி ஆகியவை காணிக்கையாகின்றன. மனித வாழ்வையே இயேசுவின் உணர்வுகள் கொண்டதாக மாற்ற வேண்டும் என்பதே இவற்றின் நோக்கம்.

காணிக்கைகளின் மற்றொரு நோக்கம் பிறரன்புப் பணி. நம்மிலும் நலிந்தவரோடு நமது வாழ்வைப் பகிர்ந்துகொள்ளுதல் நாம் இறைவனுக்குச் செலுத்தும் காணிக்கை. நற்கருணைக் கொண்டாட்டத்தின்போது சமுதாயத்தில் நலிந்தவரை நினைத்துப் பார்க்கிறோம். அவர்களுக்கு உதவி செய்வதுதான் உண்மையான வாழ்க்கைப் பலி என்பதை ஆழமாக உணர்த்துகின்ற அடையாளச் செயல்தான் காணிக்கைப் பவனி.

நற்கருணைக் கொண்டாட்டத்திற்குக் கொண்டுவரப்படும் காணிக்கைகள் ஆலய நிர்வாகத்திற்காக அல்ல ஏழைகளோடு பகிர்ந்துகொள்ளப்படுவதற்காக கொண்டுவரப்படுபவை. எனவே எவ்வளவு காணிக்கை வந்தது? இதனால் எத்தனை பேர் பயனடைகின்றார்கள்? என்பதை அருட்பணியாளர்கள் மக்களுக்குச் சொல்ல வேண்டும்.

சில பங்குகளில் மக்களே காணிக்கைகளை எடுத்து குறிப்பிட்ட ஏழைக் குடும்பத்திற்கு உதவி செய்கிறார்கள். இந்த முறை வரவேற்கத்தக்கது. தவக்காலத்தில் எடுக்கப்படும் காணிக்கைகள் பசி, பிணி ஒழிப்பு இயக்கங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. எனவே காணிக்கை மக்களின் தியாகமான தியாகப் பலியின் ஒரு பகுதியாக அமைய வேண்டும். இதனால் ஏழைகளின் துயரம் ஏழ்மையின் கொடுமை போன்றவற்றைப் பற்றிய விழிப்புணர்வு அதிகரிக்க வாய்ப்பிருக்கிறது.

சிலர் அடையாளக் காணிக்கைகளைத் தருவதை அருமையான வழிபாடாகக் கருதுகின்றனர். அடையாளக் காணிக்கைகள் உண்மையான தியாகத்தையோ ஏழைகளுக்கு உதவிசெய்யும் தன்மையையோ குறிக்காத பொய்மைக் காணிக்கைகளே. சிலர் விசுவாசிகள் மன்றாட்டோடு இணைத்துச் சொல்கிறார்கள். மன்றாட்டுக்களை அடையாளங்கள் வழியாகச் சொல்வது சிறப்பானதுதான் ஆனால் அதையே காணிக்கைப் பவனியாகச் செய்வது தவறானது.

காணிக்கைப் பவனிகளை முறையாக, ஆழமாக ஆடம்பரமாக அமைப்பது வழிபாட்டிற்குத் தனிச் சிறப்பைத் தருகின்றது. அனைத்து மக்களுமே காணிக்கை செலுத்துகிறார்கள் என்ற எண்ணத்தை உருவாக்கும் வகையில் அவை அமைந்தால் மக்களின் பங்கேற்பு சிறப்பானதாக இருக்கும். பல சமயங்களில் ஒரு குறிப்பிட்ட குடும்பத்தினர் தருகின்ற காணிக்கையாக மட்டும் அமைந்துவிடுவதைப் பார்க்கின்றோம். இறைமக்கள் சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினரும் பங்கேற்கும் வகையில் இந்தப் பவனி அமைவது நலம்.

பவனியின் நேரத்தில் பாடப்படுவதுதான் காணிக்கைப் பாடல். அந்தப் பாடலை அனைத்து இறைமக்களும் இணைந்து பாடுதல் வழிபாட்டை வல்லமைமிக்கதாக மாற்றும். சில ஆபிரிக்க நாடுகளில் மக்கள் காணிக்கைப் பொருட்களை எடுத்துக்கொண்டு ஆடல் பாடலோடு பவனியாக ஆலயத்தில் நுழைகின்றனர். ‘கொடுப்பதில்தான் இன்பம்’ என்ற கொள்கையை விளக்கும் நிகழ்ச்சிகளாக அவை அமைகின்றன.

### திருவிருந்துப் பவனி



நற்கருணைக் கொண்டாட்டத்தின் மற்றொரு நிகழ்வு திருவிருந்துப் பவனி. சாமியார் நன்மை கொடுக்கிறார். நாம் சென்று வாங்க வேண்டும் என்ற எண்ணம்தான் பலரிடமும் இருக்கின்றது. நற்கருணை விருந்து என்பது சமுதாயத்தின் நம்பிக்கைச் செயல். பகிர்வின் அடையாளச் செயல். நற்கருணை பிட்கப்படுவது பகிரப்படுவதற்காகவே. எனவே நற்கருணைப் பவனி என்பது வழிபாட்டின் மிக முக்கிய பகுதி.

அருட்பணியாளர் மக்களின் இருக்கைகளைத் தேடிச் செல்வதைவிட மக்கள் பவனியாக பணியாளரை நோக்கி வரச் செய்வதே சிறந்தது. வருகின்ற நேரத்தில் இறைமக்கள் மகிழ்ச்சியாக திருவிருந்துப் பாடலைப் பாடிக்கொண்டு வருவது பிறரிடமும் நம்பிக்கையைத் தூண்டும்.

நற்கருணை வாங்கும் நேரத்தில் அருட்பணியாளர், “இது இயேசுவின் திருவுடல்” என்கிறார். நாம் ‘ஆமென்’ என்று பதில் சொல்கின்றோம். இந்த அடையாளச் செயலுக்கு ஆழ்ந்த பொருள் இருக்கின்றது. இதை நம்பிக்கை அறிக்கையாகவே திருவழிபாட்டு அறிஞர்கள் கருதுகின்றனர். நமது மனநிலை பிறருக்கு இறை நம்பிக்கையை தருகின்ற ஒன்றாக அமைகின்றது. எனவே நற்கருணைப் பவனிக்கு வழிபாட்டில் முக்கியம் இடம் தரப்பட வேண்டும்.

இன்று அருட்பணியாளருக்கு உதவியாக பல்வேறு பொதுநிலையினர் நற்கருணைப் பணியாளர்களாகப் பொறுப்பேற்று இருக்கின்றனர். மக்கள் மத்தியில் நம்பிக்கையைத் தூண்டுபவர்களாக அமைவதே அவர்களது தலையாய பணி.

நற்கருணைக் கொண்டாட்டத்தில் பங்கேற்க வாய்ப்புக்கள் தரப்பட வேண்டும். சிலர் பவனியில் வர வெட்கப்படலாம். தங்கள் கௌரவம் குறைந்துவிடுவதாக எண்ணலாம். அனைவரும் சமமாகப் பங்கேற்பதுதான் உண்மையான நற்கருணை விருந்து.

மூன்று முத்தான பவனிகள் வழிபாட்டில் உண்டு. தகுந்த முறையில் தயாரித்துப் பங்கேற்கும்போது திருவழிபாடு சமுதாயச் செயலாக மாறுகிறது.

*(வழிபாடு தொடரும் ....)*

---

# உவமையில் கதை உலகத்தின் நிலை சொன்னாரா?

இறையரசு என்பது இவ்வுலகிற்கு அப்பாற்பட்டது! அது ‘விண்ணரசு’ என்றும் அதில் வாழும் இறைவன், அணுக முடியாத ஒளியில் வாழ்பவர், அவரை அண்டிச் செல்ல எவராலும் இயலாது என்றும் கருதப்பட்ட காலம் உண்டு.

உலகை மூவகையாகப் பிரித்து விண்ணுலகம், மண்ணுலகம், பாதாளம் என வகைப்படுத்தி, மண்ணுலகே நிஜம்! விண்ணுலகை எவரும் அண்டிச்செல்ல முடியாது என்று கருதப்பட்ட காலமும் உண்டு. இறையரசு எமக்கு அப்பாற்பட்ட ஒன்றல்ல, அது எம்மிடையே, அதுவும் எமக்குள்ளேயே உள்ளது! இறைவன் எமக்கு அப்பாற்பட்ட ஒருவரல்ல, அவர் எமக்கு “அப்பா” உறவு முறையானவர் என்ற பேருண்மையை எடுத்துச்சொல்ல இவ்வுலகில் மனுவுரு எடுத்தவர்தான் இயேசு.

இயேசு இறையரசைப் பற்றிய பேருண்மைகளை மூவகைகளில் விபரித்தார். “போதனை” வழியாகவும் “அருளடையாளங்கள்” மூலமாகவும் “உவமைகள்” (கதைகள்) வழியாகவும் எடுத்துச் சொல்லி உலகின் நிலைபற்றி விரித்துரைத்தார். இயேசுவின் இறையரசு பற்றிய உவமைகளை (கதைகள்) நான்கு நற்செய்தியாளர்களும் நாற்பது (40) கதைகள் வழி தருகின்றனர்.

சாதாரண கதைகளை ஆரம்பத்திலேயே தொடங்கிவிட்டால், முடிவு என்னமாதிரி இருக்கப்போகிறது என்பது வாசகர்களுக்கு ஓரளவு தெரியவரும். ஆனால் இயேசுவின் கதைகளோ முடிவடையாமல், கேட்பவர்கள் எதிர்பார்த்தமைக்கு மாறாக, அவர்களது சிந்தனையைக் கிளறிவிடும் விதத்தில் அமைந்துவிடுதல் வியப்பானது! இயேசு பாட்டாளிகளுக்கும் கதைசொன்னார், பாட்டிக்கும் கதை சொன்னார்! மீன்பிடிக்கும் ஏழைகளுக்கும் கதைவழி கருத்துரைத்தார்! வயல் நிலத்தில் விதைக்கும் உழவனுக்கும் உவமை சொன்னார்! உவமைகளில் கதைகள் சொல்லி, உலகத்தின் நிலைகள் சொன்ன இயேசுவின் உவமை ஒன்றைச் சற்றே உணர்வோமா?

“விதைக்கின்ற வயற்காரன் எடுத்தான் வித்தை,
வீழ்ந்தனவே சில அந்த வரம்பின் ஓரம்!
அதை வந்த பறவைகளே கொத்திப் போகும்
அவை கொஞ்சம் பாறையிலும் விழக் கண்டான்,
இதமான இடமின்றி அவையெல்லாமும்
இறகுமுளைக்கு முன்பே பட்டுப்போகும்!
வதைமுள்ளின் நெருக்கடியில் விதைகள் வீழ்ந்து,
வளராமல் கருகிவிடும் ஒன்று கேட்பீர்!
நல்லநிலத்தின் மீது விழுந்த வித்து,
நாள்தோறும் அறுவடைக்கும் நிற்கும் சொத்து”
***(இயேசு காவியம்)***

நற்செய்தியாளர்கள் (மாற்.4:1-9, மத்.13:1-9, லூக்.8:4-8) வசனங்களில் வரும் இக்கதையை, கவியரசு கண்ணதாசன் மேற்சொன்னவாறு அழகாக வர்ணித்திருக்கிறார். விழுந்த விதைகள் ஒன்றாயினும், விழுந்த இடங்கள் வெவ்வேறு! நான்கு இடங்களும் நால்வகை மக்களைக் குறிக்கின்றன.

உலகிலுள்ள மதங்கள் எல்லாம் நற்செய்தியையே தருகின்றன! அவற்றில் ஒருசில, போதனையோடு நின்று விடுகின்றன! வாழ்வில் அந்நற்செய்தியைக் கடைப்பிடிக்கத் தூண்டுவதில்லை. இவைகளை வீதியோரத்தில் விழுந்த விதைகளுக்கு ஒப்பிடலாம். பாறைகள் மத்தியில் விழுந்த விதைகளுக்கு ஒப்பானவர்கள் ‘கற்க கசடறக் கற்பவர்கள், கற்றபின் அத்துடன் நிற்பவர்கள். “அதற்குத்தக” நடக்காதவர்களை ஒப்பிடலாமா? இவர்கள் ஆழமான விசுவாசம் இல்லாதவர்கள். குறிப்பிட்ட செபங்களைப் பாடமாக்கி அவற்றை ஒப்புவித்தால் மட்டும் போதும் என நினைக்கும் எம்மவரில் சிலரைக் குறிக்கும்.

“பொருளில்லார்க்கு இவ்வுலகில்லை, அருளில்லார்க்கு அவ்வுலகில்லை!” என்ற முதுமொழிக்கிணங்க, பொருளாசை ஒன்றை மட்டுமே கருத்திற்கொண்டு, உலக நாட்டங்களில் கவலைகளை மூழ்கவிட்டு, எமக்கு இன்னொரு வாழ்வு, அதுவும் நித்திய வாழ்வு ஒன்று உண்டு என்பதை மறந்து வாழும் பேராசைப் பிரியர்களை, முட்கள் நடுவில் வீழ்ந்த விதைகளுக்கு இலக்கணம் கூறலாம். செல்வம் ஒருநாள் “செல்வோம்” என்றும், தரித்திரம் “தரித்திரோம்” என்றும் போய்விடும். பணமும், வறுமையும் நிரந்தரமானதல்ல “நீரே நிரந்தரம்” என்று இறைவார்த்தையைக் கற்பதோடு, கற்றலுடன் நிற்காது “அதற்குத்தக்க” வாழ்வை மாற்றியமைத்து இறை சித்தத்தை ஏற்று, மதித்து வாழ்பவர்களை நல்ல நிலத்தில் வீழ்ந்த விதைகளுக்கு உவமானமாகக் கூறலாம்.

இவ்வாறு சிறு சிறுகதைகள் மூலம் இறையரசின் விழுமியங்களை எடுத்துச்சொல்லி ஒரு நற்சமூகத்தை உருவாக்க முன்வந்த இயேசுவின் உவமைகளைப் படிப்பதோடு மட்டும் நின்றுவிடாது, அதில் ஆழமாகப் புதைந்துள்ள முத்துக்களைத் தேடிக் கண்டுபிடிக்க முன்வருவோம். ●

நன்றி - தூது

# அன்பின் கங்கை அன்னை தெரேசா

விறு விறுப்புத் தொடர் 42

சொல்லின் செல்வர் அமுது

## அன்னைக்குப் பத்திரிகைகள் பொன்னாடை

பல்வேறு நாடுகளிலிருந்து செய்தித்தாள் நிருபர்கள், நிழற்படக் கருவிகளைச் சுமந்து ஒலிபெருக்கிகளுடன் அன்னை திரேசாவைச் சுற்றி வளைத்து முற்றுகையிட்டனர். குறுக்கீடில்லாமல் கேட்ட கேள்விக் கணைகள் அன்னையைத் துளைத்தன.

நிருபர்: இந்தப் பரிசைப் பெறுவதற்குப் போகவேண்டும் என்று நீங்கள் எவ்வாறு தூண்டப்பட்டீர்கள்?

**அன்னை:** என்னைப் பொறுத்தவரையில் நான் இந்தப் பரிசுக்குத் தகுதியற்றவள். என் சொந்தக் கருத்தின்படி இது எனக்குத் தேவையற்றது. ஆனால் இந்தப் பரிசின் மூலம் நோர்வே வாழும் மக்கள், வறியவர்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்பதை ஏற்றுக்கொண்டார்கள். அந்த வறியவர்கள் சார்பாகவே நான் இங்கு வந்தேன்.

**இன்னொரு நிருபர்:** நீங்கள் யூகோஸ்லாவியாவில் பிறந்து, இந்தியாவில் வசித்து வருகிறீர்கள். உங்கள் சகோதரிகள் உலகமெங்கும் பணி செய்கின்றனர். அன்னை அவர்களே! இப்போது உங்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**அன்னை:** என்னிலே ஓடும் இரத்தம் அல்பானிய நாட்டுக்குச் சொந்தமானது. நான் அல்பானியப் பெண். எனக்குப் பிரசாவுரிமை இந்தியாவில் உண்டு. நான் ஒரு கத்தோலிக்கத் துறவி. எனது அழைத்தலின்படி நான் உலகம் முழுதுக்கும் சொந்தமானவள். என் இதயத்தின்படி இயேசுவின் இதயத்திற்கே உரிமையானவள்.

**கேள்வி:** உலகில் ஏழைகளும் அனாதைகளும் கோடிக்கணக்கில் இருக்கிறார்கள் அத்தனை பேருக்கும் உங்களால் உதவி செய்யமுடியுமா?

**அன்னை:** முடியாது என்பது மெய். எங்களுடைய பணி கடலில் கலக்கும் ஒரு துளி நீருக்கு ஒப்பானது. அந்தத் துளியும் கலக்காவிட்டால் கடலில் அந்த அளவு நீர் குறையத்தானே இருக்கும்!

**கேள்வி:** சீனாவில் ஒரு பழமொழி உண்டு. பசியாய் இருப்பவனுக்கு மீனைக் கொடுப்பதிலும் தூண்டிலைக் கொடுத்தால் அவன் பசியை நிரந்தரமாய்த் தீர்க்க வசதியாயிருக்கும். இதை நீங்கள் நினைத்துப் பார்க்கவில்லையா?

**அன்னை:** நினைத்துப் பார்த்தேன். எழுந்து நிற்கவே இயலாதவரிடம், தெருக் கோடியில் முடங்கிக் கிடப்பவரிடம் மரணத்தின் வாசலில் கால் வைத்து நிற்பவரிடம், நலிந்த தொழுநோயாளரிடம் தூண்டிலைக் கொடுக்க முடியுமா? அவர்கள் உடல்நலம் பெற்றபின் தூண்டிலைக் கொடுப்பது நல்லதே! அந்தச் சேவை செய்ய வேறு பலர் உள்ளனர்.

நோர்வே நாட்டு இந்தியத் தூதரகத்தில் அன்னை அவர்களுக்கு வரவேற்பு நிகழ்ச்சி ஒன்று சிறப்புடன் நடைபெற்றது. நோர்வே வெளிநாட்டமைச்சர், உயர் நீதிபதி – பாராளுமன்ற உறுப்பினர்கள் என ஆயிரம் பேர் இந்தியத் தூதுவரின் அழைப்பின்பேரில் சமூகமளித்திருந்தனர். அன்னை இப்பெரும் கூட்டத்தைச் சந்தித்து கருத்துரை வழங்கினார். அதன் பின்னும் செய்தியாளர் அன்னையை விட்டுவைக்கவில்லை. நூற்றுக்கணக்கான படப்பிடிப்பாளர், தொலைக்காட்சி நிறுவன நிருபர்கள், செய்தியாளர்கள் அன்னை எங்கு அடிஎடுத்து வைத்தாலும் அங்கே சுற்றி நின்றனர்.

அன்னை அவர்கள் எங்கு சென்றாலும் அங்கே அவர்கள் சீனாவில் குழலூதியின் பின்சென்ற எலிக்கூட்டங்கள் போலப் பின் தொடர்ந்தனர்.



"செய்தியாளர் என்னை முற்றுகையிடுகிறார்கள். நாடறிந்த புகழ் என்மீது திணிக்கப்படுகிறது. உலகச் செய்தி நிறுவனங்கள் எனக்குப் பொன்னாடை போர்க்கின்றன. இயேசுவின் அன்புக்காக அதனை நான் ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. செய்திகள் வாசிக்கும் மக்களை ஏழைகளையிட்டுச் சிந்திக்க வைக்கும். ஆகையால் இதற்காக நான் செய்யும் தியாகம் பெறுமதியானது. உண்மையில் ஒரு குட்டை நோயாளியைக் குளிக்க வார்ப்பதிலும் இது மிகவும் வில்லங்கமானது" என்றார் அன்னை. செய்திகள் உலக அந்தங்கள் எல்லாம் அலையடித்தன.

பல பத்திரிகைகள் அன்னை திரேசாவைப் பாராட்டி எழுத்துக்களில் மலர்மாலைகள் சூட்டியிருந்தன. பல நாடுகளில் நான்கு நாட்களாக அன்னையே திரையரங்கில் தொலைக் காட்சியளித்தார். கல்கத்தாவையும் ஏழைகளையும் தொழுநோயாளரையும் தேவைகளையும் அவற்றின் மூலம் அறிந்தவர் பலர். வறுமை என்ற சொல்லே நாக்கில் பிரண்டு அறியாத பலருக்கு அன்னையின் சேவைகள் காட்சிக் கொட்டகை நிகழ்ச்சிகள் (Circus) போல் ஆச்சரியமாயின.

எல்லோரும் - எல்லாச் செய்தித் தாள்களும் - அன்னையைப் பாராட்டினார்களா? இல்லை. அப்படி எதிர்பார்ப்பதும் தவறு. சிலர் எல்பா தீவில் கண்ணைப் பிடுங்கியபின் கைவிடப்பட்ட நெப்போலியனைப்போல உண்மையான இலக்குகளைத் தெரியாமல் தடவித் திரிந்ததும் தெரிந்தது. இந்தியாவில் வெளிவரும் பத்திரிகை ஒன்றில் கண்டனக்குரல் தொனித்தது. "உச்சமான நோபல் பரிசை மெச்ச இடமில்லை" Nothing noble about Nobel என்ற தலையங்கமிடப்பெற்றிருந்தது. அதில் பரிசளிக்கப்பட்ட நோக்கை கண்டித்து எழுதியிருந்தது. அன்னை திரேசா கிறிஸ்துவின் பணியாளர். வறியவர்களுக்கும், நோயாளருக்கும் பணி புரியும்போது அவருடைய நோக்கம் கிறிஸ்துவின் பக்கமாக மக்களைக் கவர்ந்துகொள்வதே, இயலுமானால் மதம் மாற்றுதலே! கிறிஸ்தவ பணியாளர் மேற்கு நாட்டிலுள்ள முதலாளித்துவ ஆட்சியின் கை ஆயுதங்கள். அவர்கள் கடவுளின் மாசில்லாத குரலொலிகள் அல்லர்" என்று எழுதியது.

கிறிஸ்தவ சமயத்தைச் சார்ந்த சிலரும் அன்னை திரேசாவில் குற்றம் சுமத்தினார்கள். அநீதியான சமூக அமைப்பை எதிர்த்து அன்னை திரேசா குரல் எழுப்பவில்லை. அவ்வாறான சமூக அமைப்பே வறுமைக்கான காரணமாகும். ஏழைகளுக்கு உணவு அளித்து வருவதிலும் அவர்களுக்குத் தொழில் செய்யும் ஆற்றலை வளர்த்து அந்தத்துறையில் அவர்கள் வளர்ச்சியடைய ஆவன செய்வது நீண்டகாலப் பயனைத் தரும் என்பது அவர்கள் கருத்து. இந்தக் கருத்தை அன்னை திரேசா ஏளனம் செய்யவில்லை.

*(கங்கை தொடர்ந்து பாயும்...)*

## உங்களுக்குத் தெரியுமா?

### மறையறிவுப் பகுதி இல.50

மறையறிவுப்போட்டி தனது அரைச்சதத்தை நிறைவு செய்கின்றது. வினாக்களுக்கு விடை தேடும் முயற்சி மன்னாவை மேலோட்டமாகச் செய்திகளை அறிந்துகொள்வதற்காக அல்லாமல் ஆழ்ந்து படிக்கும் பழக்கத்தையும் ஏற்படுத்தும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

இனி வினாக்களுக்கு வருவோம். இவ்வினாக்கள் மே மாத இதழிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளன.

1. "தேவதாய் பயணம் செய்துகொண்டிருக்கும் திருச்சபையின் அசைக்க முடியாத நம்பிக்கையாகவும், ஆறுதலாகவும் இக்காலத்திலும் விளங்குகின்றாள்" இந்த நம்பிக்கை தரும் வார்த்தைகளை நாம் எங்கு காண்கின்றோம்?
2. மறைபரப்புப் பணிக்கான தேசிய கத்தோலிக்க ஆணைக்குழுவின் 2007 - 2010 ஆண்டுகளுக்கான புதிய தலைவர் யார்?
3. கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் கத்தோலிக்க தமிழ் மக்களின் குரலாக ஒலிக்கின்ற பத்திரிகையின் பெயர் என்ன?
4. "2ம் அருளப்பர் சின்னப்பரின் கதை - தோற்றங்களும் நினைவுகளும்" என்ற நூலை எழுதியவர் யார்?
5. "நற்செய்தி உயிர்ப்பை விளக்குவதில்லை. மாறாக உயிர்ப்பே நற்செய்தியை விளக்குகிறது" இது யாருடைய வார்த்தைகள்?
6. தேவனை ஈன்று தேவதாயான மரியாள் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றாள். "சாட் மாதா" என அன்னை எங்கு அழைக்கப்படுகின்றாள்? இப்பெயரில் அன்னைக்கு ஆலயம் எங்குள்ளது?
7. ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவின் அறிவுத்திறன், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், திறமைகள், சிந்தனைகள், விழுமியங்கள், கலையார்வம், அரசியல், பொருளாதாரம் ஆகிய அனைத்தையும் கலாச்சாரம் என்கிறோம். இது யாருடைய கூற்று?
8. "இறைமக்கள் கொண்டுவந்த காணிக்கைகளை ஏற்றுக் கொள்ளும். நீர் செய்வதன் பொருளை உணர்ந்துகொள்ளும். நீர் நிகழ்த்துகின்ற திருநிகழ்ச்சிக்கு ஏற்ப புனிதராக இரும்" இவை எப்போது? யாருக்குக் கூறப்படும் அறிவுரை?
9. 1979ம் ஆண்டில் தனிமனிதருக்கான சிறப்புப் பரிசு அன்னை திரேசாவுக்கு வழங்கப்படுவதாக செய்திகள் வந்தபோது பல உலகப் பிரமுகர்கள் வாழ்த்துச் செய்திகள் அனுப்பினார்கள். அவர்களில் அந்நாள் இந்திய ஜனாதிபதி ரெட்டி அவர்களும் ஒருவர். அவர் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் இப்படியும் குறிப்பிட்டிருந்தார். எப்படி?
10. செபமாலைத் தாசர் சபைக்கு நானாட்டான் உமநகரியிலிருந்து ஒரு புதிய குரவர் திருநிலைப்படுத்தப்பட்டுள்ளார். அவர் யார்?

**மாணவர் மறையறிவுப் பகுதி இல. 48 இற்கான கேள்விகளுக்கு 32 பேர் விடை அளித்திருந்தனர்.**

### இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி:

### ஆ. றட்நாதன், ஏ-07 மடுக்கோவில், மடு

### பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்

1. அருட்சகோதரி. எம். பற்றீசியா, றம்பாவ, அனுராதபுரம்.
2. வெ. சங்கீதா, உயிர்த்தராசன் குளம், முருங்கன்.
3. யே. அமலதர்ஷினி, எமில்நகர், மன்னார்.
4. அ. சுமா மிராண்டா, தரம் 10, வங்காலை.
5. க. றகுநாதன், மன்/ இலுப்பைக்கடவை ம.வி.
6. எஸ். என். ஜெனோ சோசை, 5ம் வட்டாரம், வங்காலை.
7. அ. தர்சினி (அனிஸ்ரா), தரவன்கோட்டை, எழுத்தூர், மன்னார்.
8. ஆர். பற்றிமா நவறோஸ், டென்மார்க்.
9. "சிறகுடைந்த இளஞ்சிட்டு", தோட்டவெளி.
10. க. சிறோமி, இலுப்பைக்குளம், நேரியகுளம்.

# அழைப்பின் மேன்மை

திரு. கி. அருளப்பு, விடத்தல்தீவு

அழைக்கப்பட்டவர்களோ பலர், தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ சிலர். கடவுளைப் பற்றியது அறிவு, கடவுளைப் பற்றுவது அன்பு. அறிவியல் பேசுவது ஆய்விலே, ஆண்டவன் பேசுவது அனுபவத்திலே.

எந்த ஒரு சிறப்புக் கொடையையும் இறைவனிடம் இருந்து பெறுவதற்கு மனிதன் முதலில் தயாரிக்கப்பட வேண்டும். அத்தகைய ஒரு தயாரிப்பு இஸ்ராயேல் குலத்தில் பல நூற்றாண்டுகளாக இடம்பெற்றது. அவர்களைத் தேர்ந்தெடுக்கப்பட்ட குலமாக்கி, மெசியாவின் வருகைக்காகத் தன் இறைவாக்கினர்கள் மூலமாக இறைவன் தயாரித்துள்ளார் என்பதை வேதாகமத்திலே நாம் படிக்கின்றோம்.

நாம் வாழும் இக்காலப்பகுதியிலும் இயேசு விட்டுச்சென்ற வழியைப் பின்பற்றி, நாம் ஒவ்வொருவரும் தயாரிப்புக்காக அழைக்கப்பட்டிருக்கின்றோம். அதற்காக பல அருட்சாதனங்களைப் பெற்று, தியானங்கள், கருத்தமர்வுகள், வேதாகம வகுப்புக்கள் என்று பல தயாரிப்புக்கள் எமக்கு கொடுக்கப்பட்டு வருகின்றன. இறைவனின் பணியாளர்கள் என்ற உறவுக் கோணத்தில் நோக்கும் போது இவைகளுக்கு நாம் எப்படி செவிமடுக்கிறோம் என்பதைப் பொறுத்து அது அமைகிறது.

இறைவெளிப்பாட்டுக்கு நாம் கொடுக்கும் பதில்தான் எம் தயாரிப்பு. மனிதன் தன்னைத் தேடிவர வேண்டுமென்பதுதான் இறைவனின் திட்டம். மனிதத் தன்மை இறைத்தன்மையிலிருந்து ஊற்றெடுக்க வேண்டும். நாம் மட்டும் பேசுவதல்ல, இறைவன் பேசுவதையும் நாம் கேட்க வேண்டும். நாம் குறையுள்ளவர்கள். நிறைவுள்ளவரோடு நல்லுறவு ஏற்படுத்திக்கொள்ளுவதுதான் ஒரு சிறந்த தயாரிப்பு.

இறைவார்த்தையை உள்வாங்குவதற்கு நாம் எமது உள்ளங்களைத் திறக்காததன் மூலம் நாம் பெற வேண்டியவைகளைப் பெறாமல் அந்நிலையிலேயே தொடர்வது நாமே தேடிக்கொண்ட தண்டனைதானே?

இஸ்ராயேல் மக்கள் இவ் அழைப்பை ஏற்க மறுத்ததை நாம் பழைய ஏற்பாட்டிலே பார்க்கின்றோம். இங்கு நாம் ஒன்றைத் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும். எவ்வளவு தூரம் நம்மைத் திறந்து நாம் செயற்படுகின்றோம் என்பதைப் பொறுத்துத்தான் நமது விளைச்சல்கள் இருக்கும்.

உதாரணமாக:- முட்டைக்குள் உறங்கும் கோழிக்குஞ்சு வெளிவருவதற்கான வெப்பத்தைத் தாய்க் கோழி கொடுக்கின்றது. ஆனால் ஓட்டை உடைத்துக்கொண்டு வெளிவருவதற்கான ஆற்றலும், சக்தியும் அக்குஞ்சுகளுக்குத்தான் உண்டு. இதைப்போலவே எம்முடைய அருட்சாதனங்களும், தியானங்களும், கருத்தமர்வுகளும், வேதாகமக் கூட்டங்கள் யாவும் போதனைகளையும், ஆலோசனைகளையும் கொடுக்கலாம். ஆனால் இயேசுவை வாழ்வாக்குவதற்கு நாம்தான் நம்மைத் திறந்து தயாராக வேண்டும்.

நம்முடைய எண்ணங்கள் நம்மைவிட்டு விலகாவிட்டால் கடவுளுடைய எண்ணங்கள் நமக்குள் நுழைய முடியாது. நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கிறீர்கள். உப்பு உவர்ப்பற்றுப் போனால் எதைக்கொண்டு அதை உவர்ப்புள்ளதாக்க முடியும்? என்ற உவமை திருத்தூதர்களுக்கு மட்டுமல்ல, ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் இயேசு விடுக்கும் அழைப்பு. நீங்கள் உலகிற்கு ஒளி எனக் கூறுவதற்கேற்ப அந்த ஒளி மற்றவர்களுக்கும் எடுத்துக்காட்டாய் இருக்கட்டும். வார்த்தைகளை எடுத்துரைப்பது மட்டுமல்ல, அந்த வார்த்தைகளை வாழ்வாக்குவதிலும் நாம் எடுத்துக்காட்டாய் இருக்கவேண்டும். நாம் பெற்ற கிறிஸ்தவ வாழ்வை மரக்காலின்கீழ் வைத்த ஒளியாக நமக்குள்ளேயே முடக்கினோமென்றால் அதனால் யாருக்குப் பயன்?

நம்முடைய விருப்பத்தின்படி நாம் கொண்டாடுவது கடவுளல்ல. கடவுளுடைய விருப்பத்தின்படி அவருக்குகந்த மக்களாக இருக்க வேண்டும். ஊனக்கண்ணால் காணாததை விசுவாசக் கண்ணால் கண்டுணர்ந்து அடையாளங்கள் மூலம் வெளிப்படுத்தவேண்டும்.

கனானியப் பெண்ணின் விசுவாசம் இப்படியானதே. அவள் இயேசுவால் நன்கு தயாரிக்கப்பட்டாள். இறைவனின் அரசில் பணிபுரிய நம் ஒவ்வொருவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. நாமோ இந்த உலக மாயக் கவர்ச்சிகளிலேயே சுழல்கின்றோம். இறைவன் நம்மைப் பார்த்துக் கேட்கின்றார் "ஏன் வேலையின்றி சோம்பலாய், சோகமாய் நிற்கின்றாய்? 'அறுவடையோ அதிகம், பணியாட்களோ குறைவு' என்ற அழைப்பு உன் காதுகளை எட்டவில்லையா? நீயும் என் தோட்டத்துக்குள் வந்து பணிபுரி" என்று திருச்சபைத் தலைவர்கள், அதிகாரிகள் ஊடாக அழைப்பு விடுக்கின்றார் இயேசு.

ஒவ்வொருவரும் தமக்குரிய கடமைகளை நிறைவேற்றவே இவ் அழைப்பு விடுக்கப்படுகின்றது. ஒருவர் நல்ல கிறிஸ்தவராக எடுத்துக்காட்டான வாழ்வு வாழ்வாராகில் அதுவே அவர் திருச்சபையின் வளர்ச்சிக்கு ஆற்றும் சிறந்த மறைபரப்புப் பணியாகும். ஏனெனில் அவர் வாழ்வைக் கண்டு மற்றவர்கள் கிறிஸ்துவைப்பற்றி அறிகின்றனர். ஒரு மெழுகுதிரியிலிருந்து இன்னொரு மெழுகுதிரி வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்கிறது. கொடுப்பதால் குறையாத அத்திரியின் வெளிச்சம் பரவிக் கொண்டே இருக்கிறது. கிறிஸ்துவின் நற்செய்திக்கு இசைந்தபடி வாழவே இன்று இயேசு நம்மை அழைக்கின்றார். முதலில் அதற்குச் செவிமடுத்து நம்மை நாமே தயாரிப்போம். பின் அவரே நமக்கு வழிகாட்டுவார். "யாரை அவர் முன் குறித்து வைத்தாரோ அவர்களை அவர் அழைத்தார்."

# பொன்விழாக் காணும்

# வங்காலையின் வளமான முத்துக்கள்

தாழ்மையான சுபாவமும், பழகுவதற்கு இனியவரும், நகைச்சுவைப் பண்பு மிக்கவரும் பெற்றோரிடம் இருந்து முதுசமாகப் பெற்றுக்கொண்ட இறை விசுவாசம் மற்றும் இறைபக்தியில் ஆழமாக வேருன்றியவருமான


## அருட்தந்தை

## விக்ரர் இம்மானுவேல் குரூஸ் (அ.ம.தி)

புனித டிலாசால் துறவற சபைச் சகோதரரும், மன்னார் மண்ணின் தலைசிறந்த கல்விமான்களில் ஒருவரும் இச்சபையில் பல்வேறு அதியுயர் பதவிகளை வகித்தவருமான

## அருட்சகோதரர்

## பப்ரிஸ்ற் குரூஸ் (FSC)



வங்கம் தங்கும் வங்காலை எனப்படும் ஆழிசூழ் பெருநகர் குருத்துவ, துறவற அழைத்தல்களின் விளைநிலம் என்று அனைவராலும் அழைக்கப்படும் பெருநிலமாகும். இப்பெருநிலத்தில் உதித்த நல்முத்துக்களான குருக்கள், இருபால் துறவியர், குருத்துவக் கல்லூரி மாணவர்கள், துறவறசபை ஆரம்ப நிலையினர் என்று நூற்றுக்கு மேற்பட்டோர் அகிலமெங்கும் அரும்பணியாற்றி வருகின்றனர். ஒருசிலர் தமது இவ்வுலக பணியினை நிறைவுசெய்து, இறைபாதம் அமர்ந்திருந்து இன்பம் துய்த்திட விண்ணகம் சென்றுவிட்டனர்.

பணியாற்றும் குருத்துவ, துறவற செம்மல்களில் ஐவர் இவ்வருடம் தமது குருத்துவ, துறவற பொன்விழாவைக் கண்டுகளிப்பது பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு நிகழ்வாகும்.

இவர்கள் யாரெனில்: கண்டி தேசியக் குருத்துவக் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றிய பின்னர், மறைபரப்பாளராகத் தென்னாபிரிக்கா சென்று அங்கு மறைப்பணியாற்றிவரும் அருட்தந்தை அ. விக்ரர் குரூஸ் (அ.ம.தி) அடிகளார், மன்னார் மண்ணின் தலைசிறந்த கல்விமானும், புனித டிலாசால் சபைச் சகோதரரும், இச்சபையில் பல்வேறு உயர்பதவிகளை வகித்தவருமான அருட்சகோதரர் பப்ரிஸ்ற் குரூஸ், மற்றும் திருக்குடும்ப சபையைச் சார்ந்த அருட்சகோதரிகளான இயூஜின் சோசை, அலிஸ் சோசை, மரிய கிளாறா மிராண்டா ஆகியோராவர். (அருட்சகோதரிகளைப் பற்றிய விபரங்கள் அடுத்த மன்னாவில் வெளிவரும்)



அமலமரித் தியாகிகள் சபையின் தேடற்கரிய செல்வங்களில் ஒருவரான அருட்தந்தை அ. விக்ரர் குரூஸ் (அ.ம.தி) அடிகளார் ஆழ்ந்த விசுவாசமும், இறை பக்தியும் நிரம்பப்பெற்ற திரு. திருமதி. எவ். அந்தோனியப்பு குரூஸ் தம்பதியினரின் மழலைச் செல்வங்கள் அறுவரில் மூத்த தவப்புதல்வனாக 22.09.1930ல் பிறந்தார். இருவர் சிறுவயதிலேயே இறைவனடி சேர பெற்றோர் தமது நான்கு புத்திரரையும் சிறு வயது தொட்டே ஆழமான விசுவாசத்திலும், இறைபக்தியிலும், கல்வியறிவிலும், ஒழுக்க, பண்பாட்டு விழுமியங்களிலும் கண்ணும் கருத்துமாய் வளர்த்து வந்தனர். இத்தகையதொரு மேன்மைமிகு குடும்பத்திலிருந்து இருவர் இறையழைப்பைப் பெற்று குருக்களாகப் பணியாற்றுகின்றனர் என்றால் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஆம்; இவரது இளைய சகோதரர்களில் ஒருவரான அருட்தந்தை ஏ. சேவியர் குரூஸ் அடிகளார் மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த மூத்த குருக்களில் ஒருவர் என்பதும் கடந்த 25 ஆண்டுகளாக மறைமாவட்டக் குருமுதல்வராகப் பணியாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அருட்தந்தை விக்ரர் தனது சொந்தக் கிராமத்தில் ஆரம்பக்கல்வியை மேற்கொண்டிருந்த காலத்திலேயே பங்குத் தந்தையர்களாகப் பணியாற்றிய மறைபரப்பாளர்களான அமலமரித் தியாகிகள் சபையினரின் ஊக்குவிப்பினால் பீடப்பணியாளர், பாடகர் குழாம் போன்றவற்றில் இணைந்து துடிப்புடன் செயற்பட்டார். இவரது புத்திக்கூர்மையையும், அறிவுத்திறனையும், இயற்கையாய் அமைந்த ஆற்றல்களையும் கண்ட பெற்றோர் தொடர்ந்து கற்பதற்காக மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி, யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி ஆகியவற்றிற்கு இவரை அனுப்பிவைத்தனர்.

தனது சொந்த ஊரிலும், தான் கற்ற கல்லூரிகளிலும் மறைபோதக அமலமரித் தியாகிகள் சபையினரின் கண்காணிப்புக்கும், செல்வாக்கிற்கும் உட்பட்ட இவர் தானும் அவர்களைப் போன்று இறைபணியாற்ற எண்ணம் கொண்டார். எண்ணத்திற்குச் செயல் வடிவம் கொடுக்கப் பெற்றோரின் அனுமதியை வேண்டிநின்றார். இறையுறவில் ஊறித்திளைத்த பெற்றோரல்லவா? மறுப்பார்களா? அனுமதியும் கிடைத்தது.

தனது 19வது வயதில் யாழ். புனித மாட்டினார் ஆரம்பக் குருத்துவக் கல்லூரியில் இணைந்தார். 1949 – 1950களில் மொன்ரெடன் களுத்துறையில் அமைந்திருந்த அ.ம.தி.களின் நவத்துறவுப் பயிற்சியகத்தில் நவத்துறவுப் பயிற்சியை மேற்கொண்டார். தொடர்ந்து நுகேகொட, மற்றும் கண்டி தேசிய குருத்துவக் கல்லூரி ஆகியவற்றிற்கு அனுப்பிவைக்கப்பட்டு, உருவாக்கற் படிநிலைகளில் தடம்பதித்து 06.08.1957ல் இறைவனின் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

தனது சிறுவயது முதலே விளையாட்டுத் துறையிலும், கல்வித்துறையிலும், கலைத்துறையிலும், இசைத்துறையிலும் பற்பல சாதனைகளுக்குச் சொந்தக்காரரான இவரை உருவாக்கற் காலத்திலேயே இனம் கண்டுகொண்டனர் இவரது முதல்வர்கள். எனவேதான் தனது குருத்துவ வாழ்வின் ஆரம்பத்திலேயே கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியில் மெய்யியல் விரிவுரையாளராக நியமனம் பெற்றார். தொடர்ந்து உயர் கல்வியை மேற்கொள்வதற்காக உரோமாபுரி/ கிரகோரியார் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட அருட்தந்தை அவர்கள் அங்கு உலக மறைகளில் (World Religions) விசேடமாக இந்துமத மெய்யியலில் (Hindu Philosophy and Religion) கலாநிதிப் பட்டம் (Ph.D) பெற்றார். அதனைத் தொடர்ந்து இங்கிலாந்து லங்காஸ்ரர் பல்கலைக்கழகத்தில் “மதங்களில் மெய்யியல்” (Philosophy of Religion) இல் உயர்கல்வியை மேற்கொண்டு முனைவர் (M.A) பட்டம் பெற்றார்.

நாடு திரும்பியதும் மீண்டும் கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியில் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டதுடன் அமலமரித் தியாகிகளின் பயிற்சியத் தலைமைத்துவப் பணியிலும் நியமிக்கப்பட்டார்.

இத்தனைக்கும் மத்தியிலும் ஆரம்பத்திலிருந்தே இவரது இதயத்தின் ஆழத்தில் ஒலித்தகுரல் ஒன்று மறைபரப்புப் பணிக்கு இவருக்கு அழைப்பு விடுத்துக் கொண்டேயிருந்தது. இறுதியாக அதற்கான தருணமும் வந்தது. 1987 ஐப்பசியில் தென்னாபிரிக்காவுக்கு மறைபரப்பாளராக இறைவனால் அழைக்கப்பட்டார். அங்கு சென்று இவர் கடந்த 20 ஆண்டுகளாக பல்கலைக்கழக ஆன்மீக இயக்குனராகவும், பங்குத்தந்தையாகவும் பணியாற்றி வருகின்றார். தாழ்மையான சுபாவமும், பழகுவதற்கு இனியவரும், நகைச்சுவைப் பண்பு நிரம்பியவரும், பெற்றோரிடம் இருந்து முதுசமாகப் பெற்றுக்கொண்ட இறைவிசுவாசம் மற்றும் இறைபக்தியில் ஆழமாக வேரூன்றியவருமான அருட்தந்தையின் பணிகள் பரந்து, விரிந்து, வளம்பெறட்டும்.

வங்காலையைப் பூர்வீகமாகக் கொண்ட திரு. திருமதி. செபஸ்ரியான் குரூஸ் தம்பதியினர் உத்தியோகத்தின் நிமித்தம் மன்னார்த் தீவில் குடியேறி வாழ்ந்தனர். இவர்களது குலப் பெருமை விளங்க 01.06.1939ம் ஆண்டு பிறந்தவர்தான் மன்னார் மண்ணின் தலைசிறந்த கல்விமான்களில் ஒருவரும், அறிவுச்சுடரும், புத்திசாதுரியம் நிறைந்தவரும், இறை, மனித உறவுக்கு இலக்கணம் வகுப்பவரும், அனைத்து மக்கள் மத்தியிலும் இணைப்புப்பாலமாய் திகழ்பவரும், சிறந்த நாவன்மை மிக்கவரும், இசைவாணரும், டிலாசால் சபைச்சகோதரர்களின் விடிவெள்ளியுமான அருட்சகோதரர் பப்ரிஸ்ற் குரூஸ் அவர்கள்!

மன்னாரில் இருந்த புனித சூசையப்பர் சபைத் துறவிகளின் வழிகாட்டலில் - தனது இடைநிலைக்கல்வி, உயர்கல்வி ஆகியவற்றை அக்காலத்தில் புனித சவேரியார் ஆங்கிலக் கல்வி நிர்வாகத்தைக் கொண்டு நடாத்திய அருட்தந்தையர்கள், அவர்களைத் தொடர்ந்து கல்லூரியைப் பொறுப்பேற்ற புனித டிலாசால் சபைச் சகோதரர்களின் நெறிப்படுத்தலில் தொடர்ந்தார். இத்துறவற சகோதரர்களின் அன்பும், அரவணைப்பும், ஆளுமைப்பண்புகளும், ஒழுக்கநெறிகளும், இறைபக்தியும் இளைஞன் பப்ரிஸ்றை கவர்ந்திழுத்ததில் ஆச்சரியமில்லை. உயர்கல்வி, சிறந்த உத்தியோகம் போன்றவற்றிற்கான வாய்ப்புக்கள் ஒருபுறம், துறவற அழைப்பு மறுபுறம்! சிந்தித்தார்; செயற்பட்டார். தனது 17வது வயதில் துறவறப் பயிற்சியகம் நோக்கி அடியெடுத்து வைத்தார். 20ம் வயதில் முதல் அர்ப்பணத்தையும், 25ம் வயதில் நித்திய அர்ப்பணத்தையும் செய்தார்.

இவரது அறிவுத்திறனையும், ஆளுமை விருத்தியையும், இறைபக்தியையும், தனது சபையின் மட்டில் கொண்ட பற்றையும் இனம் கண்டுகொண்ட சபையின் தலைமைப் பீடத்தினர் பல்வேறு துறைகளிலும் இவர் உயர்கல்வியை மேற்கொள்ள ஆவன செய்தனர். அதன்படி 1965ல் கொழும்பில் இதழியலில் டிப்ளோமா பயிற்சி நெறியையும், 1969ல் பிரான்ஸ்/ பாரிசில் மறைக்கல்வியில் டிப்ளோமா பயிற்சி நெறியையும், 1973ல் பாகிஸ்தான் பஞ்சாப் பல்கலைக் கழகத்தில் ஆங்கிலம், பிரான்சிய மொழி, ஜேர்மன் மொழி ஆகியவற்றில் இளங்கலைமானிப் (B.A) பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். 1977ல் உரோமாபுரியில் லசாலியன் ஆன்மீகத்தில் (Lasalian) விசேட பயிற்சியை மேற்கொண்டார். 1989ல் பெங்களூரில் இறையியலில் மூன்று மாதப் பயிற்சியை மேற்கொண்டார். 1991ல் கொழும்பில் (I.S.F.A) மறைக்கல்வியில் முதுகலைமாணி (M.A) பட்டத்தையும் இறுதியாக 1993ல் பிலிப்பைன்ஸ் மணிலாவில் கல்வியியலில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். இத்துடன் இவரது கல்வி முடிவடைந்துவிடவில்லை. “ஒரு ஆசியர் என்பவர் தொடர்ந்து கற்றுக்கொண்டிருக்கும் மாணவன்” என்பதற்கு இலக்கணம் வகுத்துக் கொண்டிருப்பவர் இவர். இவரது, தேடல்கள், அறிவுநூல்களை வெளிக்கொணர்வதில் தொடர்ந்துகொண்டே செல்கின்றன.

இத்தனை பட்டங்களுக்கும் சொந்தக்காரரான இவர் தடம்பதித்த பணித்தளங்களோ பற்பல. பாகிஸ்தானிலுள்ள வைசலாபாத் மறைக்கல்விப் பயிற்சி நிலையத்தின் இயக்குனராக 8 ஆண்டுகளும், தமது சபையின் பிராந்திய முதல்வராக 6 ஆண்டுகளும் பாகிஸ்தானில் பணியாற்றினார். மூன்று தடவைகள் இவர் பாகிஸ்தான், இந்தியா டிலாசால் சகோதரர்களின் மாகாண முதல்வராகவும் (Provincial), இரண்டு தடவைகள் இலங்கை துறவறசபை முதல்வர்கள் பேரவையின் தலைவராகவும் (C.M.R.S - President of the Council of Major Religious Superiors) இருந்து சிறப்பாகப் பணியாற்றினார். 1994ல் கொழும்பில் லசாலியன் அக்கடமியின் இயக்குனராக 7 ஆண்டுகள் பணிபுரிந்தார். 1999ல் சன்வோ (SUNFO) எனப்படும் இலங்கை ஐக்கிய நாடுகள் சபை நட்புறவுச் சங்கத்தை இவர் ஏற்படுத்தி அதன் தலைவராக இருந்து செயலாற்றிவருகின்றார். 2005ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16ம் திகதி உலக சமாதானத்திற்கான அனைத்துலக அமைப்பு “சமாதானத்தின் தூதுவர்” (Ambassador for Peace) என்ற விருதை வழங்கி இவரைக் கௌரவித்தது.

இத்தகைய சிறப்புப் பட்டங்களுக்கும், உயர் பதவிகளுக்கும் சொந்தக்காரரான அருட்சகோதரர் பப்ரிஸ்ற் அவர்கள் பணிவுடன், சரளமாகப் பழகும் பண்பு கொண்டவர், பாரதியின் பாடலைப்போல் “யார்க்கும் எளியனாய், யார்க்கும் வலியனாய், யார்க்கும் அன்பனாய், யார்க்கும் இனியனாய்” திகழ்கின்றார் என்றால் அது மிகையாகாது. இவர் ஆசாரம் தவறாத கத்தோலிக்க துறவியாக விளங்கினாலும் கற்றவர், கல்லாதவர், செல்வந்தர், ஏழைகள், பெரியோர், சிறுவர்கள், பல மட்டத்து மக்கள் அனைவரும் இவரை ஓர் இனிய நண்பராகவே கருதிப் பழகுகின்றனர். பல்லாண்டுகள் வெளிநாடுகளில் பணியாற்றியமை, பன்னாட்டுக் கலாச்சாரங்களில் கொண்ட பரிச்சயம், பன்மொழிப்புலமை, கல்வித்துறையில் பெற்ற உயர் பட்டங்கள், பல நாடுகளைப் பார்த்த அனுபவம் “யாதும் ஊரே யாவரும் கேளீர்” என்ற சர்வதேசிய வியாபகச் சிந்தனை போன்றவையே இவரிடத்தில் காணப்படும் இத்தகைய அருங்குணங்களுக்கு வித்திட்டுள்ளன எனலாம். இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட மன்னார் மண்ணின் மைந்தர் தற்போது மன்னாரைத் தளமாகக்கொண்டு தனது பணிகளை ஆற்றி வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பெரியப்பா பதில்கள்



கேள்வி : சிலர் எதற்கெடுத்தாலும் பொய் சொல்லு-கிறார்களே... ஏன் பெரியப்பா? *- மதனா, வவுனியா*

பதில் : நம் அனைவருக்குள்ளும் கற்பனைத் திறன் இருக்கிறது என்பதற்கு ஒரே எடுத்துக்காட்டு பொய் சொல்லுவதுதான்.

கேள்வி : பெரியப்பா 'ஸ்கொலசிப்' (Sholorship) என்ற ஆங்கில வார்த்தைக்குரிய தமிழ் வார்த்தை என்ன? *- கருணாதாஸ், முருங்கன்.*

பதில் : ஊக்கத் தொகை

கேள்வி : பெரியப்பா, வெற்றி பெற்று உயரத் துடிக்கும் இன்றைய இளைஞர்களுக்கு நீங்கள் கூறக்கூடிய புத்திமதி? *- மரிய சீலன், மட்டக்களப்பு*

பதில் : உங்களுக்கு எந்தத் துறையில் ஆர்வம் அதிகமோ அந்தத் துறையில் வெற்றிபெறுவதைப் பற்றிக் கனவு காணுங்கள். அப்போதுதான் அது பலிக்கும். கணக்கில் மட்டமாக இருக்கும் ஒருவர் கணக்காளராக நினைக்கக் கூடாது.

கேள்வி : உங்களுக்கு யாரைக் கண்டால் பிடிக்காது? *- வதனா, அடம்பன்*

பதில் : உடல் எடையைவிட தலை எடை அதிகம் உள்ளவர்களை.

கேள்வி : கீழைத்தேச அறிஞர்களில் உங்களைக் கவர்ந்தவர் யார்? ஏன்? *- சாந்தன், மட்டக்களப்பு*

பதில் : விவேகானந்தர். விவேகானந்தரைப்போன்று ஊக்க மொழிகளை உதிர்ந்து தனிமனிதனை தட்டியெழுப்பியவர் வேறு யாரும் இல்லை என்பது எனது முடிவு. "இல்லை என்று ஒருபோதும் சொல்லாதே. என்னால் இயலாது என்று ஒரு நாளும் நினையாதே. நீ வரம்பில்லாத வலிமையுள்ளவன்" என்பார் விவேகானந்தர்.

கேள்வி : இன்று வைத்தியர்களிடம் போனால் 'அட்வைஸ்' (Advise) தாங்க முடியவில்லையே... நடங்க... ஓடுங்க... உடற்பயிற்சி செய்யுங்க... என்றுதானே சொல்றாங்க...? *- கலையன்பன், வங்காலை*

பதில்: ஆமாம். "ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்" என்ற ஔவையின் பாடலை இனி மாற்றிப் பாடவேண்டும். "ஓடாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்"

கேள்வி : இன்று இலங்கையிலும் சரி இந்தியாவிலும் சரி அரசியல் விழாக்கள் அதிகரித்துள்ளனவே... அதைப்பற்றி! *- நளாயினி, நாச்சிக்குடா*

பதில் : அரசியலில் விழாமல் இருக்க விழாக்களைப் பயன்படுத்துவது அரசியல் யுக்திகளில் ஒன்று.

கேள்வி : இன்றைய சினிமாக்கள் பற்றி பெரியப்பா என்ன நினைக்கிறீர்கள்? *- புண்ணியறாஜ், புங்கிடுதீவு.*

பதில்: சினிமாவைப் பொறுத்த மட்டில் நாம் அன்னப் பறவை போன்று செயலாற்ற வேண்டும். அதாவது பாலையும், நீரையும் பிரித்துப் பருக அறிய வேண்டும்.

என்னைப் பொறுத்தமட்டில் நான் எல்லாவற்றிலும் நன்மையைக் காண்பவன். (Optimistic). மனிதர்களிலும், சம்பவங்களிலும் நன்மையானவற்றைத்தான் முதலில் பார்த்துப் பாராட்டுவேன். அந்தவகையில் இன்றைய சினிமாக்கள் பல அருமையான கதை அம்சத்தைக் கொண்டிருக்கின்றன. யதார்த்தத்திற்கு ஒவ்வாத கட்டிப்புரளும் காதற் பாடல் காட்சிகள், உருட்டுக் கட்டையால் போட்டு அடி அடி என்று அடிக்கும் சண்டைக் காட்சிகளைத் தவிர்த்துவிட்டுப் பார்த்தால் மென்மையான மனித உணர்வுகளை, இதயத் துடிப்பை அதிகரிக்கும் வார்த்தை அனுபவங்களை இந்தச் சினிமாக்கள் சிறப்பாகவே வெளிக்கொணருகின்றன.



கேள்வி : பெரியப்பா, உலகத்திலே உடல் நோயா? உள நோயா அதிகம்? *கவிதா, காத்தான்குளம்*

பதில் : சமுதாயத்திலே உடல் நோய் எதுவுமே இல்லாத பல்லாயிரக்கணக்கான ஆண்களையும், பெண்களையும் நம்மால் சந்திக்க முடியும்! ஆனால், மனநோய் எதுவுமே இல்லாத ஆண்கள், பெண்கள் உலகில் ஒருகோடிக்கு ஒருவர் கூடத் தேறுவது அரிது.

பெரிய பெரிய மேதாவிகள், வேதாந்திகள், விஞ்ஞானிகள், பேராசிரியர்கள், பேரறிஞர்கள் என்று பேர் எடுத்தவர்களெல்லாங்கூட ஏதாவது ஒரு வகையான மனநோய் கொண்டவர்களாகவே இருக்கிறார்கள். அவர்களுடைய எழுத்துக்களையும், பேச்சுக்களையும் நாம் நுணுக்கமாக ஆராய்ந்து பார்த்தால், இந்த உண்மை நமக்குத் தெளிவாகப் புலப்படும். பெரும் புகழ் படைத்த பெரியவர்களின் நிலையே இப்படி என்றால், மற்றவர்களைப் பற்றிச் சொல்லவா வேண்டும்?

கேள்வி : பெரியப்பா, "இப்படித்தான் இனி வாழ வேண்டும்" என எடுக்கும் எல்லாத் தீர்மானமும் சிறிது நாட்களில் காணாமல் போய்விடுகிறதே...? *- முகிலன், புத்தளம்*

பதில் : இதைத்தான் வின்ஸ்ரன் என்ற அறிஞர் சொன்னார். "எப்படி வாழ்வது என்று கற்பதற்கு முன்பே நாம் இறந்துவிடுகின்றோம்" என்று.

கேள்வி : பேசிக்கொண்டிருக்கும்போது கொட்டாவி ஏன் வருகின்றது? *- முகர்ஜி, புத்தளம்*

பதில் : விஞ்ஞானபூர்வமான விளக்கங்கள் ஒருபுறமிருக்கட்டும். "எனக்குத் தூக்கம் வருகிறது, 'எழுந்து போ" என்று எதிரே இருப்பவர்க்கு சொல்லாமல் சொல்வதுதானே கொட்டாவி....!

# நீங்காத நினைவுகள் நீங்காத நினைவுகள்

## 10ம் ஆண்டு நினைவு



மலர்வு 12 - 01 - 1974 | உதிர்வு 31 - 08 - 1998

### ச. யூட் கெனிசியஸ் (மகே)
**(தலைமன்னார் கிராமம்)**

எம்முயிர் தம்பியே ஆசை மகனாரே
பரிதவிக்க விட்டாயே பத்து ஆண்டுகளாய்.
இருபத்து நான்கு வருடங்கள் வாழ்ந்த நீ
இருபது நிமிடத்தில் அமிழ்ந்தாயே
ஆழ்கடலில் முத்தெடுத்த நீ
இச்சிறு கிணற்றில் மூழ்கினாயே
தம்பி உன் அன்பு வார்த்தைகளையும்
அரவணைக்கும் கரத்தினையும் எப்படி மறப்போம்.
உன் நினைவுத் துயரில் தினமும் வாடுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
*அன்புத் தாய், சகோதரிகள், அத்தான், மனைவி, பிள்ளைகள், மருமக்கள், உற்றார், உறவினர்கள்.*

தகவல் :- திருமதி சுரேஷ் யூடி (அக்கா)

## 1ம் ஆண்டு நினைவு



மலர்வு 05 - 09 - 1973 | உதிர்வு 03 - 08 - 2006

### திருச்செல்வம் சிலுவைதாசன் லெம்பேட் (அன்ரனி)
**(7ம் வட்டாரம், வங்காலை)**

நினைவுகளால் எம்மோடு நிலைத்துள்ள எங்கள் அன்புள்ளமே! ஓராண்டு ஓடிமறைந்தாலும் வாடாத உம் புன்னகையும், குற்றமில்லாத பேச்சும் எம் நெஞ்சைவிட்டு அகல மறுக்கின்றது. அன்பிற்கும், பண்பிற்கும் இலக்கணமாய் வாழ்ந்து என்றும் அழியாத அழிக்க முடியாத பாசத்தைத் தந்து எம்மோடு இணைந்த எங்கள் அப்பாவே! உங்கள் அரவணைப்பு ஆதரவு இல்லாமல் நாம் தவிக்கின்றோம். ஏன் எம்மை விட்டு விலகினீர்கள். என்றும் உம் நினைவாகவே வாழ்கின்றோம். கண்ணீர் மல்கி இறைவனை வேண்டுகின்றோம்.

*பிரிவால் துயருறும் அன்பு மனைவி, பிள்ளைகள், பெற்றோர், சகோதர சகோதரிகள், உற்றார், உறவினர்.*

## 1ம் ஆண்டு நினைவு



மலர்வு 14 - 09 - 1930 | உதிர்வு 03 - 08 - 2006

### திரு. அருக்காஞ்சி சவேரியான்
**(செல்வரெட்டினம் - விடத்தல்தீவு)**

*"நீதிமான்களே என்றென்றும் வாழ்கின்றார்கள் அவர்களுக்குரிய கைமாறு ஆண்டவரிடம் உள்ளது" (சா.ஞா.5:15).*

அன்பிலும் பண்பிலும் பாசமாய் அனுதினம் வளர்த்த எம் ஐயாவே - ஆண்டவர் பாதமடைந்து ஓராண்டானாலும் அழிந்து மறையாது உம்மன்பு.

பரமன் உம்மை அழைத்ததால் பகலவன் பாதம் நீர் சென்றீர் - பரகதியில் இருக்கும் எம் ஐயாவே! பரமனிடம் எமக்காய் பரிந்துரையும்.
உம் ஆன்ம சாந்திக்காய் நாம் வேண்டுகின்றோம்.

*உமக்காய் மன்றாடும்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.*

## 1ம் ஆண்டு நினைவு



மலர்வு 11 - 08 - 1952 | உதிர்வு 15 - 08 - 2006

### திரு. சூ. குமாரகுலசிங்கம்
**(இளைப்பாறிய உதவி முகாமையாளர் மக்கள் வங்கி, மன்னார்)**

*"நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும் ஆண்டவரே"*

வாழ்வு நோக்கிய பயணத்தில்
தடைகள் பல வந்த போதும்
துணையாய் நின்ற எங்கள் அப்பாவே
எம்மை இடைநடுவே விட்டுவிட்டு
மறைந்து ஓராண்டு ஆகியபோதும்
உங்கள் நினைவுகள் கண்களை நனைக்கின்றன.
வேண்டுகின்றோம், ஆன்ம இளைப்பாற்றிக்காய்
வேண்டுங்கள் எம் வாழ்க்கை இனிதாய் மலர

இவரின் பிரிவால் துயருறும்
*மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.*

## 1ம் ஆண்டு நினைவு



மலர்வு 31 - 08 - 1948 | உதிர்வு 17 - 07 - 2006

### அகுஸ்தின் போல் குணசேகரம்
**(முருங்கன் பிட்டி)**

வருடமது கடந்தாலும்
மறையவில்லை உம் நினைவு
எம் நினைவுகளில் - நீர்
உறவாடுகின்றீர் - எந்நாளும்
உம் ஆன்ம சாந்திக்காய்
இறைஞ்சுகின்றோம் இறைபதம்தனை

இவரின் பிரிவால் துயருறும்:
*அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

## 3ம் ஆண்டு நினைவு



மலர்வு 20 - 01 - 1947 | உதிர்வு 18 - 07 - 2004

### ப. அந்தோனிப்பிள்ளை
**(பாலசிங்கம்)**

**ஓய்வுபெற்ற விவசாய போதனாசிரியர்**
**[முருங்கன் கமம்]**

*"உயிரோடு இருக்கும்போது என்னிடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார்"* (யோ.11:26)

நேசத்தின் ஒளியாய், எம் இதய அகல் விளக்காய் ஒளிவீசும் எம் தந்தையே! ஆண்டுகள் மூன்று ஆனாலும் மாறாது உங்கள் அன்பு. இனி உங்களை நாங்கள் காண்பதெப்போ? இறைவா, பாரினில் இவர் செய்த பிழைகளைப் பாசத்துடன் பொறுத்து பரகதியில் ஆன்மா சாந்தி பெற கண்ணீர் மாலையாகத் தருகின்றோம்.

பிரிவால் துயருறும்: *அன்பு . மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்*

## 4ம் ஆண்டு நினைவு



மலர்வு 07 - 11 - 1947 | உதிர்வு 14 - 07 - 2003

### திருச்செல்வம் கிருபாநிதி
**(முதலைகுத்தி, உயிலங்குளம்)**

அன்பெனும் மழை பொழிந்து அவனியிலே
எம்மை எல்லாம் அரவணைத்துக் காத்த
அன்புத் தெய்வமே, ஆண்டுகள்தான்
நான்கானாலும் உறங்கிடாத
உங்கள் நினைவுகளை மீட்டுகின்றோம்.
ஏக்கத்துடன் புழுதி படிந்த கனவுகளும்,
மீட்கப்படாத வயலின் நரம்புகளும்
எமதாகிப்போன பின்பும்
உங்கள் நினைவுகளை மட்டும் - என்றும்
எம் நெஞ்சில் நீங்காமல் வைத்திருக்கின்றோம்.
***உங்கள் ஆன்ம சாந்திக்கு இறைவனை இறைஞ்சுகின்றோம்.***

*இவரின் பிரிவால் துயருறும் : அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

## 31ம் நாள் நினைவு



மலர்வு 29 - 12 - 1971 | உதிர்வு 17 - 06 - 2007

### டேவிற் கொண்சால் சில்வா

கருணைக் கடவுளே! காரணமும், கணக்கும் கேட்க நாம் யார்? உம் பிச்சையின் இரக்கத்தில் வாழும் உம் பிள்ளைகள்!
கொண்சால்! மனிதர்கள் வாழப் பிறக்கிறார்கள், ஆனால் நீ எமக்காக சாகப்பிறந்தாய்! உன் வாழ்வில் நாம் கண்டது, சின்ன வயது முதல் உழைப்பும், களைப்பும், உதவியும், உற்சாகமும், மகிழ்ச்சியும். உன் செப வாழ்வே கடவுளுக்குப் பிரியமானது! நீ எழுந்து உன் இறுதிப் பயணத்தை கண்டிருந்தால் கடவுளின் பரிசைக் கண்டிருப்பாய். உன் பாவங்களை மன்னித்து, உன் மனைவி, பிள்ளைகள், உறவோடு அவரே இருப்பார். நித்திய சாந்திக்காய் உன்னை அவரிடம் ஒப்படைத்து மன்றாடுகின்றோம்.

*மனைவி சாரதா, பிள்ளைகள்-ஜீவா, சர்மிளா, அண்ணன் அருட்பணி. பெனோ, தங்கை, காந்தி, தம்பி சதீஸ்.*

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி - இல - 63

## 2 குறிப்பேடு - அதிகாரம் 25 - 36

உங்கள் விடைகளை 10. 08. 2007க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். சரியான விடையை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.

(பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | ✷ | | | | | 02 |
| | | | 03 | | | | 04 | | ✷ | |
| | 05 | | | | | | | | 06 | |
| | | | 07 | | | | | | | |
| | ✷ | ✷ | | | 08 | | | | | |
| | | 09 | | 10 | | | ✷ | 11 | | |
| | | | | | | 12 | | 13 | | |
| | 14 | | | | | | 15 | | | |
| | ✷ | 16 | | | | | | | | |
| | 17 | | | | | | | | | 18 |
| 19 | | | | | | | | ✷ | 20 | ✷ |

### இடமிருந்து வலம்

1. அத்துடன் நிலத்தின் எல்லா விளைச்சலிலும் பத்திலொரு பங்கைத் ......................க் கொடுத்தனர்.
5. அவரது இரண்டாம் ............ ஏற்றி எருசலேமுக்குக் கொண்டு வந்தனர்.
10. இம்மதில் ..................ச் சுற்றிலும் உயர்ந்திருக்கச் செய்தான்.
12. செதுக்கப்பட்ட .................த் தூள் தூளாக்கினர்.
14. உடனே, அவர்கள் அவனை அங்கிருந்து .......... முனைந்தனர்.
16. இல்லையெனில் ஆண்டவருக்கு எதிரான ........ நம்மேல் இருக்கும்.
17. ஏனெனில் நம் தந்தையர் துரோகம் செய்து நம் கடவுளாம் ஆண்டவரின் ........... தீயன செய்தனர்.
19. நீயும் மன............... உன் கல்லறைக்குச் செல்வாய்.

### மேலிருந்து கீழ்

1. பசியாலும் ...................... நீங்கள் மடியுமாறு எசேக்கியா உங்களை வழிதவறி நடத்துகிறான் அன்றோ?
2. ஒரே பலிப்பீடத்தில் வழிபடவும் .................. வேண்டும் என்று கட்டளையிட்டது இந்த எசேக்கியா அன்றோ?
4. ஆண்டவரின் இல்லப்பணியில் அவர்களை ....................த்தார்.
6. ஏனெனில் அவன் பலியிடுவதில் ................ கொண்டிருந்தான்.
7. ஏனெனில் உதவிபுரியவும், வீழ்ச்சியுறச் செய்யவும் கடவுளுக்கு .................. உண்டு. (இறுதி எழுத்து 1வது எழுத்துக்கு மேலே நிற்கிறது)
12. நீங்களோ அவர்களை வெஞ்.......... கொன்றீர்கள்.
13. ஆகாசு கடவுளின் இல்லத்திலிருந்த ..................களை ஒன்றுதிரட்டி நொறுக்கினான்.
15. அவன் யூதாவின் .................. நகர்களையும், காடுகளில் கோட்டைகளையும் கட்டினான். (2வது எழுத்து 1வது எழுத்துக்கு மேலே நிற்கிறது.

### வலமிருந்து இடம்

2. ஏனெனில் அவர்கள் தங்களையே .............. வைத்துக்கொள்வதில் மிகவும் கவனமாக இருந்தனர்.
3. குருக்கள், அவற்றின் குருதியைத் தங்கள் கைகளில் பிடித்துத் ............................ லேவியர் தோலுரித்தனர்.
4. அரசர் எசேக்கியாவின் வார்த்தைகளைக் கேட்ட மக்கள் மிகுந்த ..................... அடைந்தனர்.
7. அரண்மனையின் கருவூலங்களில் இருந்தவை ...........வற்றை கொள்ளையடித்தான்.
9. அவர்கள் தப்பமுடியாத அளவுக்கு ஆண்டவரது .................... அவர்கள்மேல் கனன்றெழுந்தது.
12. தங்கள் கைவினையான அனைத்துச் ............. எனக்குச் சினமூட்டினர்.
18. அவனது செயல் அவனுக்கும் இஸ்ரயேலர் எல்லாருக்கும் .........................யே தேடித்தந்தது.

### கீழிருந்து மேல்

8. உங்கள் தோள்களில் அது ஒரு ............ இருத்தலாகாது.
10. மக்களில் பலர் ஒன்றுதிரண்டு நாட்டின் எல்லா நீரூற்றுக்களையும் ....................... அடைத்துவிட்டனர். (3வது எழுத்து இறுதியாக நிற்கிறது)
11. உசியாவுக்குப் போர்த்.................. படை ஒன்று இருந்தது.
12. தன் தந்தையால் வார்க்கப்பட்ட ................... ஆமோன் பலிநிறைவேற்றி வழிபாடு செய்து வந்தான். (இறுதி இரு எழுத்துக்கள் மாறியுள்ளன)
18. உசியா வலிமை மிக்கவன் ஆனபோது தான் .................. அளவுக்கு ஆணவம் கொண்டான்.
19. லேவியர் சிலர் எழுத்தரும் ............ வாயிற் காப்பாளருமாகவும் இருந்தனர்.
20. அவன் பிறசெயல்கள், .........................கள், தொடக்க முதல் இறுதிவரை யூதா, இஸ்ரயேல் அரசர்களின் குறிப்பேட்டில் எழுதப்பட்டுள்ளன.

## மன்னா சந்தாதாரர்களே!

உங்கள் சந்தாக் காலம் முடிவடையும் மாதம் உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னாவின் உங்கள் முகவரிக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. அதைப்பார்த்து உங்கள் சந்தாவை உரிய காலத்தில் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

**மன்னா தனிப்பிரதிகளுக்கான ஆண்டுச்சந்தா**

உள்நாடு - இலங்கை ரூபா 400

வெளிநாடு - இலங்கை ரூபா 2000 (20 யூரோ)

## *நினைவுகளைப் பிரசுரிப்போர் கவனத்திற்கு*

இறந்துபோன உங்கள் அன்புக்கு உரியவர்களின் நினைவுகள், யூபிலி, மற்றும் பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றிற்கான கட்டணமாக ரூபா 2000 அறவிடப்படும். இவற்றைக் கலர் பக்கத்தில் பிரசுரிப்பதாக இருந்தால் ரூபா 4000 அறவிடப்படும்.

இந்த நினைவுகள் எந்த மாதத்தில் பிரசுரிக்கப்பட வேண்டும் என நீங்கள் விரும்புகின்றீர்களோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும்.

- மன்னா நிர்வாகம் -

## அனைத்துத் தொடர்புகளுக்கும்

The Editor,
MANNA
Pastoral Centre,
St. Sebestian's Street
Mannar, Sri Lanka.



பதிப்பாசிரியர்.
மன்னா
திருமறைப்பணி நிலையம்.
புனித செபஸ்ரியார் வீதி
மன்னார்.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 61ல்

**சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:**

**முதலாம் பரிசு:**
எஸ். மெறின் காஷனா,
தரம் - 10,
மன்/ புனித சவேரியார்
பெண்கள் தேசிய பாடசாலை, மன்னார்

***இரண்டாம் பரிசு:***
ஆ. ஆட்ஸன்,
ஏ - 7,
மடுக்கோவில், மடு.

***மூன்றாம் பரிசு:***
ம. ஜான்சனா,
திருக்குடும்ப சிறுவர் இல்லம்,
சில்லாலை.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 126 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 122 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.60ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. ஜே. யூட் புஸ்பாந்தன், 235, தாழ்வுபாடு வீதி, மன்னார்.
2. மோ. மேரி காமலிற்றா, 383, புனித லூசியா வீதி, பள்ளிமுனை.
3. கே. நிதர்சன், இலுப்பைக்குளம், நேரியகுளம்.
4. ஜே. மீரா ஜான்சி, சாந்திபுரம், மன்னார்.
5. ஏ. நிறோசினி, ஆண்டார் செட்டிவெளி, நானாட்டான்.
6. ஆர். யேசுராஜா, சின்னக்கரிசல், பேசாலை.
7. திருமதி. மெ. அ. லெம்பேட், வங்காலை - 02
8. க. யூட்தரன், பெரிய பண்டிவிரிச்சான், மடு.
9. லீ. டெய்சி, புனித செபஸ்தியார் கோவில் வீதி, பெற்றா, மன்னார்.
10. ஜெ. றேபனா, அந்தோனியார்புரம்.
11. அ. றோகினி, பெரியமுறிப்பு, முருங்கன்.
12. இ. றொன்சி, வேதசாட்சி கோவிலடி, தோட்டவெளி.
13. ஏம். நிரோஜன், பார்மேனி வீதி, கீரி, மன்னார்.
14. வே. சஞ்சீவ தனுசன், மன்/ புனித சவேரியார் ஆண்கள் தே. பா
15. சு. துஷாந்தினி, மதவுவைத்த குளம், வவுனியா.
16. கி. றிலைக்சன், பெரிய குஞ்சுக்குளம், முருங்கன்.
17. எஸ். ஜெஸ்மிலா, எழுத்தூர், மன்னார்.
18. ஞா. பிரதீபா, நேரியகுளம்.
19. அருட்சகோ. புவனா, திருச்சிலுவை கன்னியர்மடம், கற்கிடந்தகுளம்.
20. அ. அனோஜன், பறங்கிகமம், இலுப்பைக்கடவை, மன்னார்.
21. சூ. அருள்ராசா, தாழ்வுபாடு றோட், மன்னார்.
22. அ. சுபைஷன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
23. அ. கரோலின் கீர்த்திக்கா, 70.பேராலய வீதி, திருகோணமலை.
24. ரி. சன், பெரிய நொச்சிகுளம், இலுப்பைக்குளம், செட்டிகுளம்.
25. அ. றஞ்சித் யூஜின் பீரிஸ், முத்தரிப்புத்துறை.
26. சிறகுடைந்த இளம்சிட்டு, தோட்டவெளி.
27. ரி. அபிசன், தலைமன்னார் ஸ்டேசன், தலைமன்னார்.
28. லைசி பொன்சேகா, மன்னார்.
29. அ. யோகவதனி, வெளிக்குளம், வவுனியா.
30. ஞா. மெலோ, களிமோட்டை, முருங்கன்.
31. மோ. தக்ஷனா, 49, தட்டான்குளம், வவுனியா.
32. அ. ஜஸ்மின் சறோன், ஆவணம், நானாட்டான்.
33. எ. ஜெ. விஜானி தற்குரூஸ், தரவன்கோட்டை, மன்னார்.
34. அ. மரியதாஸ், கடற்கரைவீதி, யாழ்ப்பாணம்.
35. லோ. திவ்யா, பனங்கட்டுக்கொட்டு மேற்கு, மன்னார்.
36. வே. ஆனந்தசெல்வி, உருத்திரபுரம், கிளிநொச்சி.
37. திருமதி. பி.வி.சி. பேரின்பநாயகம், ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.
38. எஸ். மறிஸ்ரெலா, அரிப்பு, சிலாவத்துறை.
39. ஆர். பற்றிமா நவறோஸ், டென்மார்க்.
40. அன்ரன் எக்ஸ்பெற்றா, சுவிஸ்.
41. இ. மெர்சி குரூஸ், 7ம் வட்டாரம், வங்காலை.
42. தேவிகா பத்மராஜா, வயல்வீதி, பெற்றா, மன்னார்.
43. எஸ். மரியசேவியர், ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி, மன்னார்.
44. இ. சர்மிளா, 45, முகத்தான் குளம், செட்டிகுள்ம்.
45. ச. பிரான்சிஸ்கா, சின்னக்கரிசல், பேசாலை.
46. அ. சிந்துஜா, வேதசாட்சி கோவிலடி, தோட்டவெளி.
47. திருமதி. சுமதி விமலன் குலாஸ், ஆனாள் நகர், வங்காலை.
48. த. பிரிடா, பனங்கட்டுக்கொட்டு மேற்கு, மன்னார்.
49. ப. அன்ரனிற்றா, இலுப்பைக்குளம், நேரியகுளம், வவுனியா.
50. ஆ. பேள்சினி, வெளிக்குளம், வவுனியா.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி 61 இற்கான சரியான விடை

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தி [1] | ரு | ப் | ப | ணி | யை | ள் | க் | ங் | ட | இ [2] |
| ரு | வ் [3] | ல் | லா | ரை | ✷ | தை | த் | ன | ஞா [4] | ல் |
| வி | ரை | டா | மை | லி | வ் [5] | த் | மே [6] | ✷ | ன | ல |
| ழா | யி | ட் | ல் | லா | ல் | க [7] | ட் | ட | ம் | ம் |
| வை | லு | க | ச | ம் | யு | நூ [8] | ழை | ய | ளி | க |
| ✷ | ம் | த [9] | ச் | வ [10] | ழி | பா | டு | ✷ | வி [11] | க் |
| நீ [12] | ள | மா | ய் | ✷ | மா [13] | பே | ர | ன் | பு | ட |
| ளை | க | சை | மே [14] | டை | ட் | க | ரா | ச | ர | அ [15] |
| க | ங் | நே [16] | க | ✷ | சி | ள் | நா | ழ் | வா [17] | க |
| ல் | ழ | ரி | ம் | கு | க் | டு | ட் | நா [18] | ழ் | ன் |
| கா [19] | வ [20] | ல் | பு | ரி | ய | து | லா | இ [21] | ✷ | று |

**விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.62றக்கான முடிவுகளை 2007ம் ஆண்டு ஒகஸ்ட் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.**

## "கடவுளின் அன்பைப் பறைசாற்ற என்னுடன் வாருங்கள்" - 2ம் பக்கத் தொடர்ச்சி....

வரலாற்றில் கால்பதித்துச் சென்றவர்கள் இதற்குச் சான்று.

மேலாக, இலங்கையில் விசுவாசம் பரவ போர்த்துக்கேயரின் வருகை, செயல்பாடுகள் பெரிதும் உதவின. ஒல்லாந்தரின் வருகையால் அணையும் நிலையில் இருந்த கிறிஸ்தவ விசுவாசம் முத்திப்பேறுபெற்ற யோசப்வாஸ் அடிகளின் துணிவான வருகையின் மூலம் மீண்டும் ஒளிபெற்றது. எமது கலாச்சாரம், வாழ்க்கை முறை, கல்வி வளர்ச்சி போன்றவற்றில் நாம் பின்தங்கியிருந்ததால் வெளிநாட்டு மறைப்பரப்பாளர்களின் வருகையும், பணியும் இலங்கை நாட்டிற்கு அவசியமானது. இவர்கள் கல்வி, விளையாட்டு, சமூகப் பணிகள் என்று பல துறைகளிலும் தமது கவனத்தை செலுத்தி மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தினார்கள். ஆண்டவரின் அன்பை உணர்ந்தவர்கள் நம்பிக்கைகொண்டு திருமுழுக்குப் பெற்றனர். காலப்போக்கில் இவர்களது வருகையும், அரசியல் அழுத்தங்கள் காரணமாக மட்டுப்படுத்தப்பட உள்நாட்டில் எம்மவர்களின் அர்பணிப்பும் பங்களிப்பும் அவசியமானது.

3. இறையன்பை அனுபவிக்க, பறைசாற்ற, வாழ்ந்துகாட்ட எமக்கு சிறப்பான அழைப்பு எப்போதும் உண்டு.

வெளிநாடுகளிலிருந்து வந்த மறைப்பணியாளர்கள் இட்ட அடித்தளத்திலே இலங்கைத் திருச்சபை இன்று பெரிதும் வளர்ந்துள்ளது. ஒவ்வொரு வருடமும் சராசரி 35 புதிய குருக்களை இலங்கைத் திருச்சபை பிரசவிக்கிறது. பதினொரு மறைமாவட்டங்கள் இலங்கையில் இருந்தாலும் குருக்களின் பற்றாக்குறை தீர்ந்துவிட்டது என்று நாம் ஒருபோதும் சொல்ல முடியாது. தேவைகள் தொடரும். எனவே இன்று கிறிஸ்தவர் நாம் ஒவ்வொருவரும் சில கேள்விகளை எம்முள் எழுப்பி விடைகாண விளையவேண்டும். "நான் ஏன் என்னை குருவாகவோ, துறவறத்தவராகவோ அர்பணித்து இறைபணி செய்ய முடியாது?' என்னால் முடியும் என்று அழைப்பையும் பணிக்கான தேவைகளையும் அறிந்து, ஏற்றுத் தம்மை அர்ப்பணிக்கும் இளைஞர்களை இன்று நாம் காண்கிறோம். "என்னால் முடியாது. ஏனெனில் எனக்குக் குடும்ப பொறுப்புக்கள் ஏராளம். அல்லது எனக்குத் திருமணமாகிவிட்டது" என்று சொல்பவர்களும் உண்டு. இது நியாயமானதே. அப்படியானால் உங்கள் பங்கிலிருந்து குருக்கள் உருவாக நீங்கள் ஏன் உதவ முடியாது, எவ்வாறு?

அ. அழைத்தல்கள் பெருக, குருக்கள் பணி வளர நம்பிக்கையோடு செபிக்க வேண்டும். "அறுவடையோ மிகுதி. வேலையாட்களோ குறைவு. ஆகையால் தமது அறுவடைக்குத் தேவையான வேலையாட்களை அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள்" (லூக்.10:2).

ஆ. உங்கள் குடும்பத்தில் உங்கள் பிள்ளைகளுள் தேவ அழைத்தல் எனும் விதை விதைத்து அவர்களை ஊக்கப்படுத்தலாம். குடும்ப செப வேளையிலோ, பங்கில் உங்கள் பங்களிப்புகள் மூலமோ இந்தத் தேவைகளையும், எண்ணத்தையும் வளரவிடலாம்.

இ. உங்கள் பங்கில் ஏனைய பிள்ளைகளுக்கும் பங்கின் அமைப்பு மூலமாக தேவ அழைத்தல் பற்றிய ஆர்வத்தைக் கொடுக்கலாம்.

4. அழைத்தல் உணர்ந்து தன்னை ஆயத்தம் செய்யும் மாணவர்களுள் ஒருவருக்கோ, இருவருக்கோ ஆன்மீக ரீதியில் உங்கள் செபத்தின் மூலமாகவும், பொருளாதார ரீதியிலும் உதவலாம். சிறிய, பெரிய குருமட மாணவர்களுக்குப் பொறுப்பாக இருக்கும் குருவை அணுகி அவர் மூலமாக இந்தப் பங்களிப்பைச் செய்யலாம்.

இவ்வாறு அழைத்தல்கள் எமது மறைமாவட்டங்களிலும், பங்குகளிலும் உருவாக நாம் பல வகைகளில் எமது பங்களிப்பைச் செய்யலாம். இது எமது அழைப்பு, கடமை, பொறுப்பு. திருமுழுக்கின் மூலமாக நாம் அனைவரும் ஆண்டவரின் அன்பைப் பறைசாற்ற அழைக்கப்பட்டுள்ளோம். இப்பணிக்கு குருக்கள் துறவறத்தவர் மட்டுமல்ல ஆண்டவரைப் பின்தொடரும் ஒவ்வொருவரும் முன்வரவேண்டும். ●

# மன்னா

## மன்னா பதிப்பாசிரியர்
## அருட்பணியாளர் தமிழ் நேசன் அவர்களின்
## இரண்டு நூல்கள் இப்போது விற்பனையில்

இந்நூல்களை உள்நாட்டில் அனைத்து மறைமாவட்ட மறைக்கல்வி நிலையங்களிலும், கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்திற்கு முன்பாக உள்ள றண்ஸ்கா கிறிற்றிங்ஸ் மற்றும் சென் மைக்கல்ஸ் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். வெளிநாடுகளில் உள்ளவர்கள் மன்னா முகவர்கள் ஊடாகப் பெற்றுக் கொள்ளலாம்.

**தபால் மூலம் பெறவிரும்புவோர்**


உள்நாட்டிலுள்ளவர்கள் இரண்டு பிரதிகளையும் தபால் மூலம் பெறுவதாயின் தபால் கட்டணம் உட்பட ரூபா 420 வையும், வெளிநாட்டிலுள்ளவர்கள் ரூபா 450 வையும் மணி ஓடராகவோ அல்லது காசோலையாகவோ எமக்கனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகொள்ள :- 023 - 2222377/ 060 - 2233276/ 077 - 6943145

E-mail - nesanmn@yahoo.com




தண்ணீருக்குள் தாகமா?
ரூபா 100.00




வெளிச்சத்தின் வேர்கள்
ரூபா 200.00

## பிறந்தநாள் வாழ்த்து

1 வது




சாரோனா
(Sharona)

மன்னார் வங்காலையைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி வூப்பெற்றால் நகரை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. திருமதி. ஜோன்சன், ஜெபறஜனி தம்பதிகளின் செல்வப் புதல்வி **ஜோ. சாரோனா சோசை** தனது முதலாவது பிறந்தநாளை 30.07.2007 அன்று உற்றார், உறவினர், நண்பர்களோடு வெகு விமரிசையாகக் கொண்டாடினார்.

இவரை அன்பு அம்மா, அப்பா, ஜேர்மனியில் வசிக்கும் அப்பம்மா, அப்பப்பா, இலங்கையில் வசிக்கும் அம்மம்மா, பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், அக்கா, அண்ணா, மச்சி, மச்சான், தம்பிமார் மற்றும் உற்றார், உறவினர்கள், ஜேர்மனியில் வசிக்கும் மாமிமார் குடும்பத்தினர், மாமி, சித்தப்பா, தொட்டப்பா, தொட்டம்மா, பெரியம்மா குடும்பத்தினர், பிரான்சிலுள்ள பெரியம்மா குடும்பம் அனைவரும் சாரோனாவை சாரோனின் றோஜாவின் ஆசீர்வாதத்திலும், அன்னை மரியாளின் அரவணைப்பிலும் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

**தகவல் : அம்மம்மா, வங்காலை**

## 3 வது பிறந்தநாள் வாழ்த்து




### கமிலஸ் ஜென்ஸ்ரன் குரூஸ்

தலைமன்னார் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. திருமதி. சிங்கராயன் குரூஸ் ஞானசவுந்தரி லியோன் தம்பதிகளின் செல்வப் புதல்வன் சி. கமிலஸ் ஜென்ஸ்ரன் குரூஸ் தனது மூன்றாவது பிறந்த தினத்தை தலைமன்னாரில் உள்ள தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடினார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அக்காமார் தெகிவளையில் இருக்கும் அன்பு அக்கா அருட்சகோதரி அனற்றியோவ்பின் குரூஸ் (தி.கு) பேசாலையில் இருக்கும் தொட்டப்பா, தொட்டம்மா, அம்மம்மா, அம்மப்பா, மாமாமார், மச்சான்மார், மச்சாள்மார், சித்தி, சின்னையா, பெரியப்பா, பெரியம்மா, அண்ணன்மார்களான ஜெகன், ரேகன் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எல்லாம் வல்ல இறைவனின் அருள் பெற்று சகல கலைகளிலும் சிறந்தவனாய்ப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்தி நிற்கின்றார்கள்.


தகவல்: அன்பு அக்கா கொன்சி குரூஸ்,
தலைமன்னார் மேற்கு

## உறங்காத விழிகளோடு
## 31ம் நாள் நினைவு

| விண்ணில் | | மண்ணில் |
|---|---|---|
| 22 x 05 x 1946 |  | 28 x 06 x 2007 |

### திருமதி. வெற்றிவேல் ஞானரெத்தினம் (தங்கம்)

**விடத்தல்தீவு - மன்னார், (தோட்டவெளி - மன்னார்)**



அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் வாழ்ந்தவளே!
ஆதரவு மொழி பேசி அணைத்துக் காத்தவளே!
இன்பத்தின் எல்லைக்கு எமை இட்டுச் சென்றவளே!
ஏங்கியே தவிக்கின்றோம் ஏனம்மா எமைப்பிரிந்தீர்.
வையகத்தில் வள்ளலாய் வாழ்வினிலே வாழ்ந்தீரே.
வாடி வதங்கினோம் அம்மா நின்வதனம் காணாமல்.
கள்ளமில்லா உள்ளம் கொண்ட கண்ணியம் மிக்கவளே.
காலமெல்லாம் நாம் மறவோம் எம் ஞானத்தங்கத்தை.
ஊரும் உறவும், உற்றமும் சுற்றமும், உறைந்தே போயினர்
உம் பிரிவெண்ணி. உள்ளம் உடைந்து,
உவகையிழந்து தவிக்கின்றோம் உலகில் உங்கள் அன்பு தனையிழந்து
உங்கள் ஆன்மா சாந்தியடைய இருகரம் கூப்பி இறைவனை இறைஞ்சுகின்றோம்.

**என்றும் உங்கள் நினைவுச் சுமைகளுடன் - பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர், உற்றார், உறவினர்கள்.**


இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு. கொழும்பு 14. பிரின்ஸ் ஒப் வேல்ஸ் அவனியூ. 784/1 இலக்கத்திலுள்ள கிறேஸ் என்ரபிறைசஸ் அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது